
# கல்கி

KALKI
14.9.2003
ரூ.6.00

## நடிகைகளின் உண்மைக் கதை!



## ராமதாஸின் அரசியல் பள்ளி!



# ஒரு படம் ஒரே படம்!


அறிமுகம்
NAIDU HALL®
புடவைகள்
• எம்ராய்டரி புடவைகள்
• பனாரஸ் புடவைகள்
• ஹேண்ட்லூம் புடவைகள்
• பாலிகாட் புடவைகள்
• சூரத் புடவைகள்
• மில் குட்ஸ் புடவைகள்
• செட்டிநாடு காட்டன் புடவைகள்
• பெங்கால் காட்டன் புடவைகள்
• சில்க் காட்டன் புடவைகள்
• வெங்கட்கிரி காட்டன் புடவைகள்
• மங்கள்கிரி காட்டன் புடவைகள்
• கல்கத்தா காட்டன் புடவைகள்
• கத்வால் புடவைகள்
• கோரா சில்க் புடவைகள்
• சுங்கடி புடவைகள்
மற்றும்
கார்மென்ட்ஸ், ஆக்ஸசரீஸ்
காஸ்மெட்டிக்ஸ், பெர்ப்யூம்ஸ்,
பேஷன் ஜுவல்லரி,
பரிசு பொருட்கள் பல
நாயுடு ஹால்®
பெண்மையின் அழகிற்கு. 1939 முதல்
54 பாண்டி பஜார், தி.நகர், சென்னை-17. போன்: 28152151, 28151882 கிளைகள்: புரசைவாக்கம் & மைலாப்பூர்

● நடிகைகளின் உண்மைக் கதை - 4

● சிரித்து வாழ வேண்டும் - 92

**88** காதல் கோட்டை பாணியில் ஓர் இசை கலாட்டா!





# கல்கி

14.9.2003

ஏட்டிக்குப் போட்டி கல்லூரிப் பட்டிமன்றம் **52**

● அன்பின் ஊற்று - 34

● கிராமம் நகரம் மாநகரம் - 20

● தராசு - 58


● குறையொன்றுமில்லை - 60

# ராமதாஸின் அரசியல்

அரசியல் பள்ளி ஆரம்பித்திருக்கிறார் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ்.

திண்டிவனம் - பாண்டி சாலையில் உள்ள அவரது தைலாபுர பண்ணை வீட்டின் பக்கத்திலேயே இருக்கிறது இந்த அரசியல் பயிலரங்கம். எண்கோண வடிவில் தேவாலயத்தை ஒப்பிட்டு நோக்கும் வகையில் கோபுரத்துடன் நிர்வாக கட்டடம், மற்றும் வகுப்பறைக் கட்டடமும் தயாராகி விட்டன.

"பல வருடங்களாக இந்தச் சிந்தனை என்னுள் ஓடிட்டு இருக்கு. இப்பத்தான் செயல் வடிவம் கொடுக்க முடிந்தது. கிராமத்து வழியாகச் செல்லும் போதெல்லாம் ஒவ்வொரு கிராமத்தின் முகப்பிலும் வைக்கப்பட்டிருக்கும் ரசிகர் மன்றங்களின் போர்டுகள் என்னைப் பாதிக்கும். வாழ்க்கையின் முக்கியமான பருவத்தை இந்த இளைஞர்கள் தொலைத்துக் கொண்டிருக்கிறார்களோ என்ற எண்ணம் வாட்டி வதைக்கும். இதற்குக் காரணம், இன்றைய அரசியல்வாதிகளின் மீது அவர்கள் நம்பிக்கை இழந்ததுதான். அதனால் தான் சினிமாக்காரர்களின் பின்னால் செல்லத் துவங்கினார்கள்! எங்கள் கட்சியில் சுமார் பத்து லட்சம் இளைஞர்கள் இருக்கிறார்கள். குறைந்த பட்சம் இவர்களுக்கு 'அரசியல் என்றால் என்ன?' சுயநலக் கலப்பற்ற மக்கள் சேவையில் ஏன் ஈடுபட வேண்டும்' போன்றவற்றைச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் துவக்கப்பட்டது தான் இந்த அரசியல் பயிலரங்கம்'' என்கிறார் ராமதாஸ்.



பல்கலைக்கழக பேராசிரியர்களைக் கொண்ட குழு பாடத் திட்டங்களைத் தயாரித்திருக்கிறதாம். "தன்னை அறிதல், தன் மதிப்பீடு, ஆளுமைத் திறன் உருவாக்குதல், விழிப்புணர்வு திறமைகளை வளர்த்தல், கவனித்தல், பேச்சுத் திறன் மேம்படுத்தல், வாசித்தல், எழுதுதல், குழுவிவாதம், நேர்முக கலை, தலைமைப் பண்பு உருவாக்கம், மனித உறவுகள், ஆகிய தலைப்புகளில் பாடத் திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர மன இயல், பொருளாதாரம்,

தமிழக வரலாறு சமகால அரசியல் ஆகியவையும் சொல்லித் தரப்படுமாம். ஒவ்வொரு இளைஞருக்குள் ளும் இருக்கும் பொறியைத் தூண்டி விட்டு, அவனை ஜாதி, மத பேதமற்ற மக்கள் சேவைக்கு முழுதாக அர்ப்பணிக்கும் வகையில் பயிற்சி இருக்குமாம்.

"இந்தப் பாடத் திட்டங்களைப் பார்த்தால் மூன்று வருடம் படிக்க வேண்டும் போலிருக்கிறதே!"

"இந்தப் பயிலரங்கத்துக்குச் சுழற்சி முறையில் இளைஞர்கள் வருவார்கள். மாதத்திற்கொருமுறை சுமார் ஒரு வருட காலத்துக்கு வர வேண்டியிருக்கும். தினசரி இருநூறு இளைஞர்களுக்குப் பயிற்சி. காலை பத்து மணி முதல் மாலை ஆறு மணி வரை வகுப்பு நடக்கும். இந்தப் பயிலரங்கத்துக்கு வாரம் ஒரு நாள் தான் விடுமுறை."

"ஏதாவது அரசியல் கட்சியில் சேரும்போதே 'எனக்கு என்ன கிடைக்கும்?' என்று சுயநல அடிப் படையில் தானே இளைஞர்கள் சேர்கிறார்கள்; உங்கள் கட்சியிலும் அதே எண்ண ஓட்டத்தில்தானே இருப்பார்கள்! அவர்களை மாற்ற முடியுமா?"

"நிச்சயமாக மாற்ற முடியும். எங்கள் பயிலரங்கத் துக்கு வரும் இளைஞன், அவனே சொந்த காசில் இங்கு வரவேண்டும். மதியம் நாங்கள் நடத்தும் கேண்டீனில் காசு கொடுத்துச் சாப்பிட வேண்டும். எங்கள் பயிற்சியின் மூலம் லஞ்சம், ஊழல் என்றாலே கொதித்தெழுவார்கள் இளைஞர்கள். இளைஞர்களின் சக்தி என்பது அபரிமிதமான அசாத்திய சக்தி. இதை ஒருங்கிணைத்து பயன்படுத்தினால் வீட்டுக்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது. இந்த அடிப்படையில் சுயநலம் இல்லாத மக்கள் தொண்டனை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது" என்கிறார் ராமதாஸ்.

வகுப்புகள் விரைவில் துவங்கவிருக்கின்றன. இருபத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்தப் பள்ளியில் இடமில்லை. எந்த அரசியல் கட்சியிலும் இதுவரை இணைந்திராத இளைஞர்களுக்கு இங்கே முன்னுரிமை கொடுக்கப்படுமாம். கல்லூரி ஆசிரி யர்கள், சமூக ஆர்வலர்கள் பயிற்சி கொடுப்பார்கள். நேரம் கிடைக்கும்போது டாக்டர் ராமதாஸ் எடுக்கும் வகுப்புகளும் உண்டாம்.

— ப்ரியன்

படங்கள்: மீடியா ராமு

# பள்ளி!


# கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.


ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

# நடிகைகளின் உண்மைக் கதை!



"முதல் நாள் நள்ளிரவு
வ' 'த்து முடித்த களைப்
பே ஒப்பனையைக் கூட
கை ் தூங்கிப் போய்விடும்
நடிக உலகம், மறுநாள்
அதிகா மிகுந்ததாய் இருள்
சூழ்ந்து தொட கிறது" – இது அசோக
மித்ரனின் 'கை ல்கள்' நாவலில் வரும்
ஒரு வாக்கியம் ் தொழிலில் ஈடுபட்ட
தாகச் சமீபத் பரப்பாகி இருக்கும்
நடிகை வினி வாழ்வோடு நெருக்க
மாய்ப் பொரு ாகிற வாக்கியம். வினி
தாவின் கைது, க்கம் நிறைந்திருக்கும்
தமிழ் சினிமா கொஞ்சமாவது அதிர்ச்சி
அலைகளை யிருக்க வேண்டுமே!
ஊஹூம்! வ நெருப்பைக் கட்டிக்
கொண்டு கெ க் கிடப்பது பெரும்
பாலான நடி மட்டும் தான்! ஜம்ப
தாண்டு தமிழ் வில், இன்று தான் ஒரு
நடிகைக்கு இப் ர்ந்திருக்கிறதா என்று
ஆராய நேர்ந்தபோது, நமக்குக் கிடைத்த தகவல்கள்
வாசகர்களுக்குக் கொஞ்சம் அதிர்ச்சி அலைகளை
உண்டு பண்ணலாம்.

"கனவுத் தொழிற்சாலையின் உள்ளேயும் சரி, வெளியேயும் சரி, நடிகைகளின் மீதான 'பாலியல் சுரண்டல்' என்பது திட்டமிட்டு நிறைவேற்றப்படும் ஒன்று" என்கிறார் சினிமா உலகின் பட நிறுவன மேலாளர் ஒருவர்.

"நடிகைகள் அல்லது நடிக்க வாய்ப்புத் தேடி வரும் பெண்கள் வலியச் சென்று பாலியல் தொழிலில் ஈடுபடுவதில்லை. அவர்கள் நிர்பந்திக்கப்படுகிறார்கள். இந்தச் சோகமான உண்மைக் கதை அவர்கள் வாய்ப்புத் தேடுவதில் ஆரம்பிக்கிறது" என்று இன்றைய உண்மை நிலவரம் குறித்தும் சொல்ல ஆரம்பிக்கிறார் ஒரு சினிமா புள்ளி.

"தமிழ் சினிமாவில், கதாநாயகியாக நடிப்பது, அல்லது ஏதேனும் ஒரு வகையில் படத்தில் தோன்றுவது என்பதை நோக்கமாகக் கொண்டு சினிமா வாய்ப்புத் தேடுகிறவர்களை, மூன்று வகையாகப் பிரித்து விடலாம். ஆந்திரம், கேரளம் போன்ற அண்டை மாநிலங்களிலிருந்து சென்னையில் குடியேறி வாய்ப்புத் தேடுகிறவர்கள். இங்கிருந்து மும்பை சென்று குடியேறி, மும்பை மாடல் என்ற முத்திரையோடு, கோடம்பாக்கத்தில் வாய்ப்புத் தேடுகிறவர்கள். இந்த இரண்டு வகையிலும் சேராதவர்கள். இவர்கள் அனைவருமே பட நிறுவனங்களில் வாய்ப்புத் தேடுவதற்குத் தங்களின் தரமான புகைப்படங்களைத் தயார் செய்கிறார்கள்.

"இன்று புரொஃபெஷனல் புகைப்பட நிபுணரைக் கொண்டு போர்ட்ஃபோலியோ (புகைப்படத் தொகுப்பு) தயார் செய்ய, குறைந்தது ரூபாய் பத்தாயிரம் செலவாகும். விளைவு... சாதாரணக் குடும்பத்திலிருந்து

சினிமா வாய்ப்புத் தேடும் ஒரு பெண், தவறான நோக்கம் கொண்ட புகைப்படக்காரரோடு ஒத்துப் போக வேண்டிய கட்டாயம், தொடக்க நிலையிலேயே ஏற்பட்டு விடுகிறது. இலவசமாகப் புகைப்படம் எடுத்துத் தரும் இவர்கள், அதைப் படக் கம்பெனிகள் தோறும் டெலிவரி செய்யும் கொரியர் சர்வீஸ் வேலையையும் செய்வதில், பாலியல் சுரண்டல் அடிமட்டத்திலேயே தொடங்கி விடுகிறது. அடுத்து படக் கம்பெனியின் தயாரிப்பு நிர்வாகிகளின் (புரொடெக்ஷன் மேனேஜர்ஸ்) தயவு தேவைப்படுகிறது'' என்று பாலியல் சுரண்டலின் படிநிலைகளை அடுக்குகிறார் அவர்.

இருபது படங்களுக்கும் மேல் பணியாற்றி, தொடர்ந்து இணை இயக்குனராகவே வாழ்க்கையை ஓட்டி வரும் ஒரு தொப்பை இளைஞர், "பாலியல் சுரண்டல், பாலியல் தொழிலாக வேரோட உப்புமா படக் கம்பெனிகள்தான், காரணம்" என்று அதிர்ச்சி தரும் நிலவரத்தைப் புட்டுப்புட்டு வைக்கிறார்.

"ஊரிலிருந்து சொத்துகளைக் கொஞ்சம் விற்று பத்து, பதினைந்து லட்சத்தோடு படமெடுக்க வருகிறார்கள் பல திடீர்த் தயாரிப்பாளர்கள். பெரும்பாலும் புதிய முகங்களைக் கொண்டு படமெடுப்பதாகச் சொல்லும் இவர்களின் பலவீனங்களை, இங்குள்ள இடைத்தரகர்கள் புரிந்து கொண்டு விடுகிறார்கள். தவறான நோக்கமில்லாத திடீர்த் தயாரிப்பாளர்களையும் திசை திருப்பி விடுகிறார்கள். இதனால் புதிதாக ஒப்பந்தம் செய்யப்படும் அறிமுகக் கதாநாயகிக்குச் சம்பளத்தோடு, அவர் தரும் 'கம்பெனி'க்கும் சேர்த்தே சன்மானம் பேசப்படுகிறது.

"இப்படி பூஜை போடப்பட்டு, படக் கம்பெனி என்ற போர்வையில் பாலியல் சுரண்டல் முடிந்த பிறகு, காணாமல் போன நிறுவனங்களும், ஆயிரம் அடியோடு முடிந்து போன கலர்ஃபுல் கனவுகளும் ஏராளம்'' என்கிறார்.

"முதல் படம் தோல்வி அடைந்து விட்டாலோ, அல்லது மிகச் சுமாராக போனாலோ, அதில் அறிமுகமாகும் நடிகைகளின் நிலை மிகவும் பரிதாபகரமானது. நடிகை என்ற அந்தஸ்து கிடைத்தாலும், பஸ்ஸிலோ, ஆட்டோவிலோ சென்று படக் கம்பெனிகளில் வாய்ப்புத் தேட முடியாது. உடல் ஆரோக்கியத்தையும் சீராகக் காக்க வேண்டியுள்ளது. இதற்கிடையே நல்ல உணவு, உடை என்று இவர்களின் வாழ்க்கை முறை பட்டென்று மாறிப் போய்விடுவதில், பணத்தின் தேவையும் மாதாந்திர பட்ஜெட்டும் அதிகரித்து விடுகிறது! இவர்களின் இந்த நிலைமையைக் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருக்கும் இடைத்தரகர்கள், நடிகை என்ற புகழைப் பயன்படுத்தி வருவாய் ஈட்ட வருமாறு தூண்டில் வீசுகிறார்கள். இதை அவர்கள் சட்டத்திற்குப் புறம்பான பாலியல் வியாபாரம் என்று ஒரு போதும் சொல்வதில்லை. அவர்களின் பொறியில் சிக்கிக் கொண்டபின், வெளியேற முடியாத தவிப்பில், தேவைகளுக்காகத் திரும்பத்திரும்ப தவறுகளைச் செய்ய வேண்டிய நிலை வந்து விடுகிறது'' என்கிறார் சினிமா உலகைச் சார்ந்து இயங்கி வரும் என்.ஜி.ஓவின் தன்னார்வ ஊழியர் ஒருவர்.

அறிமுகமாகும் முதல் படம் வெற்றி பெற்று விட்டாலோ, அந்த நடிகையின் காட்டில் மழைதான். பொதுவாக ஒரு சராசரி தமிழ் சினிமாவுக்கு ஒரு நடிகை அதிக பட்சம் பதினைந்து முதல் இருபது தினங்கள் கால்ஷீட்



கொடுத்தால் போதுமானது. இதனால் ஒரே மாதத்தில் இரண்டு மூன்று படங்களுக்கு கால்ஷீட்டைப் பிரித்துக் கொடுத்து விடுவார்கள். முதல் நாள் இரவு மூன்று மணிவரை ஒரு படத்தில் நடித்துவிட்டு வீடு திரும்பினாலும், அடுத்த நாள் அதிகாலை வேறொரு படக் கம்பெனியின் படப்பிடிப்பிற்கு அடித்து எழுப்ப, 'நாம் ஏன் நடிகையானோம்' என்ற வெறுப்புக்குத் தள்ளப்படுகிறார்கள். 'நீ இப்போது சம்பாதித்தால்தான் முடியும்' என்று நடிகையின் பெற்றோரும், நெருக்கும் நிர்ப்பந்தம், வற்புறுத்தல். இந்த நேரத்தில் ஆறுதலாகப் பேசுகிற ஆணை முதலில் ஒரு கருணையாளனாகப் பார்க்கிறார்கள். தோளில் சாய்ந்து கொள்ள நல்ல துணை கிடைத்து விட்டதாக நினைத்து, இவனையே ஏன் வாழ்க்கைத் துணையாகவும் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று எண்ணும்போதுதான், நடிகைகளின் காதல் பிறக்கிறது. காதலிப்பவன் தன்னைவிட அந்தஸ்தில், வசதியில் உயர்ந்தவனாக இருந்து, அந்தக் காதல், வெளியே கசிந்து விட்டால், முடிந்தது கதை. காதலன் வீட்டாரின் மிரட்டலும், காதலன் முற்றாகத் துண்டித்துக் கொள்வதும், நடிகைகளின் தற்கொலை முயற்சியில் போய் முடிகிறது. பலசமயங்களில் தற்கொலைகளிலும் முடிந்து போகிறது'' என்கிறார்.

**த**னது துறையைச் சார்ந்த ஆணையே காதலித்துத் திருமணம் செய்து கொள்ளும் நடிகைகளின் கதையிலோ கண்ணீரின் விகிதம் இன்னும் அதிகம். திருமணத்திற்குப் பிறகு நடிப்பைத் துறந்து, முழுநேர இல்லத் தலைவியாக வாழ்க்கையைத் தொடங்கும் நடிகைகளின் தியாகமும், பெருந்தன்மையும் சில காலம் வரைதான் கணவனால் மதிக்கப்படுகிறது. ஒரு கட்டத்திற்குப் பிறகு பழைய வாழ்க்கையைக் கணவன் தொடரும்போது கொதித்தெழும் நடிகைகளும் நிறைய இழந்துவிட்ட பதைபதைப்போடு பழைய வாழ்க்கைக்குத் திரும்பி விட முடிவெடுக்கிறார்கள்.

''இதற்காகவே இருக்கிறது பரஸ்பர ஒப்புதலோடு பிரிந்து போகும் மணவிலக்கு முறை'' என்று உண்மையை உடைக்கிறார் கனவுத் தொழிற்சாலையில் புழங்கிவரும் பிரபல வழக்கறிஞர்.

**தொ**டக்கத்தில் வேதனைகளைத் தாங்கி, மார்க்கெட் வேல்யூ உள்ள நடிகைகளாக வளர்ந்து, கனவுக் கன்னிகளாக உயர்ந்து விடுகிற நடிகைகளுக்கு இந்தப் பிரச்னைகள் இல்லையா என்றால் அவர்களுக்கும் உண்டு என்கிறார் ஒரு முன்னாள் கனவுக் கன்னியின் சிகை அலங்கார நிபுணர். ''இவர்கள் இடைத்தரகர்களின் மிரட்டலில் இருந்து தப்பிக்க, ஒரு பெரிய ஹீரோவைச் சார்ந்து இருந்து விடுகிறார்கள். அவரோடு கிசுகிசுக்கப்படுவதைப் பற்றிய எந்தக் கவலையுமின்றி, சுரண்டல் ஒரு தரப்போடு முடிந்து விடுவதைச் சிறந்த பாதுகாப்பு உத்தியாகக் கருதுகிறார்கள்'' என்கிறார். இப்படி ஒவ்வொரு கட்டத்திலும் ஆணாதிக்க உலகம் நடிகைகள் மீது பாலியல் சுரண்டலைத் தொடர்ந்து நிறைவேற்றிவரும் நிலையில் நடிப்பிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு அவர்களின் நிலைமையை ஆராய்ந்தால் இன்னும் சோகமயம்தான். ''நடிகர்கள் தங்களது வருமானத்தைத் திருமண மண்டபம், கல்லூரி என்று திறமையாக முதலீடு செய்கிறார்கள். நடிகைகளின் வருமானமோ உறவினர்களால் பங்கு போடப்பட்டுவிடுகிறது. அவர்களுக்கு ஒரு அடுக்கு மாடிக் குடியிருப்பு எஞ்சினாலே அதிகம்.''

சொல்லவும் முடியாது, மெல்லவும் முடியாது வாழ்க்கையில் உழன்று வரும் நடிகைகளின் பட்டியல் நீள்கிறது. இதன் பின்னணியில் மறைந்திருக்கும் ஆண்களில் ஒருவர் கூட சட்டத்தின் பிடியில் சிக்கிக் கொள்ளாமல் தப்ப முடிகிறது.

— நட்சத்திரன்

---

''அந்த ஸ்டேஷன்ல மாமூல் கலெக்ஷன் கொடிகட்டிப் பறக்குதுன்னு நினைக்கிறேன்...''

''எப்படி அந்த முடிவுக்கு வந்தே?''

''கேடி வாழ்ந்தால் கோடி நன்மை'ன்னு போர்டு மாட்டியிருக்காங்க!''

- ஆர்.ஆர்.தமன்



பூங்கோதை. பி.சி.ஸ்ரீராமின் 'வானம் வசப்படும்' நாயகி. வயது:– கட்டாயம் இருபதுக்குள். பிறந்த ஊர்:– கொழும்பு. வளர்ந்தது:– தருமமிகு சென்னை. அப்பா:– சந்திரஹாசன். ஈழ அகதிகளுக்காகப் பாடுபடுவர். தாத்தா:– ஈழத்தமிழர்களின் தந்தையெனப் போற்றப்படும் செல்வநாயகம்.

''பெரிய பேக்ரவுண்ட் இருக்கு. சினிமாவுக்கு வந்துட்டீங்க?''

''ஏன் வரக் கூடாதா? நான் விளம்பரப் படங்களில் நடித்திருக்கிறேன். மாஸ் கம்யூனிகேஷன் படித்தபோது ப்ராஜக்ட் ஒர்க்காக ஈழ அகதிகளின் நிலை பற்றிக் குறும்படம் கூட எடுத்திருக்கிறேன். ஓர் ஆங்கிலப் பத்திரிகையில், பயிற்சி நிருபராகவும் வேலை செய்திருக்கிறேன். மாஸ் கம்யூனிகேஷன் முடித்த பிறகு, டெக்னிஷியனாக திரையுலகில் நுழைய வேண்டும் என்ற ஆர்வம் உள்ளத்தைப் பிடிக்க, பி.சியைப் பார்த்தேன். 'பார்க்கலாம்' என்று சொல்லி விட்டார். அப்புறம் திடீரென்று ஒரு நாள் அவரிடமிருந்து அழைப்பு. ''உனக்கொரு வாய்ப்பு!'' என்று சொன்னவுடன் உதவியாளராகத்தான் கூப்பிடுகிறார் என்று நினைத்தால், தலையில் ஆயிரம் கிலோ ஐஸ் கட்டிகளைக் கொட்டி விட்டார். கதாநாயகியாக நடிக்க வேண்டுமென்றார்... பி.சிக்கு இரண்டு சலாம் போடலாம். அழகான தமிழ்ப் பெயரை வாயில் நுழையா வண்ணம் மாற்ற வேண்டாம் என்று சொன்னது மட்டுமல்லாமல், படத்தில் அதே பெயரையே என் கேரக்டருக்கும் வைத்து விட்டார்.''

''படத்தின் கதை?''

''அதெல்லாம் சொல்லக் கூடாது. ஆனால் ஒற்றை வரியாகச் சொல்வதென்றால், காதல் மட்டுமே உலகமல்ல, சமூக வலையில் சிக்கியுள்ள உறவுகளால் பின்னப்பட்டவர்கள்தான் நாம். இந்த அடிப்படையில் கதையின் மெஸேஜ் இருக்கு.''

''திரைத் துறைக்குள் நுழையும் முன்னர் அந்தத் துறையைப் பற்றி உங்கள் கணிப்பு என்னவாக இருந்தது?''

''உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் பயமாகத்தான் இருந்தது. ஆனால் பி.சியின் யூனிட் கல கலா யூனிட் மட்டுமல்ல... கடமை, கண்ணியம், கட்டுபாடு கொண்ட யூனிட்.''

''கடைசியாகப் பார்த்த படம்?''

''காதல் கொண்டேன். இப்ப வரும் படங்களில் பொண்ணுங்களைத் துரத்தித் துரத்திக் காதலிப்பதையே காட்டிக் கொண்டிருக்கிறார்கள். வித்தியாசமா நிறைய பண்ணலாமே!''

''அதையெல்லாம் பார்த்துச் சந்தோஷப்பட வேண்டிய வயதில் எதற்காக இந்தச் சலிப்பு?''

''கல்லூரி நாட்களில் சமர்த்தாக காரில் போய் காரிலேயே வந்து விடுவேன். எத்திராஜில் படிக்கும் போதுதான் சரிகாஷா விவகாரம் நடந்தது. அதனால் கல்லூரி வாசலில் பாதுகாப்பு எப்போதும் இருக்கும். அந்தப் பயத்தில் பாய்ஸ் நடமாட்டமே இருக்காது.''

''இப்போதைய ஹீரோக்களுக்குக் கொஞ்சம் மார்க் போடுங்களேன்?''


''இப்பத்தான் முதல் படியில் இருக்கேன். ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு பாணி. யாரோடு யாரையும் கம்பேர் செய்ய முடியாது.''

''அழகுக்கு அழகூட்ட பியூட்டி பார்லருக்குப் போகும் வழக்கம் உண்டா?''

- சந்தேகம் எதற்கு? கேட்டு விட்டோம்.

''ஓ... போவேனே... ஆனால் முடியை ரெகுலேட் செய்யத்தான்

# ஒரு படம் ஒரே படம்!





போவேன். வேறெதற்கும் அல்ல! நான் நானாக இருக்க விரும்புகிறேன். எதற்கு எக்ஸ்ட்ரா வேலையெல்லாம்!"

முப்பது வயதிற்கு அப்புறம் எப்படியும் உடல் ஊதிவிடும் என்ற பொதுவான நியதியில் எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாமல் தின்று கட்டுகிறாராம் (தமிழ் நடிகர்கள் சார்பில், வாயைக் கட்டுமாறு எச்சரிக்கிறோம்.)

"இரண்டு மனம்... வேண்டும்... இறைவனிடம் கேட்டேன்" என்ற கணக்கில் பூங்கோதையின் மனம் திண்டாடிக் கொண்டிருக்கிறது. "இந்த ஒரு படம் தான். அதன் பின் மேல்படிப்புதான்" என்று ஒரு குரல் சொல்ல... அடுத்த வாய்ப்பு வரும்போது படிப்புக்காக ஒதுங்கிக் கொள்வீர்களா?" என்ற கேள்விக்கும் கட் அண்ட் ரைட்டாக 'ஆம்' என்ற பதிலில்லை.

கல்யாணம் முடிந்த தமிழ் சினிமா மாமிகளே கூட கோலிவுட் சபலத்துக்கு ஆளாகி, இரண்டாவது இன்னிங்ஸ் ஆட அமெரிக்காவிலிருந்து திரும்பி வரும் போது பூங்கோதை தடுமாற வேண்டாம். வானத்தை வசப்படுத்தி வளைய வரட்டும்!

– ஸ்ரீநி

அட்டை, படங்கள்: 'வானம் வசப்படும்' படத்திலிருந்து

## ஆஹா! ரூ.50,000 பரிசு! குவிஸ் போட்டி கூப்பன் - 6

1. ஐந்து ஆண்டுகளுக்கொருமுறை 1000 என்ற எண்ணிக்கையில் பொருள்களைப் படையல் செய்து வழிபடும் பாண்டிச்சேரியின் பிரசித்தி பெற்ற அம்மன் கோயில்..........................................
2. பிரெஞ்சு ஆட்சியை மையமாகக் கொண்ட 'வானம் வசப்படும்' நூலை எழுதியவர் ..........................................
3. பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் முதலில் கைப்பற்றிய கிராமம் ..........................................
(ஒரு க்ளூ - இதன் பெயர்தான் புதுச்சேரி என மருவியது என்பவர்கள் உண்டு.)
4. மணக்குள விநாயகரைப் போற்றி நான்மணிக்கடிகை எழுதியவர் கவிஞர்..............
5. ஒரு காலத்தில்..........................................யாக விளங்கி 1761ல் பிரிட்டிஷாரால் தரைமட்டமாக்கப்பட்ட இடத்தில்தான் இன்று கவர்னர் மாளிகையின் முன்னாலுள்ள பாண்டிச்சேரி பூங்கா உள்ளது.
6. பாண்டிச்சேரியில் பொது தபால் அலுவலகம் (G.P.O.) .............................. தெருவில் உள்ளது.

இவ்வளோதான் போட்டி. கடந்த ஐந்து வாரக் கூப்பன்களையும் பூர்த்தி செய்து விட்டீர்களா? இதோ ஆறாவது வாரக் கூப்பன். இந்தக் கேள்விகளுக்கும் பதில் எழுதி மொத்தக் கூப்பன்களையும் இம்மாதம் 20ம் தேதிக்குள் எங்களுக்கு அனுப்புங்கள்.

- அனைத்துக் கேள்விகளுக்கும் சரியான பதில்கள் எழுதிய பாண்டிச்சேரி வாசகர் ஒருவருக்கு ரூ.50,000 பரிசு வழங்கப்படும்.
- ஒருவருக்கு மேற்பட்ட வாசகர்கள் சரியான பதிலை எழுதியிருந்தால், இருக்கவே இருக்கிறது குலுக்கல் முறை.
- ஆறுதல் பரிசுகளாக வானதி பதிப்பகம் வழங்கும் ரூபாய் பத்தாயிரம் பெறுமான முள்ள புத்தகங்கள் நூறு பேருக்குக் காத்திருக்கின்றன.
- உறையின் மீது 'ஆஹா! ரூ. 50,000 (பாண்டி)' என்று கட்டாயம் குறிப்பிட வேண்டும்.
- போட்டி தொடர்பாக விசாரணைகள் அனுமதிக்கப்படமாட்டாது.
- இந்தப் போட்டி பாண்டிச்சேரி யூனியன் பிரதேச கல்கி வாசகர்களுக்கு மட்டுமே.
- ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

'போட்டி முடிஞ்சு போச்சே!' என்று அமைதியாக இருந்து விடாதீர்கள். அடுத்தடுத்து இருக்கிறது ஆச்சர்ய அசத்தல்கள். உங்களுக்கே தெரியாத, புதுவை பற்றிய செய்திகள் அடிக்கடி இடம் பெறும். ஏன் நீங்களும் உங்கள் ஊர்ச் செய்திகளை எங்களுக்கு அனுப்பலாமே? ஓ.கே.வா?

ஆஹா! ரூ.50,000 பரிசு!

# நூல் வெளியீட்டு விழா

**17.09.2003** பாரதீய வித்யா பவன், மயிலாப்பூர், சென்னை – 4

மாலை **6.00** மணி

**கவிஞர் வாலி**

எழுதிய

# புலனடக்கத்தின் பொன் விழா

ஜயேந்திரரின்
ஜன்ம சரிதம் –
ஜனனம் முதல்
ஜகத்குரு வரை...

**பங்கேற்பவர்கள்**

**ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீ விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்,**

இளையராஜா, பத்மா சுப்பிரமணியம், ஜெயகாந்தன், இல. கணேசன்,
எம்.எஸ். விசுவநாதன், முக்தா சீனிவாசன், ஔவை நடராஜன், டெல்லி கணேஷ்,
சுமதி, பி.என். பரசுராமன், கவிஞர் வாலி

நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குபவர்: எஸ்.வி. சேகர்

**விழா அரங்கில் மாலை 5.00 மணி முதல் 'அல்லயன்ஸ்' ஆன்மீக புத்தகங்கள் கண்காட்சி**

**சிறப்புத் தள்ளுபடி 20%**

(விழா அரங்கில் மட்டும்தான்)

**சோ**

எழுதிய

**மஹாபாரதம்**

**வால்மீகி ராமாயணம்**

பிற நூல்கள்

## பூஜ்யஸ்ரீ மஹா ஸ்வாமிகள் வரலாறு


**பி.ஸ்ரீ** எழுதிய **ஆழ்வார்கள் வரலாறு** மற்றும் பிற நூல்கள்

**பி.என். பரசுராமன்** எழுதிய நூல்கள்

மற்றும் ஏராளமான ஆன்மீகப் புத்தகங்கள்

**17.09.2003 அன்று விழா அரங்கில் கிடைக்கும்**

அனைவரும் வருக




## முதல்வரும் முள்வேலியும்!

ஸ்ரீநகரில் நடைபெற்ற மாநிலங்கள் கவுன்சில் கூட்டத்தில் தமிழக முதல்வர் நேரில் சென்று கலந்து கொள்ளவில்லை. ஆனால், அமைச்சர் பொன்னையன் முதல்வர் சார்பில் அவருடைய கருத்துகளை வாசித்திருக்கிறார். முதல்வர் ஜெயலலிதாவின் கருத்துப்படி அரசியல் சாசனத்தில் 356வது பிரிவை முற்றிலுமாக நீக்கிவிட வேண்டும். இப்பிரிவு துஷ்பிரயோகம் ஆகியிருக்கிறது; மீண்டும் துஷ்பிரயோகம் செய்யப்படலாம் என்பதால், அதை சாசனத்திலிருந்தே நீக்கிவிடவேண்டும் என்பது தமிழக முதல்வரின் அபிப்பிராயம்.


எந்தவொரு சட்டமோ சட்டப்பிரிவோ இயற்றப்படும்போது, மக்கள் நலனும் தேச நலனும் கருத்தில் கொண்டுதான் இயற்றப் படுகிறதேயொழிய, அது துஷ்பிரயோகமாகக் கூடும் என்கிற எண்ணத்துடன் இயற்றப்படுவதில்லை.

மக்கள் நலனையும் தேச நலனையும் கருதாத தலைமை / தலைவர்கள் அபரிமித பெரும்பான்மை பெற்று பொறுப்பேற்கும் போதுதான், அதிகார துஷ்பிரயோகத்தோடு சட்ட துஷ்பிரயோ கமும் நடைபெறுகிறது.

உதாரணத்துக்கு பொடா சட்டத்தை எடுத்துக் கொள்வோம்... அதனிடத்தில் முன்பு அமலில் இருந்த 'தடா' சட்டம் மிகவும்




கல்கி



2003 செப்டெம்பர் 14
சுபானு ஆவணி 28
மலர் : 62
இதழ் : 7

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.





துஷ்பிரயோகமாயிற்று என்பதால்தான் வாபஸ் பெறப்பட்டது. இன்று அதனிடத்தில் அமலாகியிருக்கும் பொடா, சில இடங்களில் மட்டும் அதேபோல் துஷ்பிரயோகம் ஆவதைக் காண்கிறோம். தமிழகத்தில், பொடாவின் கீழ் கைதான முக்கியப் புள்ளிகளின் பேரில் வழக்குப் பதிவு செய்யவே நீண்ட காலமாயிற்று. கடுமையான சட்டம் என்பதற்காக விசாரணையும் நீதியும், விரைந்து வழங்கப்பட்டுவிடவில்லை. உ.பியிலோ, ஒரு முதல்வர் (மாயாவதி) பொடாவைப் பயன் படுத்திச் சிலரைக் கைது செய்ய, அடுத்த முதல்வர் (முலாயம் சிங் யாதவ்) அந்த வழக்குகளை முதல் காரியமாக வாபஸ் பெறுகிறார்.

ஆனால், இதே பொடா சட்டம்தான் மும்பை குண்டு வெடிப்பில் ஈடுபட்ட சதிக்கும் பலைக் கண்டுபிடித்துச் சிலரைக் கைது செய்ய கைகொடுத்திருக்கிறது. துர்ச்சம்பவம் நடப்பதை, சட்டத்தால் தடுக்க இயலவில்லையே என்று கருணாநிதி போன்ற சிலர் வாதாடினாலும், பொடாவின் கீழ் செய்யப்பட்டுள்ள கைதுகள், பெரிய சதிவலையைக் கண்டுபிடிக்க உதவக் கூடும்.

சட்டம் என்பது, அதை உபயோகிப்பவருடைய தராதரத்தைப் பொறுத்தே நீதி வழங்கும் என்பதற்கு இதுவே சிறந்த உதாரணம்.

**356** வழங்கும் அதிகாரமும் இதே போன்றதுதான். ஒரு மாநில அரசைக் கலைக்க மத்திய அரசுக்கு அது உரிமை வழங்குகிறது. அற்ப காரணங்களையும், சான்றில்லாத குற்றச்சாட்டுகளையும் கூறி, மாநில அரசுகள் **356**இன் கீழ் முன்பு கலைக்கப்பட்டுள்ளன. ஆனால் இச்செயல் மக்கள் விரோதமானது என்பது மக்களால் உணரப்பட்டு, தேர்தலின்போது வாக்களிப்பில் அவர்கள் கருத்து பதிவு செய்யப்பட்டிருக்கிறது. டிஸ்மிஸ் செய்யப்பட்ட அரசு மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கிறது.

ஆகவே **356** எதற்காக ஏற்பட்டது என்பதைத் தலைவர்கள் மறந்தாலும் மக்கள் மறக்க மாட்டார்கள். இந்நிலையில், அப்பிரிவை முற்றிலும் நீக்கிவிட வேண்டும் என்ற




தமிழக முதல்வரின் கருத்து ஏற்புடையதாக இல்லை.

சில ஆண்டுகளுக்கு முன், இதே ஜெயலலிதாதான் கருணாநிதி ஆட்சியை நீக்க 356 பிரயோகிக்கப்படவேண்டும் என்று வாய்க்கு வாய் பேசி வந்தார். அப்போது அவருக்கு ஏற்புடையதாக இருந்த சட்டப் பிரிவு, இப்போது ஏன் ஜனநாயக விரோதமாகத் தோன்ற வேண்டும்!

தற்போது மாநிலங்கள் கவுன்சில், 356 தொடர்பாக சிபாரிசு செய்துள்ள திருத்தங்கள் நியாயமானவை. இந்தத் திருத்தங்கள் அந்தப் பிரிவு துஷ்பிரயோகமாவதைப் பெருமளவு தடுத்து நிறுத்தும். இந்த முக்கியமான முடிவின்படி 356ஐ மத்திய அரசு பயன்படுத்து வதற்கு முன், சம்பந்தப்பட்ட மாநில அரசுக்கு 'நோட்டீஸ்' அனுப்பி விளக்கம் பெற வேண்டும். விளக்கம் திருப்தி அளிக்காவிடில், என்ன காரணத்துக்காக 356 பிரயோகிக் கப்படுகிறது என்பதைத் தெளிவுபடுத்தி அறிக்கை அளிக்க வேண்டும். டிஸ்மிஸ்ஸை சிபாரிசு செய்யும் ஆளுநரின் அறிக்கை, வெற்றறிக்கையாக இல்லாமல் அர்த்தமுள்ள விளக்கங்கள் அடங்கியதாக இருக்க வேண்டும். – இந்த சிபாரிசுகள் அமலானால், ஒரு 'டிஸ்மிஸ்' நிகழ்வதற்கு முன்பு நாடுதழுவிய பொது விவாதத்துக்கும் அறிஞர்கள் கருத்துப் பதிவுக்கும் வழி பிறக்கும். அதிகார துஷ்பிரயோகமாகவோ அரசியல் உள் நோக்கத்தின் விளைவாகவோ, மாநில அரசை டிஸ்மிஸ் செய்வது மிகவும் கடினமாகி விடும்.

356 என்பது, மாநில அரசுகள் தான்தோன்றித்தனமாக நடந்து கொள்ளாமல் தடுக்கிற வேலி... வேலியில் முள் இருக்கிறது என்பதற்காக அதை நீக்கிவிட்டால் தேசியப் பயிருக்கு ஆபத்து விளையும். 'வேலியே பயிரை மேய்ந்தால் என்ன செய்வது?' என்று கவலைப்படும் தமிழக முதல்வர், வேலியே இல்லாதிருந்தால் என்ன ஆகும் என்பது பற்றியும் சிந்திப்பது நல்லது. ○

பானுமதி ராஜகோபாலன்

# ஒரு பாக்கெட்



ஒரு வாரம் கசக்கிப் பிழியும் கம்பெனி வேலைக்குப் பிறகு கிடைக்கும் ஒரே ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை லீவு. மனைவி ஊரிலில்லை. பிறந்தகம் போயிருக்கிறாள்.

சேர்த்து வைத்திருந்த அழுக்குத் துணிகளை மாங்கு மாங்கென்று தோய்த்து உலர்த்திவிட்டு, சமைக்க நேரமில்லாமல், ஹோட்டலில் போய்ச் சாப்பிட்டுவிட்டு வந்து படுத்ததுமே அடித்து போட்டது போல் தூக்கம்.

பத்து நிமிடம் தான் ஆகியிருக்கும். காலிங் பெல் ஒலி. எரிச்சலுடன், கலையாத தூக்கத்துடன் கதவைத் திறந்தால் – ஒரு பெண்.

பழைய சில்க் புடைவையை நேர்த்தியாக உடுத்தியிருந்தாள். காதில், கழுத்தில், கையில் பிளாஸ்டிக் அணிகலன்கள். தோளில் கனமாகத் தொங்கும் பேக்.

என்னைப் பார்த்ததும் பையிலிருந்து ஒரு பாக்கெட்டை எடுத்தாள்.

"சார்… புதுசா வந்திருக்கிற சோப் சார். மூணு பாக்கெட் வாங்கினா ஒண்ணு இலவசம். கூட ஒரு ஸ்பூனும் தரோம் சார்… அறிமுக ஆஃபர் சார்… விலை பத்து ரூபா தான். கடையிலே வாங்கினா பன்னிரண்டு ரூபா… வாங்கிப் பாருங்க சார்…"

மடமடவென பேசிக் கொண்டே போனாள். எனக்குத் தூக்கம் கலைந்த எரிச்சல்.

"அதெல்லாம் வேண்டாம். போம்மா…" என்று கடுகடுத்தபடி கதவை மூட முயன்றேன்.

"சார்….சார்….'' அந்தப் பெண்ணின் கண்களில் கெஞ்சல்.

"ஒரு பாக்கெட்டாவது வாங்கிக்குங்க சார்… எப்படி இருக்குன்னு டெஸ்ட் பண்ணிப் பாருங்க சார்… பத்து ரூபாதான் சார். மூணா வாங்கினா ஒண்ணு

இலவசம் சார்... அதோட ஸ்பூனும் கிடைக் கும்...''

''அதான் வேண்டாம்னு சொல்றேன் இல்லையா?'' என்றேன் சலிப்புடன்.

''அப்பளம், வடாம், வத்தல் கூட இருக்கு சார். பார்க்கறீங்களா? வீட்டிலே தயாரிச்சது- சுத்தமா இருக்கும்.'' அவள் அவசர அவ சரமாக பையிலிருந்து பாக்கெட்களை எடுத்தாள்.

''இதப் பாரும்மா... சும்மா சும்மா தொந் தரவு பண்ணாதே... வேண்டாம்னா போயேன்... ஏன் இப்படி உயிரை எடுக்கறே?''

என் குரலிலிருந்த உஷ்ணம் அவளைப் பாதித்திருக்க வேண்டும். சட்டென படி யிறங்கினாள். கண் கலங்கின மாதிரி கூட ஒரு பிரமை.

வந்து படுத்தேன். தூக்கம் வரவில்லை. தற்செயலாக மேசையைப் பார்க்க, நேற்று வந்த கடிதம்... அப்புறம் படித்துக் கொள்ள லாம் என்று மேசை மேல் போட்டது மறந்தே விட்டது. ஊரிலிருந்து தங்கை பவானி எழுதியிருந்தாள். படித்தேன்.

*'அன்புள்ள அண்ணாவுக்கு நமஸ்காரம். உபயக்ஷேமம். நீ அங்கு சௌக்கியமா? மன்னி ஊரிலிருந்து வந்து விட்டார்களா? இங்கு அப்பாவுக்கு ரொம்ப முடியவில்லை. இரவு பகலாக இருமுகிறார். மருந்து மாத் திரைக்கும் கேட்கவில்லை. அம்மா சமை யல் வேலைக்குப் போன இடத்தில் வழுக்கி விழுந்து காலில் நல்ல அடி. இப்போது தேவலை. நீ அனுப்புகிற ஆயிரம் ரூபாயில் குடும்பம் நடத்த கஷ்டமாக இருக்கிறது.*


*''நான் பிளஸ் - டூ முடித்து விட்டு வீட்டில் சும்மா உட்கார வேண்டாம் என்று ஒரு வேலையில் சேர்ந்திருக்கிறேன். ஒரு புது விதமான சோப் பாக்கெட். வீடு வீடா கப் போய் கான்வாஸ் செய்ய வேண்டும். சம்பளம் ஆயிரம் ரூபாய் தருகிறார்கள். தவிர விற்றுத் தருகிற பொருள்களுக்கு ஏற்ப கமிஷன் உண்டு. அதோடு வீட்டில் அம்மா தயார் செய்து தருகிற அப்பளம், வடாம், முறுக்கு இவற்றையும் கையோடு எடுத்துப் போய் வீடு வீடாக ஏறி இறங்கி விற்று வருகிறேன். வருமானம் சுமாராக வருகிறது. போகிற இடத்தில் பாதி பேர் பரிதாபப் பட்டு வாங்குகிறார்கள். பாதி பேர் பிச்சைக்காரியை விரட்டுவது போல் விரட்டுகிறார்கள். அந்தச் சமயம் மனத்துக்கு வேதனையாக இருந்தாலும், இப்படி தினம் வீடு வீடாகப் போய் கான்வாஸ் செய்வ தால் மாதம் பணம் கிடைக்கிறதே... குடும்பத்தில் சிரமம் குறைகிறது இல் லையா?''*

மேலே என்னால் படிக்க முடியவில்லை. தொண்டையில் துக்கம் பந்தாக அடைத்தது. சற்று முன் வந்த பெண்ணின் பரிதாப முகம் கண்முன் வந்தது. அந்தப் பெண்ணிடம் ஏதாவது வாங்கியிருக்கலாமோ?! ○

## அம்மாடி, அம்மா மடி!

கொச்சி விமான நிலையத்திலிருந்து துபாய்க்குப் புறப்படத் தயாராக நின்றது ஒரு விமானம். பயணிகள் பட்டியலில் இருந்த எண்ணிக் கையும் விமானத்தில் ஏறியிருந்த பயணிகள் எண்ணிக் கையும் ஒன்றாக இருக்கவே விமான உபசரணைப் பெண்மணி பைலட்டிடம் ''ஓகே'' கூறினார்.

விமானம் ரன் வேயில் ஓடி பறக்கத் தயாரானது. விமானம் புறப்படத் தொடங்கவும், ஒரு எட்டு வயதுச் சிறுமி கொஞ்சம் பயந்து போய் பக்கத்து சீட்டிலிருந்த தனது தாயின் மடியில் ஏறி அமர்ந்து கொண்டாள். அப்போது பார்த்து விமான உபசரணைப் பெண்ணுக்கு




மீண்டும் ஒருமுறை பயணிகளை எண்ணிப்பார்க்கத் தோன்றியது! அப்படி எண்ணிய போது, ஒரு பயணி யின் எண்ணிக்கை குறைந்தது. ஒரு சீட்டும் காலியாக இருந்தது!

பயந்து போய் பைலட்டிடம் விவரத்தைக் கூற, உடனே பைலட்டும் விமானத்தைத் திருப்பி மீண்டும் விமான நிலையத்திற்குக் கொண்டு வந்தார். விமானத்தில் ஏதோ பழுதாகி விட்டதாக விமான நிலையத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

விமானம் நின்றதும் தாயின் மடியிலிருந்த குழந்தை இறங்கி, தனது சீட்டில் அமர்ந்து விட்டது! இப்போது விமான உபசரணைப் பெண் மறுபடி பயணி களை எண்ணியபோது எண்ணிக்கைச் சரியாக இருந் தது! கொஞ்ச நேரம் சென்றுதான் காரணம் தெரிய வந்தது!

— திருவனந்தபுரம் எஸ்.எஸ்.மணி

# நா. முத்துக்குமார்

முதன் முதலில் நான் வசித்த வீட்டில் ஒரே ஓர் அறை தான் இருந்தது. இருளின் அடர்த்தியும்; செஞ்சிவப்பு ஒளியுமாய் அந்த வீட்டில் வசிக்க நான் பழகிவிட்டிருந்தேன். இன்று வரைக்கும் ஒருக்களித்துச் சுருண்டு படுக்கும் போதெல்லாம் என் ஞாபக நதிக்கரையில் அந்த வீடே அலையெழுப்புகிறது. அந்த வீட்டின் அறையில் கேட்ட கதைகளும், தாலாட்டுகளும் காற்றின் துகள்களில் மிதந்து மிதந்து நான் சோர்ந்து போகும் போதெல்லாம் ஆறுதல் சொல்கின்றன.

நான் சப்தம் பயின்ற நாதச்சுவர் அது. நான் மௌனம் பருகிய வெட்டவெளி அது. ஒரு சின்னஞ்சிறு மீனென நான் செதிலசைத்து சுவாசித்த செங்கடல் அது. மொழிகளுக்கும் மூலப் பொருளாய் இருந்த அந்த வீட்டின் அறையிலிருந்து வெளியே வந்தேன். நான் பிறந்து விட்ட செய்தி கேட்டு என்னைச் சுற்றி சந்தோஷ முகங்கள். என் தாயின் கருவறை எனக்குப் பரிச்சயப்படுத்திய வீட்டை இழந்த துக்கத்தில் அழத் தொடங்கினேன்.

வீடு மாறுதல் சோகமானது இல்லையா? சதையாலான வீட்டை விட்டு செங்கல்லால் ஆன வீட்டை என் குட்டிக் கண்களால் 'நோட்டமிட்டேன். காரை பெயர்ந்த சுவரிலிருந்து ஒரு செங்கல் என்னைப் பார்த்துச் சிரித்தது. அதன் சிவப்பு நிறம் எனக்கு என் உயிர் உருவான உதிரத்தை நினைவுப்படுத்தியது. அதனுடன் சிநேகமானேன். அன்று முதல் ஒன்று தோன்றியது. வீடுகளுக்கும் உயிர் உண்டு. வெறும் செங்கல்லும், சாந்தும், கூரையும், ஜன்னலும், கதவும் கொண்டு உருவானதல்ல வீடு. வீடுகள் கருவறையின் கதகதப்பை தருபவை. காட்டுக் குகைகளின் பாதுகாப்பை மீட்டுருவாக்கம் செய்பவை. வேட்டையாடி வீடு திரும்புகையில் குளிர்ந்த காற்றால் கேசம் வருடுபவை.

உலகம் அணுக்களால் ஆனது. நமது உடலின் தசையும், இரத்தமும், அணுக்களால் ஆனது. வீடும் அணுக்களால் ஆனது. அணுக்கள் என்கிற ஒரு புள்ளியில் உலகம், நாம், வீடு, அனைத்தும் ஒன்று சேர்கிறோம். நாம் வீட்டைத் தொடுகிற போது வீடும் நம்மைத் தொடுகிறது. அப்புறம் எப்படி வீடு உயிரற்ற ஜடப் பொருளாய் இருக்க முடியும்? வீடுகள் வாசங்களால் பேசுவதை நீங்கள் கேட்டதுண்டா? ஒவ்வொரு வீட்டிற்கும் தனித்தனி வாசம் உண்டு.

என் பால்ய காலத்தில் நான் குடிசை வீட்டில் வளர்ந்தேன். ஒன்றிரண்டு ஓட்டு வீடு, மாடி வீடு தவிர எங்கள் கிராமம் முழுக்க குடிசை வீடு தான். தென்னை ஓலை வேய்ந்த வீடு எங்களுடையது. ஊரில் நிறைய குடிசைகள் பனை ஓலையிலும், ஈச்சம் ஓலையிலும் கூட கட்டப்பட்டிருந்தன. எங்கள் வீட்டில் மொத்தம் மூன்று அறைகள். மண் தரையில் சாணி மெழுகியிருக்கும்.



7



மேலே ஒரு பென்னாம்பெரிய மூங்கில் மரம் உத்தரமாய் குடிசையை தாங்கிக் கொண்டிருக்கும். பென்சில், பலப்பம், மயிலிறகு, ஆக்கர் குத்தப்பட்ட பம்பரம், உண்டியலில் குச்சி விட்டு திருடிய சில்லறைகள் என என் புதையல்களை அந்த உத்தரத்தில் தான் ஒளித்து வைப்பேன். வீட்டின் முன்புறம் இரு பக்கமும் அகலமான திண்ணைகள். திண்ணைகள் நடுவே ஆணியால் கீறிய தாயக்கட்டங்களின் அச்சு. சமையலறையின் செம்மண் சுவர்; கொடி அடுப்புகளின் ஈர விறகுகளால் எழுந்த புகையால் கறுப்பாக மாறி இருக்கும். என் பின்னைக் கிறுக்கல்களுக்கு அந்தச் சுவர் ஒரு ராட்சஸ சிலேட்டாய் உதவி புரியும்.

என் தந்தை தமிழாசிரியர் என்பதால் அவரது சேகரிப்பில் கிட்டத்தட்ட நாற்பதாயிரம் புத்தகங்கள் எங்கள் வீட்டில் இருந்தன. எங்கள் வீடு முழுக்க புத்தகங்கள். புத்தக மூட்டைகளுக்கு நடுவில் தான் தூங்குவேன். காற்றடிக்கும் மாதங்களும், மழையடிக்கும் வேளைகளும் எங்களைப் பாதுகாப்பதைவிட புத்தகங்களைப் பாதுகாப்பதே கவலையாக இருந்த காலம் அது. தென்னை ஓலை நைந்து விட்டால் மீண்டும் புதியதாய் ஓலை மாற்றுவோம். பழைய ஓலைகளைக் கீழே தள்ளிவிட்ட பிறகு வீடு சதையிழந்த எலும்பாய் தென்னை மர வாரைகளுடனும், நார்களுடனும் என்னைப் பார்த்துக் கண்ணீர் விடும். சட்டென்று கூரையற்ற, பொருள்களற்ற வீட்டின் அறைகள் சின்னதாய்த் தோற்றமளிக்கும். பால்யத்தின் கண்களில் விசுவரூபமாய்த் தெரியும் வீடு, வயதின் பார்வையில் தன் உருவத்தை இழந்து சின்னதாக மாறுவது எந்தக் கணத்தில் நடக்கிறது என்று யாரால் சொல்ல முடியும்? அந்த வீட்டை நினைக்கும் போதெல்லாம் காய்ந்த தென்னை ஓலைகளும், புத்தக வாசமும், சாணி மெழுகிய தரை வாசமும் என்னுள் வந்து போகும்.


அப்புறம் நாங்கள் ஓட்டு வீட்டுக்கு மாறினோம். பெரிதாக வித்தியாசம் ஒன்றுமில்லை. இப்போது நான்கு அறைகள். சிவப்பு ஆமைகள் வரிசையாக நிற்பது மாதிரி ஓடுகள் கூரையில் அடுக்கப்பட்டிருக்கும். மழைக் காலங்களில் ஓடுகளின் இடைவெளியில் உள்ள சிறிய கால்வாயில் தண்ணீர் வழுக்கி வந்து கீழே விழுந்து மணலில் நீர் முட்டைகளை உருவாக்கும். எங்களின் காகித கப்பல் அந்த சிறிய வட்டத்தில் சிக்கிச் சுழன்று பின்பு தெருவோடு கலந்து தொலைந்து விடும். ஓட்டு வீடுகளில் கோடைக் காலம் கொடுமையானது. பகலின் வெப்பம் தாங்காமல் இரவெல்லாம் ஓடுகளிலிருந்து தரை நோக்கி தேள்கள், நட்டுவாக்காலி போன்ற பூச்சிகள் கீழே விழும். எத்தனையோ இரவுகள் என் போர்வையில் என்னுடன் தேள்களும் புரண்டு படுத்திருக்கின்றன. தேள் கடித்த தடயம் இல்லாதவர்கள் ஓட்டு வீடுகளில் வாழவில்லையென்று அர்த்தம். ஓட்டு வீடுகளின் வாசனை, தேள்களின் சுவாசத்திலிருந்து



# கிராமம் நகரம் மாநகரம்

எழுகிறது.

நான் பத்தாம் வகுப்பு படிக்கும் போது மாடி வீடு கட்ட ஆரம்பித்தோம். கிராமத்தில் வீடு கட்டுவது என்பது திருவிழா நடப்பது மாதிரி. கடைக்கால் தோண்ட பூஜை செய்து, சதுரம் சதுரமாகக் குழி வெட்டத் தொடங்கும் போதே குதூகலம் தொடங்கி விடும். வேகவதி ஆற்றங்கரையி லிருந்து மாட்டு வண்டியில் மண் எடுத்து வருவோம். வீட்டிற்கு முன்பு மண் கொட்டப்படும் போது குழந்தைகள் சூழ்ந்து



விடுவார்கள். வீடு கட்டக் குவிக்கும் மணலில் விளையாடும் குழந்தைகள் தான் உண்மையில் வீடுகளை ஆசீர்வதிக்கின்றனர்.

பின்பு செங்கல் வாங்க செங்கல் சூளைக்குக் கிளம்புவோம். பென்னாம் பெரியது; மிகப் பெரியது; பெரியது; சிறியது; மிகச் சிறியது; என அடுக்கப்பட்ட வரிசையில் செங்கற்கள் எரிந்து கொண்டிருக்கும். சவுக்குக் கட்டைகள் கீழ் அறைகளில் உஷ்ணம் சேர்க்க, ஆபத்தறியாமல் சூளைக்கு மேலே சிட்டுக்குருவிகள் அமர்ந்திருக்கும். அதிகாலைச் சூரியனை நோக்கி செங்கற் சூளை வெள்ளைக் கொடி காட்டுவது போல புகையை அனுப்பும்.

வீட்டின் கட்டடம் உயர உயர... ஊரே வந்து விசாரித்துப் போகும். இந்தப் பக்கம் வாசல்... அந்தப் பக்கம் ஜன்னல்... என்று பார்த்துப் பார்த்துக் கட்டி முடித்து கிரகபிரவேசம் நடக்கையில் வாசல் பூசணிகள் காககளை உதிர்த்து, கற்பூரத் தண்ணீரில் சிரிக்கும். மாடி வீடு அந்தஸ்தின் குறியீடு. வாசலில் கட்டப்படும் திருஷ்டி பொம்மையின் தனிமையைப் போல மாடி வீடுகள் பெயிண்ட் வாசனையுடன் கிராமத்தில் இருந்து அந்நியப்படுகின்றன.

மாநகரம் அடுக்குமாடி வீடுகளால் நிரம்பியிருக்கிறது. அடுக்கு மாடி குடியிருப்பின் வாசல்களில் பால் பாக்கெட்டுகளும், செய்தித்தாள்களும் சூரிய ஒளி வெப்பமாகும் வரை காத்திருக்கின்றன. ஜன்னல் கம்பிகள் தோறும் ஈரத்துணிகள் காற்றிலாடிக் கொண்டிருக்கின்றன. கதவில் பொருத்தியிருக்கும் லென்சுகளின் வழியே மாநகரம் வெளியே நிற்பவர்களின் முகங்களைப் பெரிதாக்கிப் பார்த்துச் சந்தேகத்துடன் உள்ளே அனுமதிக்கிறது. நாய்கள் குறித்த எச்சரிக்கையை சகமனிதனுக்கு மாநகரத்து வீடுகளின் பலகைகள் அறிவித்துக் கொண்டிருக்கின்றன.

சென்ற வாரம் சென்னையில் எங்கள் தெருவைக் கடந்து சென்ற போது ஒரு ஆச்சரியமும் அதிர்ச்சியும் காத்திருந்தது. தெருவின் கடைசியில் ஓர் அடுக்குமாடி கட்டடம் புதிதாகக் கட்டப்பட்டிருந்தது. அந்தத் தெருவின் வழியாகத் தான் தினமும் சென்று வருகிறேன். அந்த இடத்தில் அப்படி ஒரு கட்டடம் கட்டிக் கொண்டிருக்கும் சூழலையே கண்டதில்லை. திடீரென்று பிறந்த பெண் குழந்தை இளம் பெண்ணாக மாறுவதைப் போல ஒரே நாளில் எப்படி கட்டடம் முளைக்க முடியும்? கடந்த ஆறு மாதங்களாக ஓலைகளால் மூடப்பட்ட சாரங்களுக்கு உள்ளே அந்தக் கட்டடம் ரகசியமாக வளர்ந்திருக்கிறது. மாநகரத்து தெருக்கள் தோறும் மழைக் காளான்கள் மாதிரி கட்டடங்கள் திடீர் திடீரென்று முளைக்கின்றன. வீட்டைக் கட்டிப் பார் என்பார்கள். வீடு கட்டுவதைப் பார்க்கக் கூட அனுமதிக்காமல் மாநகரத்தில் வீடுகள் முளைத்துக் கொண்டிருக்கின்றன.

(சந்திக்கிறேன்)

படம்: ஸ்ரீஹரி

# -விருது நாயகி பேட்டி

ரோடார்ஸ் அமைப்பு அளிக்கும் 'கார்ட் ஷோர்க்' விருதை இந்த ஆண்டு பெற்றிருக்கிறார் 'ப்ரண்ட்லைன்' இதழின் சிறப்பு நிருபரான ஆஷா கிருஷ்ணகுமார். தமிழ்நாட்டில் நடைபெறும் சிறுநீரக வியாபாரம், மற்றும் தமிழ்நாட்டு நெசவாளர்களின் வாழ்க்கைத்தர வீழ்ச்சி, ஆகியவை குறித்த இவரது ஆழமான கட்டுரைகளுக்காகத்தான் இந்தப் பரிசு.

ஆஷாவின் கணவர் கிருஷ்ணகுமார், சென்னை ஐஐடி பேராசிரியர். ஆஷா கிருஷ்ணகுமாரைச் சந்தித்தோம்.

*இந்த விருதை நீங்கள் பெற்றதற்கு முக்கியக் காரணங்களாக எவற்றைக் குறிப்பிடுவீர்கள்?*

எந்தக் கட்டுரையாக இருந்தாலும் எல்லாக் கோணங்களிலும் அதை அணுக வேண்டும் என்பது நான் பணியாற்றும் இதழின் அடிப்படைக் கொள்கை. எந்தவித சமுதாயப் பிரச்னை தொடர்பான கட்டுரையாக இருந்தாலும், கட்டாயம் குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று, அனுபவ பூர்வமாக அதை உணர்ந்த பிறகே எழுதுவேன். கட்டுரைகளில் ஒரு போதும் என்னுடைய கருத்தைக் கூறமாட்டேன்.

*என்ன இருந்தாலும் ஒரு கட்டுரையை முடிக்கும் விதத்திலேயே கட்டுரையாளரின் அணுகுமுறை ஓரளவாவது தெரிந்து விடுமே?*

உண்மைதான். இதைத் தவிர்க்கத்தான் பெரும்பாலும் பிரச்னை தொடர்பாக நான் சந்தித்த ஒருவரின் கருத்தோடு கட்டுரையை முடித்துவிடுவேன். தவிர, பிரச்னைகளைப் பல்வேறு கோணங்களில் ஆழமாக ஆராய்ந்தால் போதும். தீர்வு என்பது சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்துதான் வர முடியுமே தவிர, பத்திரிகையாளரால் அதை அளித்துவிட முடியாது.

*நெசவாளிகளின் சீரழியும் வாழ்க்கை முறை குறித்து எழுதிய கட்டுரை தொடர்பாக உங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள்...*

காஞ்சிபுரத்துக்குச் சென்றபோது ஐந்து வயதுச் சிறுவர்கள் பலர், தினமும் சுமார் பன்னிரண்டு மணிநேரம் உழைப்பதைக் கண்டதும் அதிர்ச்சியாக இருந்தது. அதுவும் பள்ளத்துக்குள் இருக்கும் நெசவுப்பகுதியில் (Loom pit) இருந்து கொண்டு வேலை செய்ய வேண்டும். அத்தனை மணி நேரமும் வெளி உலகத்தைப் பற்றிய எந்த உணர்வுமே அவர்களுக்கு இருக்க முடியாது. அவர்களுடைய மாதச் சம்பளம் வெறும் நூறு ரூபாய். பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு வந்தவர்கள் அவர்கள். அவர்களுக்கு விடுமுறையே கிடையாது (தீபாவளிக்குச் சில நாட்கள் முன்புதான் விடுமுறை - வெளி நாட்டு ஆர்டர்கள் வந்தால் விடுமுறை ரத்து) என்பதை அறிந்ததும் மிகவும் அதிர்ச்சியாக இருந்தது.



• ஆஷா கிருஷ்ணகுமார்

*இதுபோன்ற ஆழமான கட்டுரைகள் எழுதுவதால் நிரந்தரப் பலன்கள் உண்டா?*

மேற்படி கட்டுரை வெளிவந்தபிறகு சுமார் நாற்பது சிறுவர்கள் அவர்களது பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். இரண்டு மாத இடைவெளிக்குப் பிறகு மீண்டும் அவர்களது நிலை பற்றி எழுதுவதற்காகச் சென்றபோது இந்த விவ

ரத்தை அறிய முடிந்தது. ஆனால் இவர்கள் மீண்டும் அதே வேலைக்குச் செல்லும்படி கட்டாயப்படுத்தப்பட மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? உள்ளூரில் உள்ள சிலர் இவர்களது கல்விக்கு உதவினார்கள். போன வருடம் ஐரோப்பியக் கமிஷனால் அளிக்கப்படும் "லோரென்ஸோ நடாலி" பரிசு எனக்குக் கிடைத்திருந்தது. பரிசுத் தொகையில் ஒரு பகுதியை இப்படி விடுவிக்கப்பட்ட சில சிறுவர்களின் கல்வி முன்னேற்றத்துக்காகச் செலவிட்டேன்.

*சமூகப் பிரச்னைகளை எழுதிய ஆரம்பக்கட்டத்தில் உங்கள் உணர்வுகள் எப்படி இருந்தன?*

தொடக்கத்தில் பொருளாதாரக் கட்டுரைகளை எழுதி வந்த நான், பிறகு சமூக உணர்வு கொண்ட பிரச்னைகளில் ஆர்வம் செலுத்தத் தொடங்கினேன். கீழ்த் தட்டு மக்களின் அவல நிலையை நான் அப்போது அறிந்திருக்கவில்லை. வேலூரில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலை ஒன்றிற்குச் சென்றிருந்தேன். அங்கே சிறுவர் சிறுமிகள் அமைதியாக உட்கார்ந்து கொண்டு தீக்குச்சிகளைப் பெட்டியில் அடுக்கிக் கொண்டிருந்தார்கள். பேசவில்லை என்றாலும், அவர்கள் நடு நடுவே எல்லாத் திசைகளிலும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் மூன்று குழந்தைகள் மட்டும், தங்கள் முகவாய், கழுத்தின் கீழ்ப் பகுதியைத் தொடும் வகையில், ஒரே மாதிரி போஸில் வெகு நேரம் உட்கார்ந்திருந்தார்கள். அருகில் சென்று பார்த்த பிறகுதான் விஷயம் புரிந்தது. வேலை செய்யும் போது அவர்கள் பேசிவிட்டார்களாம். அதற்காகக் கழுத்துப் பகுதியில் ஒரு தீப்பெட்டியை வைத்துக் கொண்டு, அது கீழே விழாமல் பேலன்ஸ் செய்தபடிதான் அவர்கள் அன்று முழுவதும் தங்களது வேலையைத் தொடர வேண்டும், என்ற தண்டனையை விதித்திருந்தார் முதலாளி.

*சமூகக் கட்டுரைகளே என்றாலும்*

> **“ கழுத்துப் பகுதியில் ஒரு தீப்பெட்டியை வைத்துக் கொண்டு, அது விழாமல் பேலன்ஸ் செய்தபடிதான் அன்று முழுவதும் வேலையைத் தொடர வேண்டும். ”**

அவர் அந்த மூலிகைக் கலவையைக் கலக்கியதாகச் செய்தி வந்தது. அந்தத் தண்டின் ஒரு முனைமீது மெழுகு அடைக்கப்பட்டிருந்தது. பாத்திரத்தில் வெப்பம் அதிகமானபோது மெழுகு உருகி, அதன் உள்ளே நிரப்பப்பட்டிருந்த பெட்ரோல் தானாக அந்தக் கலவையில் கலந்துவிட்டது. பள்ளிக்கூடங்களில் சின்னச் சின்ன மேஜிக் ஷோக்கள் நடத்திப் பழக்கம்

# அசர வைத்த ராமர் பிள்ளையின் மேஜிக்!

*பல விதங்களில் ஆராய்ச்சி செய்வது வழக்கம் என்றீர்கள். ஏதாவது உதாரணம் கூற முடியுமா?*

ராமர் பிள்ளையைப் பற்றி பத்திரிகைகள் புகழ்ந்து தள்ளிய நேரம் அது. ஐ.ஐ.டி.யில் விஞ்ஞானிகளுக்கு எதிரே அதை அவர் நிரூபிக்க வேண்டிய சூழல் வந்தபோது, பத்திரிகையாளர்களை உள்ளே விடவில்லை. வெளியே நின்று கொண்டு, அவ்வப்போது வெளியே வரும் விஞ்ஞானிகளைக் கொண்டு விவரங்களை அறிந்து கொண்டேன். ஓர் இரும்புத் தண்டைக் கொண்டு

எனக்கு, பிரபல விஞ்ஞானிகள் எதிரில் இப்படி தைரியமாக "மேஜிக்" செய்த ராமர்பிள்ளையின் துணிச்சல் அசரவைத்தது. விரிவாக இது குறித்து எழுதினேன். பல வாசகர்களும் பாராட்டினார்கள்.

— **ஜி.எஸ்.எஸ்.**

படம்: ஸ்ரீஹரி

# புருவம் உயர்த்தாதீர்கள்!

**ஆ**ஸ்கருக்கு நாமினேட் செய்யப்பட்ட நடிகை என்றால் ஆகாயத்தில்தானே பறக்க வேண்டும்? ஆனால் நம்ம ஆள் ஷேகர் கபூர் இயக்கத்தில் "எலிசபெத்"தாக நடித்த ஆஸ்தி ரேலிய நடிகை கேட் ப்ளான்செட் வருத்தத்தில் இருக்கிறார். "ஒரே போன்று இளவரசி பாத்திரங் களாகவே அளிக்கிறார்கள். மறுத்து வருகிறேன். எனது மீதி நடிப்புத் திறமைகளையும் காட்டுவதுபோல் ஒரு பாத்திரம் எப்போது கிடைக் குமோ?" என்று ஒரு பேட்டியில் பெருமூச்சு விட்டிருக்கிறார்.

• ஜெனிபர் லோபெஸ்



**ம**டோனாவை சமீபத்தில் கடத்திச் சென்று விட்டார்கள். மடோனாவை இன்ஷூர் செய்திருந்த நிறுவனம் பதறிப் போயிருக்கிறது. "மடோனாவைக் கடத்தி யவர்களைப் பற்றி துப்புக் கொடுத்தால் நிறைய வெகுமதி உண்டு" என்று அறிவித் திருக்கிறது. இந்த மடோனா பாப் பிர பலம் அல்ல. பிரபல ஓவியர் லியா னார்டோ டாவின்ஸி வரைந்த "மடோனா" என்ற ஒரிஜினல் ஓவியம். பிரிட்டனில் உள்ள ஒரு மியூஸி யத்தில் வைக்கப்பட்டிருந்தது. அதைத்தான் கடத்திச் சென்று விட்டார்கள்.

**க**ம்பீரமான நடிப்பு, கவர்ச்சி ஆகிய இரண்டாலும் ஹாலிவுட்டைக் கட்டிப் போட்டி ருப்பவர் (மாஸ்க் ஆஃப் ஜோரோ



• கேத்ரின் ஜெடா ஜோன்ஸ்



• கேமரான் டியாஸ்

போன்ற படங்களில் கலக்கிய) கேதரின் ஜெடா ஜோன்ஸ். இப்போது தாம் பங்கேற்கும் "சிந்துபாத்" திரைப்படத்தில் மிகவும் உற்சாகமாகப் பணியாற்றுவதாக அறிவித்திருக்கிறார். சிந்துபாத் ஒரு அனிமேட்டட் திரைப்படம் என்பதும், அதில் வரும் பாத்திரமான மெரைனுக்குக் குரல் கொடுத்திருக்கிறார் கேதரின் என்பதும்தான், இதில் சுவாரஸ்யமான தகவல்கள்!

"ஷல் வி டான்ஸ்?" என்ற திரைப்படத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார் ஜெனிபர் லோபெஸ். இதற்காக பாலே நடனத்தை முழு மூச்சாகக் கற்றுக் கொண்டு வருகிறாராம். "படத்தில் என் சீடராக நடிக்கும் ரிச்சர்ட் கெரே தினமும் எட்டு மணி நேரம் நடனப் பயிற்சி எடுத்துக் கொள்கிறார். அப்படியானால் அவருடைய குருவாக நடிக்கும் நான் எவ்வளவு நேரம் பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்!" என்று தீவிரமாகக் கேட்கிறார் - ஜெனிபர் லோபெஸ்.

ஜூலியா ராபர்ட்ஸின் இடத்தை கேமரான் டியாஸ் என்ற நடிகை பிடித்திருக்கிறார். "மை பெஸ்ட் ப்ரெண்ட்ஸ் வெட்டிங்" என்ற திரைப் படத்தில் சில வருடங்களுக்குமுன் இருவரும் நடித்திருந்தனர். அப்போது (ம்) மிகப் பிரபலமாக இருந்த ஜூலியா ராபர்ட்ஸுக்காக பலரும் திரையரங்குகளை மொய்க்க, அவரை விடச் சிறப்பாக நடித்தார் என்ற பெருமை கேமரான் டியாஸுக்குக் கிடைத்தது. ஆனால் இங்கே குறிப்பிடுவது அதைப் பற்றியல்ல. 2001ல் நாற்பத்தியொரு மில்லியன் டாலர்களைச் சம்பாதித்தார் என்பதால் "மிக அதிக வருமானம் ஈட்டிய நடிகை" என்ற கின்னஸ் ரெகார்ட், ஜூலியா ராபர்ட்ஸிடமிருந்து இவருக்கு வந்துவிட்டது. 2002லும் இதே சாதனையைச் செய்து, கேமரான் டியாஸ் தன் கின்னஸ் புகழைத் தக்கவைத்துக் கொள்வார் என்று நம்புகிறார்கள் பலர்.

"இதோ பாப் பாடகி மடோனா பற்றி ஒரு செய்தி. தமோனே ராபர்ட்ஸ் என்பவர் புருவங்களைச் சரி செய்வதில் ஸ்பெஷலிஸ்ட். "மடோனாவின் புருவங்களை நான்தான் சரி செய்தேன்" என்று பல பேட்டிகளில் அவர் கூறிவருவது மடோனாவை எரிச்சலடைய வைத்திருக்கிறது. "மூன்று வருடங்களுக்கு முன் ஒரே ஒரு முறைதான் அவர் என் புருவங்களைச் சரி செய்தார். மற்றபடி அனெஸ் டேஷியா என்பவர் தான் இந்தச் சேவையை எனக்குச் செய்து வருகிறார். இனியும் தமோனே இப்படிப் பேட்டி கொடுத்தால் என் புகழைத் தவறாகப் பயன்படுத்திக் கொள்வதற்காக அவரிடம் பெரும் நஷ்ட ஈடு கேட்பேன்" என்று கொதித்திருக்கிறார்.

— குல்லூ



• கேட் ப்ளான்செட்



காட்சி : 62

பகல் / வெளியே. தெரு.
**பாத்திரங்கள்: சுசீலா, கண்ணன், கீதா**

ஜன சந்தடி மிகுந்த கடைத் தெருப் பகுதி. ஓர் இடத்தில், பாம்புக்கும் கீரிக்கும் சண்டை விடும் வேடிக்கை நடக்கிறது. தாயத்து விற்பவர் கூட்டத்தைச் சுற்றிச் சுற்றி வந்து பேசுகிறார். மூளைக் குச்சியில் அடிக்கப்பட்ட கயிற்றோடு பிணைக்கப்பட்ட கீரி ஒன்று முன்னுக்கும் பின்னுக்கும் அலைகிறது. கூடைக்குள் பாம்பு இருக்கிறது... சுற்றிலும் மக்கள் வேடிக்கை பார்க்கிறார்கள்.

**தாயத்து விற்பவர்:** காலையில் குளிச்சு சுத்த பத்தமா சாமி படத்துக்கு முன்னால தாயத்தை வை சார். அப்புறம், எடுத்துக் கையில கட்டு. இடுப்பில் கட்டாதே. பேய், பிசாசு, பில்லி சூனியம், காத்து சேஷ்டை, கண் சேஷ்டை, பங்காளிக் காய்ச்சல், பகையாளி மிரட்டல், வம்பு, வழக்கு, கோர்ட்டு கேசு, போலீஸ் மாமூல் எல்லாம் பத்து நாள்லே தீரும். தீரலேன்னா, இந்த மஸ்தானைக் கேளு. அஞ்சாம் நாள், அக்கா மவ, சொக்கிப் போவா... மாமன் மவ, மயங்கிப் போவா... மயங்கலைன்னா மஸ்தானைக் கேளு...

*(கூட்டத்தை விட்டு வெளியேறி விடுகிறார்கள் சுசீலா, கண்ணன், கீதா மூவரும்...)*

**சுசீலா:** ஏம்ப்பா... கண்ணா... ஒரு தாயத்தை வாங்கிக் கட்டேன்... உனக்கு அக்கா மவ, மாமன் மவ யாரும் இல்லையா?

**கீதா:** மயங்கலைன்னு வச்சுக்குங்க... மஸ்தான் என்ன பண்ணுவார்?

**கண்ணன்:** இன்னொரு தாயத்து கொடுப்பார்.

**சுசீலா:** அட போப்பா... பாம்பு கீரி சண்டை பார்க்கலாம்னு நினைச்சேன். பார்க்க விடலையே, நீங்க...

**கண்ணன்:** அக்கா. எந்தக் காலத்துல



பாம்புக்கும் கீரிக்கும் சண்டை நடந்திருக்கு? சங்க காலத்திலேருந்து, தமிழன் வேடிக்கை பார்த்துக்கிட்டே இருக்கான். தாயத்து மட்டும் வித்துக்கிட்டு இருக்கு.

**கீதா:** நான் பல வருஷமா பார்க்கிறேன். கண்ணன், வேடிக்கை பார்க்கிறதுக்கு ஒரு கூட்டம் இருந்துகிட்டே இருக்கு. அலுக்காம, சலிக்காம வேடிக்கை பார்க்க...

**கண்ணன்:** எதையும் வேடிக்கை பார்க்கிற கூட்ட மனோபாவம் வந்து போச்சு. அரசியல் அசிங்கம், பொதுக்கூட்ட அசிங்கம், சினிமா அசிங்கம், டி.வி. அசிங்கம், ஆன்மிக அசிங்கம் எதுவுமே நம்மைப் பாதிக்க விடாம, மரத்துப் போயி வேடிக்கை பார்த்துகிட்டு இருக்கிறவங்க நாம்... அசிங்கம்னா, நம்ம பெரியவங்களுக்கு, ஆம்பிளை பொம்பிளை உறவுதான் ஞாபகத்துக்கு வருது. இயல்பா இல்லாம இருக்கிறதே ஆபாசம்தான்.

**கீதா:** ஒட்டு மொத்தமா அரசியலை அசிங்கம்னு சொல்லிட முடியுமா கண்ணன்? நாணயஸ்தர்கள் இருக்காங்கதானே, எல்லாத் துறையிலும்?

**கண்ணன்:** இருக்காங்கதான். தண்டனை அடைஞ்சு, ஜெயிலுக்குப் போறவன், ரெண்டு விரலைக் காட்டி, வெற்றின்னு போறானே, அந்த அசிங்கத்தைச் சொல்றேன். எல்லாத்துறையிலும் நல்ல போக்குகள் இருக்கத்தான் இருக்கு. முன்னால வந்து நிக்கறது, இந்த அசிங்கம்தானே?




**சுசீலா:** ஏம்ப்பா... ஒரு ஆட்டோ பிடி. இந்தக் கூட்டத்துல நடக்க முடியலை. எங்காவது சித்த உக்காந்தா தேவலாம் போல இருக்கு... இந்தப் 'பை' வேற கனக்குது.

**கண்ணன்:** இங்க ஒரு 'பார்க்' இருக்குக்கா. அங்க உக்காரலாமே. நல்லா இருக்கும். குளுகுளுன்னு...

(அவர்கள் ஒரு பூங்காவுக்குள் நுழைகிறார்கள். சிமெண்ட் பெஞ்சில் அமர்கிறார்கள், கீதாவும், சுசீலாவும். புல் தரையில் படுத்துக் கொள்கிறான் கண்ணன்.) சில வினாடிகளுக்குப் பிறகு...

**சுசீலா:** ஏதேனும் வேலை செய்யணும் போல இருக்கு. புருஷனை விட்டு வந்தவள், டைவர்ஸ் வாங்கிக்கிட்டவள் சும்மா இருக்கக் கூடாது.

**கண்ணன்:** இருந்தா என்னக்கா? வேலை செய்ய வேண்டிய அவசியம் உங்க குடும்பத்துக்கு இல்லையே...

**சுசிலா:** அவசியம் இல்லதான். சோத்துக் கவலை இல்லதான். ஆனா, மத்தவங்க மாதிரி, ஏன், உங்களை மாதிரி, நானும் என் படிப்புக்கேத்த, திறமைக்கேத்த வேலை செய்ய வேண்டாமா கண்ணன்? எனக்கும் உருப்படியா ஏதோ செய்ய முடியும்னு எனக்கே தெரியணும் இல்லையா? அதோட, என்னை டைவர்ஸ் பண்ணினவன், என்னை முடக்கி வீட்டுல உக்காத்தி வச்சுட்டோம்னு சந்தோஷப் பட்டுடக் கூடாது இல்லையா? அவனுக் காகவாவது நான் தழைஞ்சு வரணும்பா...

**கீதா:** ரொம்பச் சரி, சுசிலாக்கா.

**கண்ணன்:** நான் யோசிக்காமே இல்லக்கா. இனிமே, நீங்க ஒருத்தர்கிட்ட போய் வேலை செய்யணுமான்னுதான் யோசிக்கறேன்.

**சுசிலா:** செய்தா என்ன குறைஞ்சுடும்?

**கண்ணன்:** குறையாது. உங்களுக்கு அது அவசியம் இல்லக்கா. உங்களால, ஒரு தொகை தயார் பண்ண முடியும். அதனால, ஏதாவது ஏஜென்சி எடுக்கலாம்.

**கீதா:** நல்ல யோசனை. ஆனா, நம்ம உள்ளூர் பொருள் மட்டும்தான் எடுக்கணும். அந்நிய, பன்னாட்டுக் கம்பெனிப் பொருள்கள் வேணாம். கட்டாயம் வேணாம். ஜனங்களுக்குக் கெடுதல் செய்யற பொருளா இருக்கக் கூடாது. சுற்றுப்புறச் சூழலுக்குக் கேடு தர்ற பொருளா இருக்கக் கூடாது.

**கண்ணன்:** என் நண்பர் 'ஷாம்பு' பிசினஸ் பண்றார். அதை எடுக்கலாம். ஆனா, ஷாம்பு, சுற்றுப்புறக் கேடு. டிடர்ஜெண்ட், ரசாயன சம்பந்தமா இருக்கிறது, எல்லாம் வேணாம்.

**சுசிலா:** அதெல்லாம் சரிதான். எது சரிப்படும்? *(இளநீர் வியாபாரி ஒருவர் வருகிறார். அவரிடமிருந்து இளநீர் வாங்கிக் குடிக்கிறார்கள். அவர் போன பிறகு...)*

**கண்ணன்:** இளநீருக்குள்ள ரசாயனம் வந்துடுச்சு தெரியுமாக்கா? ஓர் ஊருல இளநீருக்குள்ள தண்ணி, மஞ்சளா, மருந்து வாசனை வீசி இருக்கு. தாய்ப்பால் கெட்டுப் போன மாதிரி இருக்கு.

**கீதா:** தென்னை, தானாவே தான் உண்ட நீரைத் தலையாலே தான் தருதலால்னு படிச்சதில்லையா...? எதைத் தென்னையோட கால்லே ஊத்தறமோ, அதைத்தான் தலையாலே அது கொடுக்கும். உரம் போட்டோம், ரசாயன உரம். அதனால ரசாயனத்தை அது கொடுக்குது.

**சுசிலா:** புஷ்ஷுக்கு இதைச் சொல்லு. எனக்கு ஏனப்பா சொல்றே?

**கண்ணன்:** எங்க பக்கத்துல, சகாதேவன்னு ஒருத்தர். விவசாயி. பரீட்சார்த்தமா, நிறைய நினுசுகளைக் கண்டுபிடிச்சு, பரிசெல்லாம் வாங்கியவர். ரொம்ப நல்ல மனுஷர். ரொட்டி கம்பெனி நடத்தினார். நல்ல ரொட்டி. எங்க மாவட்டத்துல அதுக்கு நல்ல பேரு... நல்லா இருக்கும். மலிவாகவும் இருக்கும். அதை, நம்ம ஊருக்குக் கேட்டுப் பார்க்கலாம். அவங்களே, பிஸ்கட்டும் தயார் பண்ற யோசனையில இருக்காங்க. அதையும் நாமே வாங்கலாம். பிஸ்கட்டுல, திமிங்கிலங்கள் மார்க்கட்டுக்கு வந்து நிக்குது. முயற்சி பண்ணிப் பார்ப்பமே. நம்ம ஊர் சோப் மெடிமிக்ஸ்லும், சந்திரிகாவும் ஜெயிக்க முடிஞ்ச மாதிரி, முடியும்.

> *''தலைவா! என் குழந்தைக்குப் பேர் வைங்க...''*
> *''நிதி எவ்வளவு கொடுத்தே?''*
> *''ஒண்ணும் இல்லே, தலைவரே...''*
> *''அப்படின்னா பிச்சை மணின்னு பேர் வச்சுக்கோ..!''*
>
> *— எஸ்.ஆர்.ஸ்வாமி*

என்ன, நம்மால அவங்க பண்ற விளம்பரத்துக்கு முன்னால நிக்க முடியறதில்லை. உலக அழகிகளை, அவங்க சோப்பு போட்டுக் குளிக்க வைக்கலாம். நம்மாலே முடியாதே. அதுதான் பிரச்னை.

**சுசிலா:** தொழில்காரன் மாதிரிப் பேசினது போதும். அந்த ரொட்டி, பிஸ்கட் காரரைப் பாரேன்.

**கண்ணன்:** இதைவிட வேற வேலை எனக்கு என்னக்கா இருக்க முடியும்?

**சுசிலா:** பணம் எவ்வளவு தேவைப்படும், கண்ணா?

**கண்ணன்:** ஒரு லட்ச ரூபாய் போதும்கா.

**சுசிலா:** சர்வ சாதாரணமாச் சொல்றே. எனக்குப் பெரிய தொகைப்பா அது. எங்களுக்கு நிறைய சொத்து இருக்கு. எங்க சித்தப்பா, அதைக் கவனிக்கிறாங்க. அவங்ககிட்ட சொல்லி, ஏற்பாடு பண்ணச் சொல்லணும். என் கையில இருக்கிறது, நகையா இருக்கிறது எல்லாம் ஐம்பது தேறும். மத்ததை வெளியே ஏற்பாடு பண்ணிக்

கலாம்.

**கண்ணன்:** சரக்கு வைக்க 'குடோன்' வேணும். இப்பத்திக்கு, என் அறையில வைச்சுக்கலாம். 'லைன்ல' போற நாலு பையன்கள் வேணும். மார்க்கெட் பிடிச்சப் புறம், ஏஜெண்டுகள் தேடி வருவாங்க.

**கிதா:** நாளைக்கே, பார்ட்டியைப் போய்ப் பார்த்துட்டு வா கண்ணன்.

**கண்ணன்:** போயாகணும். அம்மா வேற நிறைய கடிதங்கள் எழுதிட்டாங்க வரச் சொல்லி. அவங்களையும் பார்க்கணும்.

**சுசிலா:** என்ன சங்கதியாம்?

**கண்ணன்:** எல்லா அம்மாக்களுடைய பிரச்னைதான். மடியில நெருப்பைக் கட்டிக் கிட்டு இருக்கிறதா சொல்வாங்க பொம் பிளைப் பிள்ளையா இருந்தா. எனக்குக்



கல்யாணம் பண்ணணும்ங்கிற பிரச்னை தான்.

**சுசிலா:** பண்ணிக்கோயேன். வேலை இல்லேன்னு தள்ளிப் போட்டே, இப்பத் தான் வேலையும் இருக்கு. கல்யாணம் கட்டிக்கிட்டு...

**கண்ணன்:** அதுதானே பிரச்னை.

**சுசிலா:** என்ன பிரச்னை?

**கண்ணன்:** எனக்குக் கல்யாணத்துல மனசு போகலை. அம்மாவுக்குச் சந்தேகம்.

**சுசிலா:** சந்தேகமா?

**கண்ணன்:** ஆமாம். நான், கிதாவைக் காதலிக்கிறேன்னு நினைக்கிறாங்க. அதுக்கு சம்மதம்னு என்கிட்ட சொன்னாங்க. எனக் கும் கிதாவுக்கும் அந்த மாதிரி உறவு இல் லைன்னு சொன்னாலும் அவங்க கேட்கத் தயாரில்லை. என்ன பண்றதுன்னு தெரி யலை.

**கிதா:** வேணும்னா, நான் சொல்றேனே, அம்மாகிட்ட.

**கண்ணன்:** அது கௌரவம் இல்லை கிதா.

**கிதா:** யாருக்குக் கௌரவம் இல்லை.

**கண்ணன்:** உனக்குத்தான்.

**கிதா:** இதுல என்ன கௌரவப் பிரச்னை? எனக்குப் புரியலை.

**கண்ணன்:** இதை வார்த்தையால சொல்ல முடியாது. கிதா, இது எனக்கும் என் அம்மாவுக்கும் உண்டான பிரச்னை. இதுல நீ என்னத்துக்கு அனாவசியமா?

**கிதா:** சந்தேகத்தைக் 'கிளியர்' பண்ணிட லாம்பா.

**கண்ணன்:** வேணாம்.

**சுசிலா:** அப்ப, கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சுடு.

**கண்ணன்:** யாரை?

**சுசிலா:** உன் அம்மா, உனக்குப் பார்க்கிற பெண்ணை. மூக்கும் முழியுமா, லட்சணமா, பதவிசா, குடும்பப்பாங்கா...

**கண்ணன்:** ஒரு பெண்ணுக்கும், நீங்க சொன்னதுக்கும் என்ன சம்பந்தம்?

**சுசிலா:** பெரியவங்க அப்படித்தாம்பா பார்ப்பாங்க.

**கண்ணன்:** இங்கதான் பிரச்னையே. எனக்கு ஒரு துணை வேணும். பரஸ்பரம் புரிஞ்சுக்கிற, சமமா நடந்து வர்ற துணை. அதுக்கும் நீங்க சொல்ற மூக்கு, முழி, பதவிசு லட்சணம் எதுக்கும் சம்பந்தம் இல்லை.

**சுசிலா:** சரி. நீயே தேடு. கண்டுபிடி. கொண்டு போயி அம்மா முன்னால நிறுத்து.

**கண்ணன்:** கழுத்துல 'பெண் தேவை'ன்னு போர்டு மாட்டிக்கிட்டு அலையட்டுமா? இதெல்லாம் இயற்கையா அமையணும்.

**சுசிலா:** சரி. நாப்பது வயசுல?...

**கண்ணன்:** காதலுக்கும் வயசுக்கும் சம்பந்தம் இல்லை.

**சுசிலா:** சரிப்பா. நான் எதுக்கு வம்படி பண்ணணும். தேடு, பச்சைக் கிளி ஜோஸ்யம் பாரு.... (சிரிப்பு)

**கண்ணன்:** அதுக்கே அது தலை விதி தெரியலை. கம்பிக்குள்ள இருக்கு.


**கிதா:** இதுக்குத் தடை வராதாப்பா? மாட்டைப் பத்தி கவலைப்படறாங்க. ஏன் பச்சைக் கிளிகளைப் பத்தி யாரும் கவலைப் படலை?

**சுசிலா:** மேனகாவுக்கு எழுதலாம்.

(தொடரும்)

# கலாக்ஷேத்ராவிலிருந்து...





மடிப்புக் கலையாத ஜீன்ஸ் ஷர்ட், முக்கால் முட்டுக்கு பாக்கெட்டுகள் வைத்த பாண்ட், காதில் வளையத்துக்குப் பதிலாக செவ்வக வடிவில் ஒரு அணிகலன் (என்ன பெயரோ!) அல்ட்ராமாடர்ன் ஸ்டைலில் பாரதிராஜா அலுவலகத்தில் தோழிகளுடன் அரட்டையில் இருந்தார் ரேகா!

அட இந்த ரோகாவா, ஈரநிலம் படத்தில் மனோஜுக்கு அண்ணியாக கன்னியம்மா கேரக்டரில் நடித்தது? மூக்கில் விரல் வைக்காமலேயே "ரேகா?..." என்றோம்.

"யெஸ். நீங்க நினைக்கற ஆள் நான்தான். அது நடிப்பு, இது நார்மல்" என்ற ரேகா, அமலா, சுகன்யா போன்ற நடிகைகளுக்குப் பிறகு... கலாக்ஷேத்ராவிலிருந்து வந்திருக்கும் டான்ஸர்!

"அப்பா வங்கி அதிகாரிங்கறதால கேரளாவுல பல இடங்கள்ல வாழ்ந்தாச்சு. பத்தாவது படிச்சுட்டு நாட்டியத்தின் மேலான ஆசையில் கலாக்ஷேத்ராவில் சேர்ந்தேன். என்னோட மாஸ்டர் தாமஸும் டைரக்டர் பாரதிராஜாவும் ஃப்ரண்ட். ஒரு நாள் என்னை அழைச்சிட்டுப் போய் அறிமுகப்படுத்தி, 'இவளை உங்க படத்துக்குப் பயன்படுத்திக்கோங்க'ன்னு சொன்னார். 'அடுத்த படத்துக்கு நிச்சயமா கூப்பிடறேன்'னார் பாரதிராஜா சார். அதே போல ஈரநிலம் ஆரம்பிச்சதும் கூப்பிட்டு 'மேக்-அப்' டெஸ்ட் பண்ணினாங்க. என்ன கேரக்டர், என்ன கதை எதுவும் தெரியாது. கெண்டைக்கால் தெரியறமாதிரி புடைவையைக் கட்டிட்டு, அழகான கொண்டை போட்டு, மேக்கப் போட கண்ணாடியைப் பார்த்தா நான் தானா?'ன்னு எனக்கே சந்தேகம். அப்படி மாறியிருந்தேன்."

ஈரநிலம் ரிலீசுக்கு முன்பே மலையாளத்திலும் கன்னடத்திலும் தலா ஒரு படத்தில் நடித்துவிட்டு வந்திருக்கிறாராம் ரேகா!

"சின்ன வயசுலயே நிறைய சினிமா பார்ப்பேன். ஒரு பெரிய நடிகையாகணுங்கற இலட்சியமெல்லாம் அப்ப இல்ல. பரதம்தான் பெரிய விஷயமா தெரிஞ்சுது. இப்ப ஒரு நல்ல நடிகையாகணுங்கறது இலட்சியமா இருக்கு" என்கிற ரேகாவிடம், "ஏற்கெனவே ஏகப்பட்ட 'ரேகாக்கள்' உலவுகிற கோடம்பாக்கத்தில் பெயர் குழப்பம் வராதா?" என்றால் 'நிச்சயமா வராது, நான் ரேகா உண்ணிகிருஷ்ணன்'' என்கிறார் அழுத்தமாக.

— அப்பு



பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தீர்க்கதரிசிகள், துறவிகள் மற்றும் ஆன்மிக ஞானத்தை நாடுவோர் எல்லோரும் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று புனித நதிகள் கூடும் சங்கமத்தில் ஒன்றாகத் திரள்கின்றனர். ஞானத்திற்கும், சுய பரிசோதனைக்கும் சின்னமாக இருப்பது கங்கை. யமுனை நதிக்கரையில்தான் காதல் நிகழ்ச்சிகள் இறவாப் புகழ் பெற்றன. ஞானமும் அன்பும் ஒன்றாகச் சேரும்போது, சிரசும் இதயமும் சந்திக்கும்போது, ஞானம் மற்றும் நுண்கலைகளின் திருவுருவான சரஸ்வதி தேவி மேலெழுவாள்.

நுண்ணிய அணு வெடிக்கும்போது வெளியாகும் கதிர் வீச்சு, நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கும். மனம் மிக நுட்பமானது; ஓர் அணுவின் இலட்சத்தில் ஒரு பங்கை விட நுண்ணியது. மனம் வெடிக்கும்போது, அதுதான் தெளிந்த அறிவு.

தியானம் செய்து, கழுவாய் தேடி, நோன்பிலிருந்து, தெளிந்த அறிவு பெற்ற ஆயிரக்கணக்கான ஞானிகள் கும்ப மேளாவிற்கு வருகை தந்து, நதிகளில் மூழ்கி எழுந்து, சாதனைகள் மூலம் தாம் ஈட்டிய சிறப்புகளின் பாரத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளுகிறார்கள். இது பல நூற்றாண்டுகளாக நடந்து வருகிறது. அவர்களால் பரப்பப்பட்ட சக்தியை உறிஞ்சும் தன்மை நீருக்கு உண்டு. தீர்க்கதரிசிகள் மற்றும் துறவிகளுடன் சேர்ந்திருப்பதற்காக, உலகின் எல்லா மூலைகளிலிருந்தும் வரும் ஞானம் தேடுவோர், நதிகளில் மூழ்கி எழும்போது அச் சிறப்புகளைப் பெறுகின்றனர்.

இடம் என்பதை மட்டும் தனியே விலைக்கு வாங்க முடியாது. ஒரு களிமண் கட்டிக்கு மதிப்புக் கிடையாது. ஆனால் களிமண்ணால் சூழப்பட்டிருக்கும்போது அந்த இடம் மதிப்புப் பெற்று விடுகிறது. இதுதான் கும்பம். அதாவது பானை. ஆன்மா இயற்கை, எங்கும் நிறைந்துள்ளது. ஆனால் அது விழிப்புத் தன்மையின் உயர்த்தப்பட்ட

# கும்பமேளா



ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

நிலையான மனித உடலில் உதயமாகும் போது, அளவிட முடியாத மதிப்பைப் பெறுகிறது. பொதுவாக, புற உருவம் பெற்ற, உயர்த்தப்பட்ட ஆன்மா, கும்பம் என்று அழைக்கப்படும். முழு நிறைவு, குறைபாடற்ற தன்மை ஆகியவற்றின் சின்னமாக விளங்கும் ஒரு பானையைக் கும்பம் குறிக்கிறது.


கும்பமேளாவிற்காக குருஜி பிரயாகையில் இருந்தபோது -

தன்னுடன் வந்தவர்களைப் பிரிந்து, தனியே, சோர்வுடனும் பசியுடனும் வாடியிருந்த எண்பது வயது மூதாட்டியைப் பார்த்தார். அவருக்குக் கொஞ்சம் பணம் தரச் சொல்லி குருஜி ஒருவரை அனுப்பினார். ''நான் இங்கு வந்தது கொடுப்பதற்குத்தான், பெற்றுக் கொள்ள அல்ல!'' என்று அந்த மூதாட்டி வாங்க மறுத்துவிட்டார். பின்னர் குருஜியே அவரிடம் சென்று, ''பணமும் பிரசாதம்தான்'' என்று சொல்லிய பின்னர்தான் அவரிடமிருந்து அம் மூதாட்டி பணத்தைப் பெற்றுக் கொண்டார்.

இரவு பயங்கரக் குளிர். பனி உறையும் நிலை. தங்குமிடம் ஏதும் இல்லாததால், நதிக்கரையில் மணல் மீது பலர் உறங்க வேண்டியிருந்தது. பாவம், பெரும்பாலோருக்குப் போர்த்திக் கொள்ள ஒரு சால்வைகூட இல்லை. யுவாச்சாரியர்கள் சிலரும், பக்தர்கள் பலரும் சூழ, குருஜி ஒவ்வோர் இரவும் இவர்களுக்குக் கம்பளிகள் வழங்கினார். இப்படி ஆயிரக்கணக்கான கம்பளிகள் வழங்கப்பட்டன.

இரவில் குளிரால் நடுங்கிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவரைப் பார்த்தார்கள். கம்பளியையும் கொடுத்தார்கள். ''என்னால் இந்தக் குளிரைத் தாங்க முடியும். குளிரைத் தாங்க முடியாத வேறு பலர் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுங்கள்!'' என்று சொல்லிய அந்த இளைஞர் கம்பளியை வாங்க மறுத்துவிட்டார்.

''இந்த எளியவர்களின் பக்தியையும், முழுமையான சரணாகதியையும் பாருங்கள். மிக மோசமான சூழ்நிலையிலும்கூட, இவர்களிடம் உள்ள அசைக்க முடியாத தெய்வ நம்பிக்கையைப் பாருங்கள். எல்லாவற்றையும் அவன் கொடுத்து உதவுவான் என்னும் நம்பிக்கையைப் பாருங்கள்!'' என்று நெகிழ்ந்து போய் குருஜி எல்லோரிடமும் கூறினார்.



# ஃப்ரெண்ட் வீடு

**அமரர் கல்கி நினைவு இளமைச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதை**

**தரணி**

மாலையில் கனகராஜூம், சுரேஷூம் வந்து, நானும் கிளம்ப, அப்பா, "எங்க போறீங்க?" என்று கேட்டதற்கு மூவரும் கோரஸாகச் சொன்னோம் "ஃப்ரெண்ட் வீட்டுக்கு."

அப்பா ஒரு நிமிடம் பால்யத்தை நினைவுறுத்தி, "எங்களுக்கெல்லாம் ஸ்கூல் படிப்பு முடிஞ்ச அடுத்த நாள்லருந்தே 'ஃப்ரெண்ட் வீடு' இல்லாமப் போயிடுச்சுப்பா..." என்றார்.

அம்மா காபி கொண்டு வந்து கொடுத்தாள். அவர்கள் செமஸ்டர் பரீட்சை பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். "எப்படியும் நாலு 'கப்'பாவது (அரியர்ஸ்) உறுதி" என்றான் கனகு. சுரேஷ் கையில் 'அப்ளைடு எலெக்ட்ரானிக்கும்', 'விவேகானந்தர் சிந்தனைகளும்' கனமாக வைத்திருந்தான்.

"அபி விவேகானந்தர் சிந்தனைகள் கேட்டுச்சு டா" என்றான்.

"போய்க் கொடுக்கலாம். குளிச்சுட்டு வந்துடறேன் இரு."

அபிதா, எங்களுக்கெல்லாம் மையமான தோழி. அழகாகத்தான் இருப்பாள். ஆனால் சின்ன வயதில் சாக்கடைக்குள் விழுந்து முன்னாடி இரண்டு பல்லை உடைத்துக் கொண்டாள். அவள் வீட்டைத்தான் 'ஃப்ரெண்ட் வீடு' என்று குறிப்பிட்டோம்.

நான் பத்தாம் வகுப்பிலேயே இவர்களிடமிருந்து விலகிப் போய், கோயமுத்தூரில் 'டிப்ளோமா இன் மெக்கானிக்கல்' படித்துவிட்டு வந்ததும், "உன் படிப்புக்கு இந்த ஊர் அவ்வளவு பொருத்தமானது இல்லையே பாண்டியா...!" என்று அப்பா கவலைப்பட்டபோது கூட, 'என் பெருமைக்குரிய மதுரையையும் இந்த நண்பர்களையும் விட்டுப் போவதில்லை' என்று தீர்மானமாக மறுத்துவிட்டு, இங்கேயே கோச்சடையில் மெஷின் ஆபரேட்டராக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

சுரேஷ், கனகு, அபியெல்லாம் ஹையர் செகண்டரியும் ஒன்றாகவே படித்து... இப்போது இன்ஜினியரிங்! நிறைய கனமான புத்தகங்கள் படிக்கிறார்கள். நல்ல இங்கிலீஷ் பேசுகிறார்கள்.

சுரேஷ் சிரித்துக் கொண்டே, "எனக்கு இப்போ அபி வீட்டுக்குப் போகணும், ஃபோன் பண்ணிக் கேளுடா இருக்காளானு."

இதற்குள் ஃபோன் அடித்தது. சில தொலைபேசிகளை எதிர்பார்க்கவே முடியாது.

"ஹலோ."

"அபிதா பேசறேன்", அவளேதான். உற்சாகம் வந்துவிட்டது.

"ஊம். சொல்லுடி, உங்க ஆத்துக்குத்தான் கிளம்பிண்டிருக்கோம்."

அவள் என்னை மட்டும் 'டீ' போட்டு அழைக்க அனுமதித்திருக்கிறாள்.

"சொல்லுடி."

"அப்பாவ போலீஸ்ல அரெஸ்ட் பண்ணிட்டாங்க. லாரியில் வந்த சரக்கு முறையானதில்லைன்னு அரெஸ்ட் பண்ணிட்டாங்க."

"ஷிட்!"

கனகராஜ், "யாரு?" என்றான்.

"அபிதான்... அவ அப்பாவ போலீஸ்ல அரெஸ்ட் பண்ணிட்டாங்களாம்.

அவளின் மழலை அழகு மிகுந்த முகம் குழந்தை போலவே கண்ணீர் விட்டு அழுவதை என்னால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை.

"எதுவும் நடக்கட்டும். தயவு செய்து நீ மட்டும் அழாதே'' என்றேன். அவள் தொடர்ந்து விசும்பலுடனேயே அழுது கொண்டிருந்தது எனக்குள் உருகி வந்தது. வராந்தாவில் யாரோ ஆசாமி. சலவை வேட்டி சட்டையில் நெற்றியில் சந்தனப் பொட்டு வைத்துக் கொண்டு, செல்ஃபோனும் கையுமாக வந்து நின்றார். அந்த ஆளைக் கண்டு அபிதா இலேசாக மிரண்டாள். அந்த ஆள் அபிதாவை அழைத்து, "ஒரு லட்சம் பணம் தருவேன். பேசாம நான் சொல்றதக் கேளுங்க. கோர்ட்டுக்குப் போனா வழக்கு நடத்தவே பைசா தேறாது. ஏற்கெனவே நிறையக் கடன் வச்சிருக்கான். மூழ்கிப் போய்டுவீங்க." இவள் சட்டென்று அழுகையை மறந்து ஆவேசமாகி,

"நீங்கள் தானே செஞ்சீங்க எல்லாம். உங்க... உன்னாலதான் அப்பாவுக்கு இந்த நிலை. கூடவே இருந்துண்டு இப்படி துரோகம் பண்ணினது பாவம். நியாயமா உன்னைத்தான் ஜெயிலில் போட்டிருக்கணும். அப்பா சொன்னா அதுக்கும் வேளை வந்துடும். நீ தப்பிக்க முடியாது." அவன் எல்லாவற்றிற்கும் மழுப்பலாகச் சிரித்துவிட்டு, "உன் அப்பன் ஒப்புக்கப் போறான் பார், என்னை எதுத்து என்ன செய்ய முடியும்?"

அவன் போனதும், அபிதா அவனை "துரோகி" என்று மறுபடி குரல் உடைய அழுதாள்.

'அபிதா, உன் அப்பா ஜென்டில்மேன். எனக்கு நம்பிக்கை இருக்கு.'

போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றிருந்த போது அபியின் அம்மா சரஸ்வதி, வியர்வையில் நெற்றிப் பொட்டு மூக்கில் வழிய, உடம்பெல்லாம் நடுங்கிக் கொண்டு, புடைவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு... ரொம்பவே பயந்து போயிருந்தார்.

வக்கிலிடம், "எதுவும் சிக்கலாயிடுத்தா?"

அவர், "எஃப்.ஐ.ஆரைப் பார்க்க வேண்டும். நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றார்.

இன்ஸ்பெக்டர் அருகில் வந்து, கவருமெண்ட்டுது சார்.



பி.டபுள்யூ.டி. டிபார்ட்மெண்டுன்னு கடத்தியிருக்காங்க."

"இவர் அப்படிச் செய்கிறவர் இல்லை சார். இன்னொருத்தர், வெள்ளை வேட்டி சட்டை போட்டுண்டு... அனாவசியமா சிரிச்சுண்டு... சகவாசம்!"

"டிரைவர் இவரைத்தான் காட்டினான்."

"இவர் என்ன சொன்னார்?"

"ஒண்ணும் சொல்லலை. இங்க வந்ததது லருந்து சாப்பிடக் கூட இல்லை. ரொம்ப ஹீனமா இருக்கார். பாத்து அழைச்சுட்டுப் போங்க."

வீட்டில் இலேசான சிறலோடு அழுகை வெடித்துக் கிளம்பியது. வேறு வழியில்லை. அவர்களால் தற்போது அழ மட்டுமே முடியும். முழு விலாசத்தோடும், புகைப்படத்தோடும் பத்திரிகையில் செய்தி வெளியிட்டிருந்தார்கள். நாணயமிகு வியாபார உலகம் அவரை விலக்கி வைத்துவிட்டதாம். வெளியில் தலைகாட்ட நாணுகிறார். வருமானம் இல்லை. கடன்காரர்கள் குரல்வளையைப் பிடித்தார்கள். எந்தக் காரணத்திற்காகவும் அவை பெண்களிடம் பிரயோகிக்கக் கூடிய வார்த்தைகளே இல்லை. அபிதா அழுகிறாள்... கெஞ்சுகிறாள்... கை கூப்புகிறாள்.

"சாமி, வாசல்ல நின்னுண்டு சப்தம் போடாதிங்கோ... கொடுத்துடறோம்..."

இன்னொரு மூலையில் நிரந்தரமாக ஓர் அழுகை கசிந்து கொண்டே இருக்கிறது.

"என்ன தைரியத்துலன்னா இத்தனை கடன் வாங்கினேள்...?" இமைக்கும் நேரத்திற்குள் எல்லாம் தலைகீழாகிவிட்டது. பிடி மணலை பிடிவாதமாக அலை அரித்துச் செல்வது போல, ஒரு மாதத்திற்குள்ளாகவே இருந்த பித்தளைப் பாத்திரங்களைக்கூட மார்வாடிக் கடையில் நானே வைத்ததும், இராஜாஜி பார்க்கில் அபிதா, 'பசிக்கிறது' என்று வாய் திறந்து சொன்னதும்... கொடுமை!

அப்போதுதான் ஊரிலிருந்து வந்திருந்த தங்கை அர்ச்சனா இன்னும் நிலைமை உறைக்காமல், பிரமை பிடித்தாற்போல உட்கார்ந்திருந்தாள்.

"பாண்ட்ஸ், அவ்ளோதான்... காலி" என்கிறாள். அபி எப்பொழுதும் அழுத முகமாகவே இருக்கிறாள்.

"சுரேஷ், ஏதாவது செஞ்சே ஆகணும். அபி அழுகுதுறா... என்னால தாங்கிக்க முடியலை."

சுரேஷ் ஒரு வாரம் அலைந்து அவன் அப்பாவிற்கு 'லூனாவில் டூவீலர் வைத்திருக்கிறார் என்று சொல்லி 'பர்ச்சேஸிங்'கில் ஒரு வேலை ஏற்பாடு செய்து, அவரிடம் தயக்கத்துடன் தெரிவித்தபோது, "பரவாயில்லை. இப்போதைக்கு நிலைமையைச் சமாளிக்கணுமே''. புன்னகைத்து இலேசாகத் தலையெடுத்த நம்பிக்கையுடன் வேலைக்குச் சென்றவர் உடம்பில் நிறைய காயங்களுடன் வீட்டுக்குத் திரும்பியிருந்தார். கடன் கொடுத்தவர்களில் யாரோ கோபப்பட்டு...

அபிதா முன்பே சொல்லியிருக்கிறாள், "மத்தவாகிட்டல்லாம் அவகாசம் கேட்டிருக்கோம். சமாளிக்கலாம் அல்லது ஐ.பி. கொடுக்கலாம்னு வக்கீல் சொல்லியிருந்தார். ஆனா ஒரு ஆள் மட்டும் முரட்டுத்தனமா இருக்கார். பயமா இருக்கு."

நல்லகாயம். கனகராஜ் டாக்டரிடம் அழைத்துச் சென்றான். எங்களுக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஸ்தம்பித்து நின்றோம்.

"நம்பிக்கை இல்லை பாண்ட்ஸ். பிடிவாதமா எங்களுக்கு என்னென்னவோ நடந்திண்டுருக்கு."

"என்ன அபி, எதுக்கெடுத்தாலும் அழுதுகிட்டு, ஒண்ணும் நடக்காது இனிமேல். எல்லாம் நடந்திருச்சு. அர்ச்சனா நீயாவது சொல்லக் கூடாதா? அழக்கூடாதுன்னு."

"சத்தியமா முடியலையே. எங்க கைல என்ன இருக்கு? ஆத்துக்குள்ள பாரேன். சுத்தமா காலி. உடுத்திண்டுருக்கற துணி மட்டும்தான் மிச்சம். அம்மா தாலி கூட வித்துட்டோம். எனக்கு இந்தப் பாசி போறும். கனகு அழகா இருக்குன்னு சொன்னான். அபிஅது கூடப் போட்டுக்கல. ஒரே அழுகை. நிறைய ரோஷப்படறா, ஏய். அபி, சிரிடி.. அவன் என்ன சொன்னான்...? உன்னையும் என்னையும்..."

"அர்ச்சனா!"

"எனக்கு அப்பவே சிரிப்பு வந்துடுத்து. சுரேஷ் நீ வாயேன் கார்த்தால கரெக்டா

"ரொம்பக் கெஞ்சலா கேட்கிறாளேன்னு ஒரு டம்ளர் சாம்பார் எதிர்வீட்டு மாமிக்குக் கொடுத்தனுப்பிச்சது தப்பாப்போச்சு..."

"ஏன் அப்படிச் சொல்றே, அமலா?"

"பின்னே, 'உப்புமில்லே உறைப்புமில்லே; என்னத்தை சமைக்கிறான் உன் புருஷன்'னு நாக்குல நரம்பில்லாம கேட்டுட்டுப் போறாளே!

- உ. ராஜாஜி



ஆறு மணிக்கு பாட்டு கேட்கலாம்." அவன் ஓரத்தில் கண் கலங்கினான். "பூஜை அறையில் நிறைய சாமி படம் இருக்கு. யாருக்கும் அது தேவைப்படலை. அம்மா மட்டும் பொழுதுக்கும் அங்கேயே உட்கார்ந்திண்டுருக்காங்க. எனக்கு நம்பிக்கை இல்லை. தினமும் விடியறதுக்குள்ள என்ன நடக்கும்னு தெரியலை." சிறிது இடைவெளி விட்டு, குரல் கம்மி, "ஏதாவது வழி இருக்கா...?"

"ம்?"

"ஏதாவது வழி இருக்கா?" மூழ்கிக் கொண்டிருக்கிற ஒரு கப்பலில் எலிகளைப் போல, 'ஏதாவது பத்திரமான தளம் இருக்கா...?'

அந்தப் பேருந்து நிறுத்தத்தில் எனக்கு எதிரில் அபிதா உட்கார்ந்திருக்கிறாள், உணர்ச்சியற்ற, உற்சாகமற்ற பதுமை போல, கையிலும் தோளிலும் கலர் கலரான பொம்மைகள். அவற்றின் பஞ்சு ரோமங்கள் மேனியெல்லாம் இரைந்து கிடக்கிறது. அபிதாவை இப்போது பார்த்தால் அடையாளமே தெரியாது. வறுமை அவள் பசுமையை மெல்ல மெல்ல உறிஞ்சிக் கொண்டு விட்டது. படிப்பை நிறுத்தி விட்டாள். மக்கள் கூட்டம் அதிகமிருக்கிற பொது இடங்களில் பொம்மைகளைப் பரப்பி வைத்து, கூவிக் கூவி விற்கிற விற்பனைப் பெண் வேலை பார்க்கிறாள். கடந்த நாட்களில் நிறைய அநியாயம் நடந்து மூச்சுத் திணறி விட்டது. அவள் அப்பா நம்பின பாவத்துக்குத் தண்டனையை ஏற்றுக் கொண்டுவிட்டார். அந்த ஆள் கொடுக்க முன்வந்த பணத்தை வாங்க அபிதா மறுத்து விட்டாள்.

"நாங்க ஊரைவிட்டுப் போறோம்."

"எனக்குப் பகீர் என்றது.

"ஏன்?"

"இன்னும் எங்ககிட்ட என்ன இருக்கு? எல்லாம் இறந்து காட்டிட்டோம். யாரும் விடறாப்ல தெரியல." வார்த்தைகள் மொத்தமும் அழுகையில் நனைந்து வந்தன. சம்பிரதாயம் தப்பாத முடிவு. "எங்க போறீங்க?"

"தெரியல. அநேகமா கும்பகோணம்."

நள்ளிரவு. சோடியம் லைட் வெளிச்சத்தில் ஒரு 'மெட்டாடோர்' நின்று கொண்டிருக்கிறது. சரஸ்வதி அம்மா நனிந்து கொண்டே, "போறோம்" என்றார். யாரும் முகத்தை நிமிர்ந்து பார்த்துக் கொள்ளவில்லை. பார்த்தால் அழுகை வரும். அர்ச்சனா, "அபி, சத்தியமா நாம துரதிர்ஷ்டசாலிங்க... இல்ல அதிர்ஷ்டசாலிங்க. பாரேன். டேய், ஆம்பிளப் பிள்ளைங்க, அழாதிங்கடா. நாங்க உங்கள மிஸ் பண்றோம்."

அபிதா, "இதுல கொஞ்சம் வாடகையும் சாவியும் இருக்கு. கார்த்தால வந்து கொடுத்துடு."

வண்டி கிளம்பிய போது, உயிரையே வேரோடு பிடுங்கிக் கொண்டு போகிறாற் போலிருந்தது. என்னன்னவோ அர்த்தமற்ற உணர்வுகள், என் மதுரையே ஒரே நாளில் சோபையிழந்து போயிற்று. சுரேஷ் கோலாப் ஒயின்னை நாடினான். கனகு, "இனிமேல் நமக்கு ஃப்ரெண்ட் வீடு இல்லடா" என்றான். விடிந்ததும் காலையில் மூவரும் சாவியைக் கொடுக்கச் சென்றபோது... எங்கள் கண்களை எங்களாலேயே நம்ப முடியவில்லை. ஆச்சர்யத்தில் உறைந்து போய் நிற்கிறோம். இன்ப அதிர்ச்சி! யாரும் போகவில்லை. வராந்தாவில் சரஸ்வதி அம்மா நின்று கொண்டிருக்கிறார்.

"அம்மா, என்னாச்சு? எப்படி? கனகு, யாரும் போகலைடா" மூவரும் கோரஸாக "எப்படி?"

"எல்லாம் உங்க அபிதான். பிள்ளையார் கோயில் தாண்டலை... அழுது அரற்றிட்டா, யார் வந்து கேட்டாலும் நான் பதில் சொல்லிக்கறேங்கறா... ஊரை விட்டு வர முடியாதுங்கறா... அர்ச்சனாவும் ஒரே அழுகை. அதான் திரும்பிட்டோம்."

"எங்க அபி? அர்ச்சனா?" ஓரத்தில் இலேசான வெட்கப்புன்னகையுடன் நின்று கொண்டிருக்கிறார்கள். "அப்பா, எத்தனை அழுகை, போறோம்... போறோம்னு!" பிரமிப்பில் கண்கள் விரிய, இமைக்காமல் அவர்களையே பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

"யூ ஆர் கிரேட் அபி! யூ டூ அர்ச்சனா!"

அவர்கள் பாதங்களுக்குக்கீழ் நிலம் விலகியிருக்கிறது. ஆனாலும் அவர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். ○



# சிவகாமியின் சபதம்

## இருபத்து ஏழாம் அத்தியாயம்

## இதயக் கனல்

சொல்ல முடியாத வியப்புடனே தம்மைப் பார்த்த சிவகாமியை சர்ப்பத்தின் கண்களையொத்த தமது காந்த சக்திவாய்ந்த கண்களினாலே நாகநந்தியடிகள் சற்று நேரம் உற்றுப் பார்த்தார்.

''சிவகாமி! நான் சொல்வதை நீ நம்பவில்லையா? என் நெஞ்சைத் திறந்து உனக்கு நான் காட்டக் கூடுமானால் இந்தக் கடின இதயத்தைப் பிளந்து இதற்குள்ளே இரவும் பகலும், ஜ்வாலை விட்டு எரிந்து கொண்டிருக்கும் தீக் கனலை உனக்கு நான் காட்ட முடியுமானால்...'' என்று சொல்லிக் கொண்டே பிக்ஷு தம் மார்பில் படீர் படீர் என்று இரண்டு தடவை குத்திக் கொண்டார். உடனே அவருடைய இடுப்பு வஸ்திரத்தில் செருகிக் கொண்டிருந்த சிறு கத்தியை எடுத்து, அதன் உறையைச் சடாரென்று கழற்றி எறிந்துவிட்டுத் தம் மார்பிலே அக் கத்தியால் குத்திக் கொள்ளப் போனார்.

சிவகாமி சட்டென்று அவருடைய கையைப் பிடித்துக் கத்தியால் குத்திக் கொள்ளாமல் தடுத்தாள்.

சிவகாமி தன் கரத்தினால் நாகநந்தியின் கையைப் பிடித்திருந்த சொற்ப நேரத்தில், இரண்டு அதிசயமான அனுபவங்களை அடைந்தாள். நாகநந்தியின் கரமும் அவருடைய உடல் முழுவதும் அப்போது நடுங்குவதை உணர்ந்தாள். ஒன்பது வருஷத்துக்கு முன்னால் புத்த பிக்ஷுவைச் சிவகாமி

**அமரர் கல்கி**


தன்னுடைய தந்தையையொத்தவராய்க் கருதியிருந்த போது சில சமயம் அவருடைய கரங்களைத் தற்செய லாகத் தொட்டுப் பார்க்க நேர்ந்ததுண்டு. அப்போது அவளுடைய மனத்தில், 'இது என்ன வஜ்ர சரீரம்! இவருடைய தேகமானது கேவலம் சதை, இரத்தம், நரம்பு, தோல் இவற்றின் சேர்க்கையே பெறா மல் முழுதும் எலும்பினால் ஆனதாக வல்லவா தோன்றுகிறது? எப் பேர்ப்பட்ட கடின



தவ விரதங்களை அநுஷ்டித்து இவர் தம் தேகத்தை இப்படிக் கெட்டிப் படுத்தி யிருக்க வேண்டும்? என்று எண்ணமிட் டதும் உண்டு. அதே புத்த பிக்ஷுவின் தேகம் இப்போது பழைய கெட்டித் தன்மையை இழந்து மிருதுத் தன்மையை அடைந்திருந்ததைச் சிவகாமி உணர்ந்து அதிசயித்தாள்.

நாகநந்தி சற்று நேரம் கையில் பிடித்த கத்தியுடன் சிவகாமியைத் திருதிருவென்று விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு சுய உணர்வு திடீரென்று வந்தவரைப் போல் கையிலிருந்த கத்தியைத் தூரத்தில்






விட்டெறிந்தார். உடனே சிவகாமியும் அவருடைய கையை விட்டாள்.

"சிவகாமி! திடீரென்று அறிவு கலங்கி மெய்மறந்து போனேன்! சற்று முன் உன்னிடம் என்ன சொன்னேன், எதற்காக இந்தக் கத்தியை எடுத்தேன் என்பதைக் கொஞ்சம் ஞாபகப்படுத்துவாயா?" என்று புத்த பிக்ஷு கேட்டதற்குச் சிவகாமி, "சுவாமி! சற்று முன்னால் தாங்கள் புத்த பிக்ஷு விரதத்தைக் கைவிடப் போவதாகவும், சிம்மாசனம் ஏறி இராஜ்யம் ஆளப் போவதாகவும் சொன்னீர்கள்" என்று கூறி விட்டுத் தயங்கினாள்.

"ஆம், சிவகாமி! நான் கூறியது உண்மை. அதற்காகவே நான் அஜந்தாவுக்குப் போகிறேன். முப்பத்தைந்து வருஷத்துக்கு முன்னால் அஜந்தா நதிக்கரையில் பிக்ஷு விரதம் ஏற்றேன். அதே நதியில் அந்த விர




தத்திற்கு ஸ்நானம் செய்துவிட்டு வரப் போகிறேன். அஜந்தா சங்கிராமத்தின் தலைவராகிய எந்தப் பூஜ்ய புத்த குருவினிடம் தீக்ஷை பெற்றேனோ, அவரிடமே இப்போது விடுதலை பெற்று வரப் போகிறேன். அது உனக்குச் சம்மதந்தானே?'' என்றார் நாக நந்தியடிகள். சிவகாமி, இன்னதென்று விவரந் தெரியாத பயத்தினால் பீடிக்கப் பட்டவளாய், "சுவாமி! இது என்ன காரியம்? இத்தனை வருஷ காலமாக அனுசரித்த புத்த தர்மத்தைத் தாங்கள் எதற்காகக் கைவிட வேண்டும்? அதனால் தங்களுக்கு உலக நிந்தனை ஏற்படாதோ? இத்தனை நாள் அனுஷ்டித்த விரதம், தவம் எல்லாம் நஷ்டமாகுமே? எந்த லாபத்தைக் கருதி இப்படிச் செய்யப் போகிறீர்கள்!" என்றாள்.

இப்படிக் கேட்டபோதே, அவளுடைய உள்ளுணர்ச்சியானது இந்தக் கேள்வியையெல்லாம் தான் கேட்பது மிகப் பெரிய தவறு என்றும், அந்தத் தவற்றினால் பிக்ஷு விரித்த வலையிலே தான் விழுந்து விட்டதாகவும் உணர்த்தியது.

"என்ன லாபத்துக்காக என்றா கேட்கிறாய்!" என்று திரும்பிக் கேட்டு விட்டு, "ஹா ஹா ஹா" என்று உரத்துச் சிரித்தார்.

"உனக்குத் தெரியவில்லையா? அப்படியானால், சொல்கிறேன் கேள்! முப்பத்தைந்து வருஷ காலமாக அநுஷ்டித்த புத்த பிக்ஷு விரதத்தை நான் கைவிடப் போவது உனக்காகத்தான். சிவகாமி! உனக்காகவே தான்! நான் அஜந்தாவில் சம்பிரதாயமாக, உலகம் அறிய, குருவினிடம் அனுமதி பெற்று விரதத்தை விடப் போகிறேன். ஆனால், விரத பங்கம் பல வருஷங்களுக்கு முன்னாலேயே நேர்ந்துவிட்டது. என்றைய தினம் உன்னுடைய தகப்பனார் ஆயனரின் அரண்ய வீட்டில், அற்புதச் சிலைகளுக்கு மத்தியிலே உயிருள்ள சிலையாக நின்ற உன்னைப் பார்த்தேனோ, அன்றைக்கே என் விரதத்துக்குப் பங்கம் வந்துவிட்டது. ஆனால், அதற்காக நான் வருத்தப் படவில்லை. உன்னுடன் ஒருநாள் வாழ்வதற்காகப் பதினாயிரம் வருஷம் நரகத்திலே கிடக்க வேண்டுமென்றால், அதற்கும் நான் ஆயத்தமாயிருக்கிறேன். உன்னுடைய அன்பை ஒரு கண நேரம் பெறும் பாக்கியத்துக்காக என்றென்றைக்கும் மோட்சத்தை இழந்து விட வேண்டும் என்றால் அதற்கும் சித்தமாயிருக்கிறேன்..."

சிவகாமி பயந்து நடுங்கினாள். இத்தனை நாளும் அவள் மனத்திற்குள்ளேயே புதைந்து கிடந்த சந்தேகம் இன்று உண்மையென்று தெரியலாயிற்று. ஆனால்... இந்தக் கள்ள பிக்ஷு

இத்தனை நாளும் ஏன் இதையெல்லாம் தம் மனத்திற்குள்ளே மறைந்து வைத்துக் கொண்டிருந்தார்? இத்தனை காலமும் தன்னைத் தொந்தரவு செய்யாமல், எந்த விதத்திலும் வற்புறுத்தாமல் சுதந்திரமாக ஏன் விட்டு வைத்திருந்தார்? அவள் மனத்தில் எழுந்த மேற்படி கேள்விக்குத் தட்சணமே மறுமொழி கிடைத்தது.

"சிவகாமி! என்னுடைய ஆத்மாவை நான் காப்பாற்றிக் கொள்வதற்கும் உன்னுடைய வாழ்க்கைச் சுகத்தை நீ பாதுகாத்துக் கொள்வதற்கும் ஒரு சந்தர்ப்பம் ஒன்பது வருஷத்துக்கு முன்னால் ஏற்பட்டது. மாமல்லன் இங்கு வந்து உன்னை அழைத்த போது நீ அவனுடன் போயிருந்தாயானால், அல்லது உன்னை அவனிடம் சேர்ப்பிப்பதற்கு எனக்காவது ஒரு சந்தர்ப்பம் கொடுத்திருந்தாயானால், நான் என் விரதத்தை ஒருவேளை காப்பாற்றிக் கொண்டிருப்பேன். நீயும் உன் வாழ்க்கை இன்பத்தைப் பாதுகாத்துக் கொண்டிருக்கலாம். ஆனால், நீ என் உண்மையான நோக்கத்தைத் தெரிந்து கொள்ளாமல் அநாவசியமாகச் சந்தேகித்து விஷக் கத்தியை என் முதுகின் மேல் எறிந்து காயப்படுத்தினாய். அப்போது அந்த விஷக்கத்தி என்னைக் கொல்லவில்லை. ஆனால், அதே கத்தியானது இப்போது என்னைத் தாக்கினால் அரை நாழிகை நேரங்கூட என் உயிர் நிலைத்திராது! சிவகாமி, சற்று முன்னால் என் கரத்தை நீ பிடித்தபோது உன் மனத்தில் ஒரு சந்தேகம் உதித்தது. ஒன்பது வருஷத்துக்கு முன்னால் இரும்பையும் கல்லையும் ஒத்துக் கெட்டியாயிருந்த என் கை இப்போது இவ்வளவு மிருதுத்தன்மை அடைந்திருப்பதைக் குறித்து நீ ஆச்சரியப்பட்டாய். இந்த மாறுதலுக்குக் காரணம் நீதான், சிவகாமி! கடுமையான தவ விரதங்களை அனுசரித்து என் தேகத்தை நான் அவ்வாறு கெட்டிப் படுத்திக் கொண்டிருந்தேன். வெகுகாலம் விஷ மூலிகைகளை உட்கொண்டு என் தேகத்தில் ஓடிய இரத்தத்தை விஷமாகச் செய்து கொண்டிருந்தேன். அந்தக் காலத்தில் என்னை எப்பேர்ப்பட்ட கொடிய விஷ நாகம் கடித்தாலும், கடித்த மறுகணம் அந்த நாகம் செத்துப் போகுமே தவிர எனக்கு ஒரு தீங்கும் நேராது. என்னுடைய உடம்பின் வியர்வை நாற்றம் காற்றிலே கலந்து விட்டால், அதன் கடுமையைத் தாங்க முடியாமல் சுற்று வட்டாரத்திலுள்ள விஷப் பாம்புகள் எல்லாம் பயந்து நாலு திசையிலும் சிதறி ஓடும். இதைப் பல சமயங்களில் நீயே நேரில் பார்த்திருக்கிறாய்..." என்று நாகநந்தி கூறியபோது, இரண்டு பேருடைய மனத்திலும் பத்து வருஷங்களுக்கு முன்னால் மண்டபப்பட்டுக் கிராமத்தில் வெண்ணிலா விரித்த ஓர் இரவிலே நடந்த சம்பவங்கள் ஞாபகத்தில் வந்தன.

"அப்பேர்ப்பட்ட இரும்பையொத்திருந்த என் தேகத்தை மாற்று மூலிகைகளினாலும் மற்றும் பல வைத்திய முறைகளை அநுசரித்தும் இப்படி மிருதுவாகச் செய்து கொண்டேன். என் இரத்தத்தில் கலந்திருந்த விஷத்தை முறிவு செய்தேன். சென்ற ஒன்பது வருஷம் இந்த முயற்சியிலேதான் ஈடுபட்டிருந்தேன். இடையிடையே உன்னைப் பல நாள் பாராமலிருந்ததன் காரணமும் இதுதான். சிவகாமி! முப்பது பிராயத்து இளைஞனைப் போல் இன்று நான் இல் வாழ்க்கை நடத்துவதற்குத் தகுந்தவனாயிருக்கிறேன். இத்தனைக்கும் பிறகு நீ என்னை நிராகரிக்க முடியாது. அப்படி நிராகரித்தாயானால் அதன் மூலம் எனக்கு நீ அளிக்கும் துன்பத்துக்குப் பரிகாரமாக நூறு நூறு ஜன்மங்களில் நீ பிராயச்சித்தம் செய்து கொள்ளும்படியிருக்கும்! அப்போதுங்கூட உன்னுடைய பாபம் தீர்ந்து விட்டதாகாது!"

சிவகாமியின் தலை வெடித்து விடும் போல் இருந்தது. தன் முன்னால் பிக்ஷு உட்கார்ந்து மேற்கண்டவாறு பேசியதெல்லாம் ஒருவேளை சொப்பனமாயிருக்கலாம் என்று ஒருகணம் எண்ணினாள். அந்த எண்ணத்தினால் ஏற்பட்ட ஆறுதலும் சந்தோஷமும் மறுகணமே மாயமாய் மறைந்தன. இல்லை, இதெல்லாம் சொப்பனமில்லை; உண்மையாகவே தன் கண் முன்னால் நடக்கும் பயங்கரமான நிகழ்ச்சிதான்.

இரத்தம் போல் சிவந்த கண்களைக் கொட்டாமல் புத்த பிக்ஷு தன்னை வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பது இதோ தன் எதிரில் உண்மையிலேயே நடக்கும் சம்பவந்தான்.

அபாயம் நெருங்கியிருப்பதை உணர்ந்

ததும் சிவகாமியின் உள்ளம் சிறிது தெளிவடைந்தது. இந்தக் கொடிய பைத்தியக்காரனிடமிருந்து தப்புவதற்கு வேறு வழியில்லை. வணங்கி வேண்டிக் கெஞ்சிக் கூத்தாடி எப்படியாவது கொஞ்சம் அவகாசம் பெற்றுக் கொள்ள வேண்டும். கடவுள் அருள் இருந்தால் இந்த வெறி கொண்ட பிக்ஷு அஜந்தாவிலிருந்து திரும்புவதற்குள் மாமல்லர் வந்து தன்னை விடுதலை செய்து கொண்டு போவார். இல்லாவிடில், வேறு ஏதேனும் யுக்தி செய்ய வேண்டும். முற்றத்துக் கிணறு இருக்கவே இருக்கிறது.

எனவே, பிக்ஷுவிடம் மன்றாடி வேண்டிக் கொள்வதற்காகச் சிவகாமி வாய் திறந்தாள்.

பிக்ஷு அதைத் தடுத்து, "வேண்டாம், சிவகாமி! இன்றைக்கு நீ ஒன்றுமே சொல்ல வேண்டாம். அவசரப்பட்டு எனக்கு மறுமொழி சொல்ல வேண்டாம். அஜந்தா போய் வந்த பிறகே உன்னிடம் இதைப் பற்றியெல்லாம் பிரஸ்தாபிக்க வேண்டுமென்று நான் எண்ணியிருந்தேன். ஆனால், வாதாபிக்கு வெளியே இன்று இரவு நாங்கள் தங்குவதற்குரிய இராஜாங்க விடுதியை அடைந்ததும், உன்னிடம் என் மனத்தைத் திறந்து காட்டி விட்டுப் போவதுதான் உசிதம் என்றும், எல்லா விஷயங்களையும் நன்றாக யோசித்து முடிவு செய்ய உனக்குப் போதுமான அவகாசம் கொடுக்க வேண்டும் என்றும் முடிவு செய்து கொண்டு திருப்பி வந்தேன். உன்னை நான் வற்புறுத்தப் போவதில்லை. பலவந்தப்படுத்தப் போவதில்லை. உனக்கு இஷ்டமில்லாத காரியத்தை ஒருநாளும் செய்யச் சொல்ல மாட்டேன். ஆனால், நான் சொல்ல வேண்டியதை மட்டும் சொல்லி விடுகிறேன். ஒரே மூச்சில் இப்போதே சொல்லி விடுகிறேன்; சற்றுப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிரு. நான் அஜந்தாவிலிருந்து திரும்பி வந்த பிறகு நீ உன்னுடைய தீர்ப்பைச் சொல்லலாம்!"

பிக்ஷுவின் இந்த வார்த்தைகள் சிவகாமிக்கு ஒருவாறு ஆறுதல் அளித்தன. அவளுடைய பீதியும் படபடப்பும் ஓரளவு குறைந்தன.

நாகநந்தி ஆரம்பத்திலிருந்து மறுபடியும் கதையை ஆரம்பித்தார்: "எந்த நேரத்தில் உன் தந்தையின் அரண்ய வீட்டில் உன்னை நான் பார்த்தேனோ, அதே நேரத்தில் என்னுடைய இதயத்திலிருந்து என் சகோதரனையும் சளுக்க சாம்ராஜ்யத்தையும் அப்புறப்படுத்திவிட்டு, அவர்கள் இருந்த இடத்தை நீ ஆக்கிரமித்துக் கொண்டாய். அது முதல் என்னுடைய யோசனைகள், ஏற்பாடுகள் எல்லாம் தவறாகவே போய்க் கொண்டிருந்தன. அந்தத் தவறுகள் காரணமாகவே வாதாபிச் சக்கரவர்த்தியின் தென்னாட்டுப் படையெடுப்பு வெற்றியடையாமற் போயிற்று.


"ஆகா! அந்தக் காலத்தில் நான் அநுபவித்த சொல்லொணாத மனவேதனையை மட்டும் நீ அறிந்தாயானால், உன் இளகிய நெஞ்சம் கரைந்து உருகி விடும். ஒரு பக்கத்தில் உன் பேரில் எனக்கு ஏற்பட்டிருந்த காதலாகிய கனல் என் நெஞ்சைத் தகித்துக் கொண்டிருந்தது. அதே சமயத்தில் உன்னைச் சேர்ந்தவர்கள், உன்னோடு பழகியவர்கள், உன்னுடைய அன்புக்குப் பாத்திரமானவர்கள் மீது எனக்கேற்பட்ட அளவில்லாத அசூயை பெருநெருப்பாக என் உடலை எரித்தது. அப்போதெல்லாம் என் நெஞ்சில் நடந்து கொண்டிருந்த தேவாசுர யுத்தத்துக்குச் சமமான போராட்டத்தை நீ அறிந்தாயானால், பெரிதும் பயந்து போயிருப்பாய். ஒருசமயம் உன்னைச் சேர்ந்தவர்கள் எல்லாரையும் கொன்றுவிட வேண்டும் என்று எனக்குத் தடுக்க முடியாத ஆத்திரம் உண்டாகும். ஆயினும் பின்னால் உனக்கு அது தெரிந்துவிட்டால் உன்னுடைய அன்பை என்றென்றைக்கும் இழந்து விட நேரிடுமே என்ற பயம் என்னைக் கோழையாக்கியது. மாமல்லனையும் மகேந்திர பல்லவனையும் கொல்லுவதற்கு எனக்கு எத்தனையோ சந்தர்ப்பங்கள் வாய்த்தன. ஆனால், ஒவ்வொரு சமயமும் 'உனக்குத் தெரிந்துவிட்டால்...?' என்ற நினைவு என்னைத் தடுத்தபடியால் அவர்கள் தப்பிப் பிழைத்தார்கள். பரஞ்சோதி காஞ்சியில் பிரவேசித்த அன்று உன்னை மதயானை தாக்காமல் காப்பாற்றினான் அல்லவா? அந்தக் காரணத்துக்காகவே அவனை அன்றிரவு நான் சிறையிலிருந்து தப்புவித்து உன் வீட்டுக்கு அழைத்து வந்தேன். ஆனால், அவனுக்கு நீ நன்றி செலுத்துவதைப் பார்க்க என்னால் சகிக்க

முடியவில்லை. கலைவாணி! உன் தந்தை ஆயனருக்கு உன்னிடமுள்ள செல்வாக்கைப் பார்த்துக்கூட நான் அசூயை அடைந்தேன். ஆயினும் உன்னைப் பெற்ற புண்ணியவான் என்பதற்காக அவரை வாளால் வெட்டப் போன வீரனின் கையைப் பிடித்துத் தடுத்து உயிரைக் காப்பாற்றினேன். அதுமுதல் உன் தந்தையைக் காப்பாற்றிக் கொடுத்ததே என்ற காரணத்துக்காக இந்தக் கையை வாழ்த்திக் கொண்டிருக்கிறேன்."

இதைக் கேட்ட சிவகாமியின் நெஞ்சம் உண்மையிலேயே இளகித்தான் விட்டது. 'இந்தப் புத்த பிக்ஷு இரக்கமற்ற ராட்சதனாயிருக்கலாம்; இவருடைய இருதயம் பைசாசத்தின் இருதயமாயிருக்கலாம்; இவருடைய தேகத்தில் ஓடும் இரத்தம் நாகசர்ப்பத்தின் விஷங் கலந்த இரத்தமாயிருக்கலாம்; ஆனாலும் இவர் என் பேரில் கொண்ட ஆசையினால் என் தந்தையின் உயிரைக் காப்பாற்றினார் அன்றோ?"

சிவகாமியின் மனோநிலையை ஒருவாறு அறிந்து கொண்ட புத்த பிக்ஷு ஆவேசங் கொண்டவராய் மேலும் கூறினார்:

"கேள், சிவகாமி! உன்னைப் பெற்றவர் என்பதற்காக ஆயனரைக் காப்பாற்றினேன். உன்னை விரோதிப்பவர்களை நான் எப்படிப் பழி வாங்குவேன் என்பதற்கும் ஓர் உதாரணம் சொல்லுகிறேன். இந்த வாதாபியில் நீ எவ்வித அபாயமும் இன்றி நிர்ப்பயமாக இத்தனை காலமும் வாழ்ந்து வருகிறாயல்லவா? இதற்குக் காரணம் என்னவென்று ஒருவேளை நீ ஊகித்திருப்பாய். நீ என்னுடைய பாதுகாப்பில் இருக்கிறாய் என்று எல்லோருக்கும் தெரியுமாதலால்தான், யாருமே உன் அருகில் நெருங்குவதில்லை. இதைக் குறித்து இந் நகரத்து அரண்மனையில் ஒரு பெண்ணுக்கு அசூயை உண்டாயிற்று. அவள் பட்டத்து ராணியின் சகோதரி. விஷம புத்தியுள்ள அந்தப் பெண் என்னைத் தன்னுடைய மோக வலையில் ஆழ்த்துவதற்கு மிக்க பிரயத்தனம் செய்தாள். அது பலிக்காமல் போகவே, ஒரு நாள் அவள் உன்னைக் குறிப்பிட்டு நிந்தை மொழி கூறினாள். 'அந்தக் காஞ்சி நகர்க் கலைவாணியின் அழகு எனக்கு இல்லையோ?'





என்று கேட்டாள். மறுநாள் அவள் என்னை நெருங்கியபோது, அவளுடைய கையை நான் பிடித்து, என் கைவிரல் நகத்தினால் ஒரு கீறல் கீறினேன். அன்றிரவு அவள் தூங்கி, மறுநாள் காலையில் எழுந்து கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக்கொண்டாள். அவ்வளவுதான்; அவளுடைய மூளை கலங்கிப் பைத்தியம் பிடித்துவிட்டது! அவ்வளவு பயங்கரத் தோற்றத்தை அவள் அடைந்திருந்தாள். ஒருவருமறியாமல் அவள் இந்நகரை விட்டு வெளியேறிக் காட்டிலும், மலையிலும் வெகுகாலம் அலைந்து கொண்டிருந்தாள். இப்போது அவள் காபாலிக மதத்தினரின் பலிபீடத்தில் அமர்ந்து பலி வாங்கி உண்டு உயிர் வாழ்ந்து வருகிறாள்..''

சிவகாமி பழையபடி பீதி கொண்டாள். இந்த வெறி பிடித்த பிக்ஷு சீக்கிரம் போய்த் தொலைய மாட்டாரா என்று மனத்திற்குள் எண்ணமிட்டாள்.

''சிவகாமி! சில நாளைக்கு முன் அந்தக்காளி மாதாவைத் தற்செயலாக நான் சந்திக்க நேர்ந்தது. அவள் என்ன சொன்னாள் தெரியுமா? 'சுவாமிகளே! ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் உம்முடைய காதலி சிவகாமியை நீங்கள் என்னிடம் ஒப்புவித்தேயாக வேண்டும். அவளுடைய உடலைப் புசித்தால்தான் என்னுடைய பசி தீரும்!'' என்றாள் பைத்தியக்காரி. அப்படி உன் உடலை புசிப்பதாயிருந்தால் அவளிடம் நான் கொடுத்து விடுவேன் என்று எண்ணுகிறாள்! அவளை விட நூறு மடங்கு எனக்குத்தான் பசி என்பதை அவள் அறியவில்லை! உன்னைப் பார்க்கும்போதெல்லாம் உன்னை அப்படியே விழுங்கி விட வேண்டும் என்று எனக்குண்டாகும் பேராவலை அவள் என்ன கண்டாள்?

திடீரென்று நாகநந்தி பிக்ஷு மலைப்பாம்பாக மாறினார். மலைப்பாம்பு வாயை அகலத் திறந்து கொண்டு, பிளந்த நாக்கை நீட்டிக் கொண்டு, தன்னை விழுங்குவதற்காக நெருங்கி வருவது போல் சிவகாமிக்குத் தோன்றியது. ''ஐயோ!'' என்று அலறிக் கொண்டு அவள் பின்னால் நகர்ந்தாள். கண்களையும் இறுக மூடிக் கொண்டாள்.

நாகநந்தி சிரித்தார். ''சிவகாமி! பயந்து விட்டாயா? கண்களைத் திறந்து பார்; புத்த பிக்ஷுதான் பேசுகிறேன்!'' என்றார்.

சிவகாமி கண்களைத் திறந்து பார்த்தாள். சற்று முன் தான் கண்ட காட்சி வெறும் பிரமை என்பதை உணர்ந்து கொண்டாள். ஆயினும் அவளுடைய கண்களில் பீதி நிறைந்திருந்தது.

நாகநந்தி எழுந்து நின்று சொன்னார்: ''சிவகாமி! நான் சொன்னதையெல்லாம் யோசித்துப் பார்! ஒருவேளை எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது என்று நீ நினைக்கிறாய் போலும்! நல்லவேளையாக எனக்கு இன்னும் பைத்தியம் பிடிக்கவில்லை. என் அறிவு தெளிவாய்த்தானிருக்கிறது. ஆனால், இன்னும் கொஞ்ச நாள் வரையில் உன்னிடம் நான் கொண்ட காதல் நிறைவேறாமல் போனால் எனக்குப் பைத்தியம் பிடித்தாலும் பிடித்துவிடும். அப்புறம் நான் என்ன செய்வேனோ தெரியாது.

''சிவகாமி நான் போய் வருகிறேன். நான் திரும்பி வருவதற்குள் உன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு எனக்கு ஒரு முடிவு சொல்ல வேண்டும். உனக்காக நான் இதுவரை செய்திருக்கும் தியாகங்களையெல்லாம் காட்டிலும் மகத்தான தியாகம் ஒன்றைச் செய்யப் போகிறேன். அதைப் பற்றி நான் திரும்பி வருவதற்குள் நீயே தெரிந்து கொள்வாய். அதைத் தெரிந்து கொண்ட பிறகு நீ என் பேரில் இரக்கங் கொள்ளாமலிருக்க முடியாது. என் கோரிக்கைக்கு இணங்காமலிருக்கவும் முடியாது.''

இவ்விதம் சொல்லிவிட்டு நாகநந்தி சிவகாமியை அளவில்லாத ஆர்வம் ததும்பும் கண்களினால் சற்று நேரம் உற்றுப் பார்த்தார். சட்டென்று திரும்பி வாசற் பக்கம் சென்றார்.

பிக்ஷு சென்ற பிறகு சிவகாமியின் உடம்பு வெகு நேரம் வரையில் நடுங்கிக் கொண்டேயிருந்தது.

(தொடரும்)



• சுப்ரமணியன்

• சுரேஷ் கண்ணன்

• கனிமொழி

• ப்ளோரன்ஸ் சுதா

• சங்கீதா

• விஜோரா

**வ**ங்கக் கடலே பொங்கி எழுந்தது போல், நமது ஆறாவது பட்டி மன்றம் கரையைக் கடந்தது தூத்துக்குடி ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரியில். 'நவீன அறிவியல் காட்டுவது ஆக்கப் பாதையா? அழிவுப் பாதையா?' என்ற இன்றைய பிரச்னைதான் தலைப்பு. கல்லூரியின் தலைவர் ஏ.பி.சி.வீ. சொக்கலிங்கம் தலைமையில், கல்லூரியின் முதல்வர், சொல்லருவி இளம்பிறை மணிமாறன் நடுவராய் இயங்கிய தூத்துக்குடி கல்லூரிப் பட்டிமன்றம், இதோ உங்கள்

• கல்கி ஆசிரியர்





• சொக்கலிங்கம்

# அறிவியலா? அழிவியலா?



• இளம்பிறை மணிமாறன்

கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தாய் உங்கள் காதுகளில் ஒலிக்கிறது, கேளுங்கள்!

**அழிவுப் பாதைக்கே...**

*– எஸ். ப்ளோரன்ஸ் சுதா (இரண்டாமாண்டு முதுகலை வரலாறு. வ.உ.சிதம்பரம் கல்லூரி)*

• பசுமைப் புரட்சியையும், தானியத் தன்னிறைவையும் கண்ட பாரத தேசத்திற்கு, இவை எப்படிச் சாத்தியமாயிற்று நண்பர்களே? அதிக விளைச்சலைப் பெறுவதற்காக இரசாயன உரங்களைக் கொட்டி, பூச்சிக் கொல்லிகளைப் புகுத்தியதால் தானே! விளைவு! உணவுப் பொருட்களில் இன்று கொடிய இரசாயனப் பொருட்களும், பூச்சிக் கொல்லிகளும் கலந்திருக்கின்றன. குடிக்கிற தண்ணீரில் பூச்சிக் கொல்லிகள் ஊடுருவி விட்டன. அவ்வளவு ஏன், பசுவின் பாலில் கூட நஞ்சு! நவீன அறிவியலின் பரிசைப் பார்த்தீர்களா?

• உடல் வலி என்று டாக்டரிடம் சென்றேன். இரண்டு மாத்திரைகளைக் கொடுத்தார். நோய் ஒன்று, மாத்திரை மட்டும் இரண்டா என்றேன்? 'புரூஃபென்' என்ற மாத்திரையைக் காட்டி, இது உடல் வலிக்கு என்றார். அடுத்து 'ஸின்டாக்' என்ற மாத்திரையைக் காட்டி, புரூஃபென் சாப்பிடுவதால் ஏற்படும் பக்க விளைவுகளைத் தடுப்பதற்காகத்தான் இந்த இரண்டாவது மாத்திரை என்றார். இது என்ன கொடுமை? ஒரு நோய்க்கு கொடுக்கப்படும் மாத்திரை இன்னொரு நோய்க்குக் காரணமாக அமையுமா? இதுதானா நவீன அறிவியல்?

**ஆக்கப் பாதைக்கே!**

*– பி. சுப்ரமணியன் (முதலாமாண்டு கணிதம். வ.உ.சிதம்பரம் கல்லூரி)*

• அன்று சின்னஞ்சிறு சிமிழ் விளக்கு! இன்று விசையை அழுத்தினால் வீடே ஜொலிக்கும் மின் விளக்கு! அன்று ஏட்டிலே எழுத எழுத்தாணி! இன்று கண் கவர் காகிதம். கருத்தைக் கவரும் கணிப்பொறி!

• அன்று மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டிப் போரடித்த காலம் உண்டு! இன்று! அறுவடை செய்ய எந்திரம். பதர் நீக்கி பக்குவ நெல் மணிகளை மட்டும் தர எந்திரம். எல்லாம் நவீன அறிவியலின் சூப்பர் தந்திரம்! கலப்பின உத்தியைக் கண்டுபிடித்து, அதன் மூலம் எத்தனை விதமான வித்தக விதைகளைக் கண்டோம்!

• காசி நகர்ப் புலவர் பேசும் உரையை காஞ்சியில் கேட்க, கருவி செய்வோம் என்றான் பாரதி! அமெரிக்க அதிபர் புஷ்ஷுக்குத் தலை வலி என்றால் ஆண்டிப்பட்டியிலிருக்கும் முத்துப்பாண்டிக்குத் தெரிந்து போகிறது. செயற்கைக்கோள் தொலைத் தொடர்பு இன்று பரந்து விரிந்த உலகைப் பனைமரத்துப்பட்டி போல சின்னஞ் சிறு கிராமமாய்ச் சுருக்கிவிட்டது.

• ஒரு காலத்தில் வங்கியில் ஆயிரம் ரூபாய் போடவோ, எடுக்கவோ குறைந்தது அறுபது நிமிடங்கள் தேவை! இன்றோ ஆறு நொடிகள்

**கல்கி நடத்திய ஏட்டிக்குப் போட்டி கல்லூரிப் பட்டிமன்றம்**

## ஒரு ரூபாய் அட்மிஷன்!

*தமிழவேள் ஏ.பி.சி. வீரபாகுவால் 1973ல் தொடங்கப்பட்டு வெள்ளி விழா கண்டுள்ள இம்மகளிர் கல்லூரியில் இன்றளவும் ஒரு ரூபாய் சேர்க்கைக் கட்டணம் வாங்குவதோடு சரி! காரணம் ''கல்வியை வியாபாரமாக்கி விடக் கூடாது'' என்ற நிறுவனரின் கொள்கைக்கிணங்க இன்று வரை மாணவர் சேர்க்கை, வேலை வாய்ப்பு இரண்டுக்குமே பணம் பெற்றுக் கொள்ளாத உறுதியோடு திகழ்கிறது வ.உ.சி. கல்விக் கழக கல்விக் கூடங்கள். சமூக நிலையிலும் பொருளாதாரத்திலும் பின் தங்கிய ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள், கல்விக் கட்டணம், தங்குமிடம், உணவு உட்பட அனைத்தையும் இங்கே இலவசமாகப் பெறு கின்றனர். சமூகத்தின் பல பிரிவினருக்கும் வேறுபாடின்றி வேலை வாய்ப்பு அளித்து வருவதில் ஒரு முன் மாதிரிக் கல்விக் கழக மாகவும் திகழ்கிறது.*

போதும். அதுதான் ஏ.டி.எம். சேவை. நவீன அறிவியல் வரங்களை அள்ளித்தரும் தேவதை!

**அழிவுப் பாதைக்கே...**

*– ஆர்.சுரேஷ் கண்ணன் (மூன்றாமாண்டு ஆங்கிலம், வ.உ.சிதம்பரம் கல்லூரி)*

• நவீன அறிவியல் கண்ட ஸ்கேனிங் அற்புதமான கருவிதான். அதுவே கர்ப்பத்தி ருப்பது பெண் குழந்தை எனக் காட்டிக் கொடுக்கும் எட்டப்பனாகும் போது, கரு வறையே இங்கு கல்லறையாகி விடுகிறது! இது தான் ஆக்கப்பாதையா?

• "மனிதகுலம் சமுதாய ரீதியில் வளராத நிலையில், இந்த முட்டாள்களின் கையில் அணுகுண்டு விஞ்ஞானத்தைக் கொடுத்து விட்டேன். குரங்கின் கையில் தீவட்டியைக் கொடுத்தது போல் ஆயிற்று. அதற்காக நான் மனம் வருந்துகிறேன்" எனும் ஐன்ஸ்டீனின் வார்த்தைகள், எத்தனை வலியைக் கொடுத்தது நவீன அறிவியல் என்று உணர்த்துகின்றன.

• வெடி மருந்தைக் கண்டறிந்த ஆல்ஃபிரெட் நோபல் அதனால் உலகம் அழிவதைக் கண்டு மனம் வருந்தி, இந்த அழிக்கும் விஞ்ஞானத்தால் நான் பெற்ற பணத் தைக் கொண்டு, மனித நேயத்தை தமது எழுத்தின் மையமாகக் கொள்ளும் ஓர் இலக்கிய வாதிக்கும், உலக அமைதிக்காகப் பாடுபடும் ஒருவருக்கும் பரிசாக அளிக்க உயில் எழுதி னார். அதுதான் இன்று நோபல் பரிசு! ஆர்.டி.எக்ஸ்"ம், அணு ஆயுதப் போட்டியும் பூமியை ஆக்கிவிடும் தரிசு! இதற்கு ஒரு சோற்றுப் பதமாக, நினைத்த மாத்திரத்தில் நெஞ்சை உலுக்கும் நிகழ்கால நிஜமாக ஹிரோஷிமா, நாகசாகி நகரங்கள் நிற்கின்றன. இன்னும் அங்கே பச்சைப் புல் முளைக்க வில்லை!

**ஆக்கப் பாதைக்கே!**

*– ஏ.வினோரா (மூன்றாமாண்டு விலங்கியல். தூய மரியன்னைக் கல்லூரி)*

• ஸ்கேனிங் கருவறையில் இருக்கும் குழந் தையின் வளர்ச்சியைக் கண்டறிந்து சொல் கிறது. ஸ்கேனிங் முறையைப் பயன்படுத்தி குழந்தைகளைக் கொல்வது மனித மனம் தானே தவிர, நவீன விஞ்ஞானம் அல்ல. கருவறையில் மட்டுமல்ல, சோதனைக் குழாயிலும் குழந் தைக்கு வித்திடுவோம்... குழந்தையின்மை என்ற வார்த்தைக்கு முற்றுப்புள்ளி வைத்திடுவோம் என்கிறது விஞ்ஞானம்.

• அன்று என் தந்தை தாய்லாந்திலுள்ள எனது தாய் மாமனுக்குக் கடிதம் மூலம் தகவல் தந்தார். அது போய்ச் சேரவே ஒரு மாதம் பிடித்தது. இன்று எனது மாமன் மகனோடு பத்தே ரூபாயில் பத்து நிமிடம் பேசுகிறேன். அவனது முகத்தை நேருக்கு நேர் பார்த்தபடி இன்டர்நெட் டெலிபோனில் பேசுகிறேன். நவீன அறிவியலின் இந்த மகத்தான கண்டு பிடிப்பிற்கு மனித இனம் கொடுக்க முடியுமா விலை!

**அழிவுப்பாதையே...**

*– எஸ். கனிமொழி (முதலாண்டு ஆங்கிலம். ஏ.பி.சி. மகாலெட்சுமி மகளிர் கல்லூரி)*

• நவீன அறிவியலால் மனிதனின் உடலு ழைப்பு குறைந்து விட்டது. உடலுழைப்பைக் கேவலமாகக் கருதத் தொடங்கிவிட்டான்! விளைவு! எங்கும் எதிலும் எந்திரமயம்! ரோபோட்தனம்.

அம்மி போய் மிக்ஸி வந்தது.

உரல் போய் கிரைண்டர் வந்தது.

ஆரோக்கியம் போய் ஆயிரக்கணக்கில் நோய்கள் பிறந்தன.

• செயற்கைக் கோள் தொலைக்காட்சியோ, மேலைநாட்டுக் கலாசாரக் குப்பைகளையும், கழிசடை ஆபாச ஆடைக் கலாசாரத்தையும் டிஷ் ஆண்டெனா வழியே நமது வீடுகளின் வரவேற்பறைக்குள்ளேயே கொட்டுகிறது.

• எல்லாவற்றையும் விட, நவீன அறிவியல் நமது நிலம், நீர், காற்று, ஆகாயம் அனைத்தை யும் மாசு மயமாகிவிட்டது. குடிப்பதற்குப் பச்சைத் தண்ணீர் வேண்டுமா, சுடு தண்ணீர் வேண்டுமா என்று கேட்பது வழக்கம்! திருப்பூர் சென்றால் பச்சைத் தண்ணீர் என்ன? நீலத் தண்ணீர், மஞ்சள் தண்ணீர் என்று பல நிறத் தண்ணீர் பார்க்கலாம், பருகலாம்! புற்று நோயைப் பரிசாகப் பெறலாம்! இதுதான் நவீன அறிவியலா?

**ஆக்கப்பாதைக்கே...**

*– எஸ் சங்கீதா (இரண்டாமாண்டு கணிதம். ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி)*

* சார்ஸ் பயத்தால் ஹாங்காங்கில் கடந்த ஆகஸ்ட் மாதம் வரை பள்ளிக் கூடங்கள் திறக்கப்படாமல் மூடியே இருந்தன. இதனால் அங்கே சுமார் லட்சம் மாணவர்களின் கல்வி கவலைக்கிடமாகி விட்டதா என்று கேட்கலாம்! ஆனால் அங்கே நடந்ததோ வேறு. இன்டெராக்டிவ் பல்கலைக்கழகத்தின் மூலமாக அனைத்து மாணவர்களுக்கும், இன்டர்நெட் வழியாக கல்வி கற்றுக் கொடுக்கப்பட்டது. இது தான் நவீன அறிவியலின் சூப்பர்பவர்.

* செப்புக் கம்பி ஒன்றில் அதிகபட்சமாய் ஐம்பது செய்திப் பாதைகளைத் தான் அடக்க முடியும். ஆனால் இன்று கண்ணாடி இழை எனப்படும் ஆப்டிகல் ஃபைபர் கேபிள் மூலம் எண்ணூறு செய்திப் பாதைகளை அடக்க முடியும் என்பது எத்தனை பெரிய விஞ்ஞான விந்தை!



• மாணவர் கூட்டம்...

**ஆய்வும் தீர்ப்பும்**

*– பேராசிரியை இளம்பிறை மணிமாறன்*

நாம் வாழும் உலகின் போக்கையும், நோக்கையும், ஏன் வாழ்க்கை முறையையே கூட நவீன அறிவியல் மாற்றிவிட்டது. அறிவியலின் துணை கொண்டு வான்வெளியில் தவழும் கோள்களை மனிதன் ஆராய்கிறான். எத்தனை விதமான நோய்களைக் குணமாக்குகிறான்! டி.என்.ஏவை மாற்றும் ஜெனிடிக் என்ஜினியரிங் நுட்பத்தால் பாதுகாப்பான (protective antigens) ஆன்டிஜென்ஸ் உற்பத்தி செய்ய முடியும் என்கிறான்! அதன் வழியே நோய் உண்டாக்கும் ஜீன்ஸ், ஜீனோம்ஸ்களை (genes, genomes) நீக்கி விடலாம் என்கிறான். இப்படித் தங்களது மகத்தான கண்டுபிடிப்புகளால் மனித குலத்தின் மேன்மைக்குத் தங்கள் உணவையும், உறக்கத்தையும் மறந்து, தங்களை அர்ப்பணித்தவர்கள், அர்ப்பணித்துக் கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்! இன்று நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் கண்டு பிடிப்புகளின் பின்னணியில், விஞ்ஞானிகள் பட்ட காயங்கள் ஏராளம்!

என்றாலும் விஞ்ஞானிகளே, 'நவீன அறிவியலானது மனிதனை அழிவுப்பாதையை நோக்கி அழைத்துச் செல்வது வருந்தத் தக்கது' என்று கையைப் பிசைந்து பேசிய வாசகங்களும் ஏராளம். இரண்டாம் உலகப் போரில் அணு ஆயுதம், மனித குலத்தை நசுக்கிப் பார்த்த கொடுமை சாதாரணமானதல்ல! பல வகையிலும் உலகை, அழிவுப்பாதைக்கும் அறிவியல் அழைத்துச் செல்கிறது என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை! ஆனால் இன்றைய உலகின் நடைமுறைகளையும், நாளைய உலகின் தேவைகளையும் எண்ணிப் பார்த்து, அறிவியலின் பாங்கினை ஆராய்தல் வேண்டும். இந்த உலகின் எதிர்காலமே நவீன விஞ்ஞானத்தை நாம் எப்படிப் பயன்படுத்தப் போகிறோம் என்பதில் தான் அடங்கியிருக்கிறது.

நமது குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல்கலாமைப் பார்த்து, ஐந்தாம் வகுப்பு படிக்கும் சிவாமிகா என்ற சிறுமி கேட்டாள்! "ஆராய்ச்சி மூலம் எவ்வளவோ கண்டுபிடித்தீர்கள்! அவற்றில் எதைக் கண்டு பிடித்தபோது அதிகம் மகிழ்ச்சி அடைந்தீர்கள்?" என்று! அதற்கு அவர் அளித்த பதில், "நான்கு நண்பர்களுடன் சேர்ந்து ராக்கெட் செய்தேன். அக்னி ஏவுகணை செய்தேன். அணு ஆயுதம் தயாரித்தேன். விசைக் காந்தம் செய்தேன். எடை குறைவான உலோகத்தை உருவாக்கினேன். இதனைப் பார்வையிட்டவர்கள், "இந்த உலோகம் கொண்டு, கை, கால் இழந்தவர்களுக்கு எடை குறைந்த செயற்கை கை, கால் உருவாக்கலாமே'' என்றனர். அதன்படி ஊனமுற்றவர்களுக்கு உதவிய இந்தக் கண்டு பிடிப்புதான் எல்லாக் கண்டுபிடிப்பு களையும் விட என்னை மகிழ்வித்தது"என்றார்.

எனவே அறிவியல் அறிவியலாக இருக்க வேண்டுமே தவிர, அழிவியலாக மாறிவிடக் கூடாது. அழகிய ரோஜாவில் முள் இருப்பது போல், ஆக்கபூர்வமான அறிவியலுக்குள் அழிவுச் சக்தி இருந்து கொண்டுதானிருக்கிறது. எனினும் அதை அழிவை நோக்கிச் செல்ல விடாமல், மனித நேயத்தோடு விஞ்ஞானம் ஒன்று பட்டு செயல்படும் நிலையை உருவாக்குதல் வேண்டும். இந்த வகையில் சீர்தூக்கிப் பார்த்தால் அழிவுப்பாதையைவிட, பெரும்பாலும் ஆக்கப்பாதைக்கே நம்மை அழைத்துச் செல்கிறது அறிவியல்.

தொகுப்பு: ஜெய்

# ஆஹா! ரூ 50,000 பரிசு!

**கோவை வாசகர்களுக்காக மட்டுமே**
**கல்கி**
**வழங்கும் கலக்கல் குவிஸ் போட்டி**

வந்தாச்சு இரண்டாவது கூப்பன்! ரூ.50,000 மெகா பரிசை அள்ள நீங்கள் செய்ய வேண்டியது ஈஸியான வேலை தான்.

கீழே உள்ள கூப்பனில் இடம் பெற்றுள்ள கேள்விகளுக்குப் பதில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அடுத்து வரும் 21, 28 செப்டெம்பர் மற்றும் 5, 12 அக்டோபர் இதழ்



## ஆஹா! ரூ.50,000 பரிசு!

## குவிஸ் போட்டி கூப்பன் - 2

1. பேரூர் பட்டீஸ்வரர் கோவிலைக் கட்டிய மன்னனின் பெயர் ...............................
2. பனியன் உற்பத்தி, கொடிகாத்த குமரன் என்றெல்லாம் குறிப்பிட்டவுடன் நினைவுக்கு வரும் ஊர்...............................
3. கோவையிலிருந்து பத்துக் கிலோமீட்டர் தொலைவில் ...............................என்ற பகுதியில் அமைந்துள்ளது விமான நிலையம்.
4. கோவை மாநகராட்சியால் நிர்வகிக்கப்படும் (ஒரு மினி ஜூ அடங்கிய) பூங்கா பிரபல சுதந்தரப் போராட்ட வீரர்...............................பெயரில் விளங்குகிறது.
5. கோவைக்கு அருகிலுள்ள தீம் பார்க்............................... (பெயரில் இடி இடிக்கும்)
6. கோவை அருகே சிவன், பிரம்மா, விஷ்ணு மூவருக்கும் சேர்த்து அமையப் பெற்ற கோயில்...............................

களிலும் இதே போன்று குவிஸ் கூப்பன்கள் இடம் பெறும். ஆறாவது வார இறுதியில் ஆறு கூப்பன்களையும் நிரப்பி, உங்கள் பெயர், விலாசத்துடன் எங்களுக்கு அனுப்ப வேண்டும்.

- அனைத்துக் கேள்விகளுக்கும் சரியான பதில்கள் எழுதிய கோவை மாவட்ட வாசகர் ஒருவருக்கு ரூ.50,000 பரிசு வழங்கப் படும்.
- ஒருவருக்கு மேற்பட்ட வாசகர்கள் சரியான பதிலை எழுதியிருந்தால், இருக்கவே இருக்கிறது குலுக்கல் முறை.
- ஆறுதல் பரிசுகளாக, சென்னை, தி. நகர் **P.R.** ஜுவல்லரி வழங்கும் ரூ.120/- மதிப்புள்ள வெள்ளி காமாட்சி விளக்கு நூறு பேருக்குக் காத் திருக்கின்றன.
- உறையின் மீது 'ஆஹா! ரூ. 50,000 (கோவை)' என்று கட்டாயம் குறிப்பிட வேண்டும்.
- போட்டி தொடர்பாக விசாரணைகள் அனு மதிக்கப்படமாட்டாது.
- இந்தப் போட்டி கோவை மாவட்ட கல்கி வாசகர்களுக்கு மட்டுமே.
- ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.





• அலங்காரமும் உத்தரவாதமும்

# ஹேமமாலினிக்குக் கிடைத்த பதவி குறித்து..?

பஞ்சாயத்துத் தலைவர் ஜாதி இந்துக்களால் செருப்படி பட்டிருக்கிறாரே? இதற்கு முடிவுதான் என்ன...?

! ஏதோ ஓரிடத்தில் ஏற்பட்ட அசம்பாவிதம் என்று ஒதுக்காமல், அங்கே போலீஸ் பாதுகாப்புடன் மறுபடி அவரே கொடியேற்ற வேண்டும். அதைக் கட்சி வேறுபாடு இன்றி பல தலைவர்கள் அருகிலிருந்து ஆமோதிக்க வேண்டும். எதிர்த்தவர்களிடம் அன்புடன் பேசி வழிக்குக் கொண்டு வர வேண்டும். சட்டபூர்வமான நடவடிக்கை மட்டும் போதாது.

● சி. மகேஷ், நாக்பூர்

? 2009ம் ஆண்டில் இந்தியா சந்திர மண்டலத்துக்கு ராக்கெட் அனுப்பும் என்கிறாரே வாஜ்பாய்...?

! அதற்கு முன்னதாக, பயங்கரவாதிகளின் ராக்கெட் குண்டுகளைச் சமாளிக்கும் வழிகளை ஆலோசித்தால் நல்லது.

● கே. ஜெயமுருகன், வேலூர் - 1 ●

? 'பொறுக்கி'தான் தமிழ் சினிமாவின் ஹீரோ என்ற தங்கர் பச்சானின் ஆவேசம் குறித்து...?

! இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்துவதன் மூலம் அந்த சினிமாக்கள் செய்யும் தவறையேதானே இவரும் செய்கிறார்!

● அசோக்ராஜா, திருச்சி - 15

? இந்தியா டுடேவின் கணிப்பில் 'ஜெ' கடைசி இடம் பெற்றிருப்பது பற்றி...?

! தலைகீழாக நின்று பாருங்கள். தமிழகம் முதலிடம் பெற்றிருக்கும். அதைவிட்டால், வேறு வழியே இல்லை.

● த. பரதன், திருவாரூர்

? உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் பாடல்களில் தராசுக்குப் பிடித்த பாடல்...?

! 'தென்றலோடு உடன் பிறந்தாள் செந்தமிழ்ப் பெண்ணாள்..' என்ற ராஜராஜசோழன் படப் பாடல், சந்தமும் இசையும் தாலாட்டும் தமிழுமாக... நல்ல பாடல்.

● எம். பாஸ்கர், திண்டுக்கல்

? நானும் இளங்கோவனும் ராம - லக்ஷ்மணர்கள் என்று சோ.பா கூறியுள்ளாரே?

! அப்படியே கைகேயி, அனுமார், ராவணன் போன்ற காரெக்டர்களும் யார் யார் என்று

● வீ. முத்தையா, திருநெல்வேலி

? அமெரிக்காவில் சில மணி நேர மின் தடை ஏற்பட்டது உலகம் முழுதும் பரபரப்புச் செய்தியானது ஏன்...?

! விண்வெளி ஓடங்கள் அனுப்பும் அளவு விஞ்ஞானத்தில் முன்னேறிய நாட்டில் மின்தடை என்றால், ஷாக் அடித்த மாதிரி ஆகிவிடுகிறதே அதனால்தான்.

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி

? அனைத்துக் கோயில் யானைகளுக்கும் ஆண்டுதோறும் ஒரு மாதம் ஓய்வு அளித்து இயற்கை சுற்றுச்சூழல் அமைந்த இடத்தில் அவற்றுக்கு நலவாழ்வு முகாம் நடத்த முதல்வர் உத்தரவிட்டுள்ளாரே...?

! பாராட்டும் வாழ்த்தும் பெற வேண்டிய ஆணை. இயற்கைச் சூழலிலிருந்து யானைகளை விலக்கி வைப்பதால் விளையும் விபரீதங்கள் தவிர்க்கப்படும்.

● எஸ். நிஷா, பாம்பன் ❐

? சிவகங்கை மாவட்டத்தில் தேசியக் கொடி ஏற்றிய தலித்


• சொல்லும் சூடும்...



# நீங்கள் கேட்டவை-தராசு



• யானையும் ஆணையும்



• நிலவும் கனவும்

சொல்லி விட்டால் நவீன ராமாயணம் கேட்ட புண்ணியம் கிடைக்குமே...!

● ஆர். அப்துல் சலாம், திருச்சி - 21

? இண்டியில் உள்ள அண்ணா பல்கலைக் கழக வளாகத்திற்குத் தலைமைச் செயலகத்தை மாற்ற அரசு முடிவு செய்திருப்பது பற்றி...?

! கல்வி நிலையங்கள் ஏராளமாக உள்ள பகுதிக்குத் தலைமைச் செயலகத்தை மாற்றுவது உசிதமல்ல. அது என்னமோ முதல்வருக்குக் கல்லூரி வளாகங்கள் மீதே கண்! நிற்க, வரிப்பணம் தொழில்வளப் பெருக்கத்துக்கு உதவும் வகையில் முதலீடாக வேண்டும். தேவையற்ற கான்கிரீட் கட்டடங்களில் அல்ல.

● கல்லார் ரஹ்மத், நாகை.

? ஹேமமாலினிக்குக் கிடைத்த பதவி குறித்து...?

! அவருக்கு அலங்காரம்; பா.ஜ.கவுக்குச் சில வோட்டுகள் உத்தரவாதம்.

● மஞ்சு தேவன், நவி மும்பை.

? பிரபல டென்னிஸ் வீரர் பீட் சாம்ப்ராஸ் ஓய்வு பெற்று விட்டாரே...?

! Most graceful and glorious retirement! ஓய்வு பெறுவதில் ஒரு முன்னுதாரணம்.

● எல். மீனாட்சிசுந்தரம், திருவண்ணாமலை

? மழை நீர் விற்பனையாகும் காலம் வரப் போகு தாமே, வருமா...?

! அதற்கு முன் மழை நீர் அறுவடைக்கு வரி வரும். விற்பனை வரியும் இருக்கும்.

● இ.புவாரணி, குடியாத்தம்

? பா.ஜ. கட்சியின் செல்வாக்கு குறைவதற்குத் தோழமை அமைப்புகளே காரணம் என்று துணைப் பிரதமர் அத்வானி கூறுவது பற்றி...?

! ஹிந்துத்வா அமைப்புகளிடம் பா.ஜ.கவின் செல்வாக்கு குறைவதற்குத் தோழமைக் கட்சிகள் காரணம் என்கிற அளவுக்கு உண்மைதான். அவை இல்லாது, தனி மெஜாரிட்டியுடன் பா.ஜ.க வந்திருந்தால், இந்தியாவில் இந்நேரம் ஹிந்துத்வா அமைப்புகளின் ஆட்சிதான் நடந்து கொண்டிருக்கும். பா.ஜ.க ஒரு கருவியாகச் செயல் பட்டுக் கொண்டிருக்கும்.

● ரேவதி ப்ரியன், ஈரோடு

? கும்பமேளா போன்ற திருவிழாக்களில் நெரிசல் மரணங்கள் தொடர்கதையாகி விட்டதே - இதை அரசு எப்படிக் கையாள லாம்?

! நன்கு சிந்தித்து முன்னேற்பாடு களைப் பலப்படுத்துவதன் மூலம் நிச்சயம் தவிர்க்கலாம். வருமுன் காப்பதற்குப் பதில் வந்த பின் நோவதே நம் ஆட்சி யாளருக்கு வழக்கமாகிவிட்டது.

● நா. கணேசன், பெத்தூர்

? உள்ளது உள்ளபடி கூறும் தராசுவே! கோயில்களில் கிடா வெட்டுவது, கோழி அறுப்பது போன்றவற்றுக்கு அதிரடித் தடை பிறப்பித்துள்ள தமிழக அரசின் அணுகுமுறை வர வேற்கத்தக்கதுதானே...?

! விலங்குகள் வதை தடைச் சட்டத்தின் கீழ் தடை ஏற்கெனவே இருப்பதுதான். இருக்கிற சட்டத்தைப் பிரயோகித்தும், கூடவே மக்கள் மனமாற்றத்துக் குப் பிரசார பீரங்கியைக் கையாண்டும்தான் வெற்றி பெற வேண்டுமே தவிர, அதிரடிச் சட்டங்கள் எதிர்ப்பையே தோற்றுவிக்கும். மனக் கசப்பையே வளர்க்கும்.

❒ ரூ.100/- பரிசு பெறுபவர்:

எஸ். நிஷா,
நெ.1, கேட் தெரு,
பாம்பன் 623 521

• ரூ. 50/- பரிசு பெறுபவர்

கே. ஜெயமுருகன்
31, ரெட்டியப்ப முதலி தெரு
கொசப்பேட்டை
வேலூர் 632 001



# கதையொன்றுமில்லை

நிஸ்சயதார்த்த மந்திரம் என்ன சொல்கிறது...? பெண்ணைப் பார்த்துச் சொல்கிறது. 'விராட் சந்தஸ்' என்று ஒரு சந்தஸ் இருக்கிறது... பத்து எழுத்துக்கள் உடையது இந்த சந்தஸ்..." என்று சொல்கிறது.

அனுஷ்டுப் சந்தஸ்ஸில் முப்பத்திரண்டு எழுத்துக்கள். ஜகதி சந்தஸ் என்றால் நாற்பத்தியெட்டு.

'பத்து எழுத்துக்கள் கொண்ட விராட் சந்தஸ் போன்று உனக்குப் பத்துப் பிள்ளைகள் பிறக்கட்டும்' என்று ஆசீர்வாதம் பண்ணுகிறது இந்த நிஸ்சயதார்த்த மந்திரம். 'உன் சத் - சந்தான சௌபாக்யத்தினாலே' பித்ரு தேவதைகள் சந்தோஷமடையட்டும்' என்று ஆசீர்வாதம் சொல்கிறது.

ஹோம குண்டம் தயார் பண்ணினால் அதை கிழக்கு முகமாக தர்பத்தைப் போட்டு நன்றாக மூடிவிடவேண்டும். அதன் பிறகு, வடக்கு நுனியாக தர்பத்தைப் போட்டு மூட வேண்டும். 'கிழக்கு நுனியாகவும் வடக்கு நுனியாகவும் மாற்றி மாற்றிப் போட்டு நன்றாக மூடிவிடு...' என்கிறது சாஸ்திரம். இவ்வாறு ஹோம குண்டத்தைக் கட்டிவிட்டு யக்ஞத்தன்று... அது என்றைக்கு ஆரம்பிக்கிறதோ அன்றைய தினத்தில், அரணி மதனம் பண்ணி அக்னியைப் பிரதிஷ்டை பண்ண வேண்டும். அவ்வாறு பிரதிஷ்டை பண்ணுகிறதினத்திலே, யார் யக்ஞம் பண்ணுகிறார்களோ, அந்த யஜமான தம்பதியை அழைத்து வந்து, 'இதைப் பாருங்கள்...' என்று காண்பிக்க வேண்டும். வடக்கு நுனியாக வைத்ததை எடுத்து, கிழக்கு நுனியாக வைத்ததை எடுத்து... இந்த மாதிரி வைத்த தர்பத்தையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக நீக்கிக் களைந்து, அந்த ஹோம குண்டத்தை அவர்களுக்குக் காண்பிக்க வேண்டும்.

எதற்காக இப்படி ஒரு காரியம்...? முதலில் எதற்காக மூடுவது? பிறகு ஏன் அதைத் திறந்து காண்பித்து 'இதைப் பாருங்கள்' என்று சொல்வது...? இதை எதற்காகப் பண்ணுவதாம்...? என்று நமக்கு விசித்திரமாகத்தான் தோன்றும்.

ஆனால், மஹான் ஆபஸ்தம்பர் என்ன சொல்கிறார்....? 'ஒரு காரணமாகத்தான் இவ்வாறு செய்யச் சொல்லியிருக்கிறது' என்கிறார்.

ஒரு வீட்டிற்கு நாம் போகிறோம் என்றால், முதலில் வீட்டின் எஜமானர் தென்படக் கூடாதாம் நமக்கு. வெளியே ஒருவர் நின்று கொண்டு, "எங்கப்பாவைப் பார்க்க வந்தீர்களா... உள்ளே இருக்கிறார், போங்கள்" என்று சொல்ல வேண்டுமாம். அங்கே போனால், "ஓ, எங்கப்பாவைப் பார்க்க வந்தீர்களா? அதோ அங்கே போய்ப் பாருங்கள்" என்று அவர் அனுப்ப, இன்னும் உள்ளே போனால், அவரோ, "எங்க அப்பாவைப் பார்க்க வந்தீர்களா?" என்று மற்றொரு இடத்துக்கு அனுப்ப, அங்கே இருப்பவரோ, "அப்பா - அம்மா உள்ளே பூஜை அறையிலே பூஜை பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இதோ பூஜை முடியப் போகிறது; எல்லோரும் தீர்த்தம் வாங்கிக் கொள்ளப் போகிறோம், கொஞ்ச நேரம் இருந்தீர்களானால், பார்க்கலாம்..." என்று சொல்ல வேண்டும். உள்ளே பூஜை பண்ணுகிறாரே, அவருடைய பிள்ளை, பேரன், கொள்ளுப்

**முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்**

## அருள்வாக்கு

பக்தி செலுத்துவதால் முக்தி கிடைத்து விடுமென்று சொன்னால் நாம் செலுத்தும் அந்த பக்தியே நேராக முக்தியைக் கொடுத்து விடுகிறது என்று அர்த்தமில்லை. நாம் செய்கிற எதுவுமே தானாக எந்தப் பலனையும் தருவதில்லை. பலன்களைத் தருகிற பலதாதாவாக ஈச்வரனே இருக்கிறான். அவன்தான் பாப புண்யம் பார்த்து எல்லாருக்கும் எல்லாப் பலனையும் கொடுக்கிறான். அவ்விதத்தில் நாம் பண்ணுகிற பக்திக்குப் பலனாக அவன் பரம க்ருபை செய்து, ஞானத்தைத் தந்து,

---

பேரன் என்று இவர்கள் மொத்தம் நூறு பேர் நிற்க வேண்டும், தீர்த்தம் வாங்கிக் கொள்ள...

– இது ஆபஸ்தம்பருடைய விளக்கம். ஒரு வீடென்றால் இதுதான் அழகு... எல்லோரையும் அனுப்பிவிட்டு, இரண்டே இரண்டு பேர் இருக்கக் கூடாது வீட்டிலே. ஒரு கிருஹத்திலே நூறு பேர் இருக்க வேண்டும் என்று சாஸ்திரம் சொல்கிறது. கொள்ளுப் பேரன், தெள்ளுப்பேரன் எல்லோரும் இருக்க வேண்டும். பூஜை மணி அடித்தால் இத்தனை பேரும் வந்து தீர்த்தம் வாங்கிக் கொள்ள வேண்டும். அந்த வீட்டு எஜமானரைப் பார்க்க வேண்டுமானால், எள்ளுப் பேரனைக் களைந்து, கொள்ளுப் பேரனைக் களைந்து, பேரனைக் களைந்து, பிள்ளையைக் களைந்து... – தர்பத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் களைந்து, ஹோம குண்டத்தைப் பார்க்கச் சொல்வதே இதற்குத்தான் என்கிறார் ஆபஸ்தம்பர்.

'தாத்தாவை அடியோடு தெரியவே தெரியாது, அப்பா தெரியாது' என்கிற நிலை கிருஹத்திலே இருக்கக் கூடாது. குழந்தைகளுக்கும் தெரிய வேண்டும்; பெரியவர்களுக்கும் தங்களுக்குப் பின்னால் இருக்கிற சந்ததிகள் எல்லோரையும் தெரிந்திருக்க வேண்டும்.

அப்படித் தெரிந்து வைத்துக் கொண்டவர்களுக்கு, வாஜபேய யக்ஞ மந்திரம் சொல்லிக் கொண்டாடி ஆசீர்வாதம் பண்ணுகிறது. 'அமிர்தமயமான தங்கத் தாம்பாளத்திலே அவர்களை இறக்குங்கள்; அவ்வளவு புண்ணியம் அவர்கள் பண்ணியிருக்கிறார்கள்' என்கிறது. மனிதனுடைய ஆயுளை நூற்றியிருபது ஆண்டுகள் என்று சொல்கிறது இந்த மந்திரம்.

தொண்டரடிப்பொடியாழ்வார், ரங்கநாதரிடம் போய்க் கேட்கிறார் – ''எனக்கு இனி பிறவியே வேண்டாம்; பிறவாதிருக்க அருள்'' என்று கேட்கிறார். இப்படிக் கேட்க என்ன காரணம்...?

பாதி ஆயுள் தூக்கத்திலேயே போய் விடுகிறது. நூற்றியிருபது வயதில் நாம் ஜீவித்திருப்பது அறுபது வயது தான். இதிலே பசி, பிணி, மூப்பு, துன்பம்... என்று கஷ்டங்கள் பலவாறு படுகின்றோம்.

இவற்றில் பிணியைப் பொறுத்துக் கொள்ளலாம், பசியைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் மூப்புத்தன்மை இருக்கிறதே... அந்தச் சிரமம் மிகக் கொடியது. மூப்படைந்த இவராலும் ஒன்றும் பண்ணிக் கொள்ள முடியவில்லை; எதிரே இருக்கிறவர்கள் சகாயம் பண்ணும்படியான நிலை. அதை எதிர்பார்த்து காலம் தள்ளுவது ரொம்ப பயங்கரமான சமாசாரம்.

பிணி, பசி, மூப்பு, துன்பம் – இவையெல்லாம் அனுபவிக்க வேண்டியிருப்பதனாலே இந்தப் பிறவி எனக்கு வேண்டாம் என்கிறார் ஆழ்வார்.

இப்படியெல்லாம் பல கஷ்டங்கள் இல்லாதபடி பூரணமாக நூற்றியிருபது வருடம் வாழ வேண்டும் என்றுதான் ஆசீர்வதிக்கிறது மந்திரம்: 'அம்ருதம்வை ஹிரண்யம்.'

விசேஷமாக எம்பெருமான் மந்திரத்தைத் தெரிந்து கொண்டு, யக்ஞ யாகாதிகள் பண்ணி, தேவதைகளுடைய கடனைத் தீர்க்கும்படியான நிலையே உலகிலே சிறந்த நிலை என்கிறது சாஸ்திரம்.

இவ்வாறு யக்ஞம், ஹோமங்கள் பண்ணுவதால் பல பேருக்கு க்ஷேமம் உண்டாகிறது. யக்ஞ பூமியான நம் பாரத தேசம் மொத்தம் ஒரே புகை சூழ்ந்து இருந்ததாம் ஒரு காலத்தில்... புகையானது ஹோமத்திலிருந்து வரக்கூடிய தூமம். அதை சுவாஸம் பண்ணினால், நமக்கு எந்த வியாதி வரும்! எதுவும் நம்மை அண்டாது.

ஆகவேதான் ஹோமம் பண்ணுகிற போது 'புகை வேண்டாம்' என்று எழுந்து போகக் கூடாது. அது நடக்கிற இடத்திலேயே உட்கார்ந்திருக்க வேண்டும். அந்தப் புகையை சுவாசிக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா...? அந்த இடத்திலே அக்னியிலே இடம்பெறும் திரவியங்கள் எவ்வளவு மந்திர பூர்வமாக, விசேஷமாக விழுகின்றன! ஆகவேதான், அந்தப் புகையை சுவாசிப்பது நமக்கு வியாதிகளைத் தீர்க்கிறது.

ஆகவே யக்ஞத்தில் தேவதைகளை



அந்த ஞானத்துக்குப் பலனாக மோக்ஷாநுபூதியைக் கொடுக்கிறான். ஆக, பலன் தருவது நாம் பண்ணும் பக்தியே அல்ல; அதற்குப் பிரதியாக ஈச்வரன் செய்யும் க்ருபைதான் பலனைத் தருவது.

பக்தி நிஜமானதாக இருந்தால் பக்தி பண்ணுகிறவன் அதற்கு ப்ரதியே எதிர்பார்க்க மாட்டான். ப்ரதி ப்ரயோஜனம் எதிர்பார்த்து விட்டால் அது வியாபாரம்தானேயொழிய பக்தி இல்லை என்றே பாகவதாதி நூல்களில் சொல்லியிருக்கிறது. இப்படி பக்தன் (ப்ரதி வேண்டாமல்) இருந்தாலும் இவனிடமிருந்து நிஜமான பக்தியைப் பெற்றுக் கொண்ட பகவானுக்கு மனசு கேட்குமா? அதனால் அவன் க்ருபை பண்ணத்தான் பண்ணுவான். ஞானத்தை அநுக்ரஹிக்கத்தான் செய்வான். பக்தனை ஸம்ஸாரத்திலிருந்து விடுவித்து மோக்ஷத்தில் சேர்க்கத்தான் செய்வான்.

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்**

ஆராதிப்பதால் தேவதைகளிடம் நம் கடன் தீர்கிறது. பித்ருக்களின் கடன் தீர்கிறது. சத்சந்தான சௌபாக்கியத்தினாலேயும் சிரார்த்தங்களை சிரத்தையாய்ப் பண்ணுவதினாலேயும், அவர்களுக்கு நாம் பட்ட கடன் தீர்கிறது.

பித்ரு காரியங்களை சிரத்தையாகச் செய்ய வேண்டும். அதனால்தான் அதற்குச் சிரார்த்தம் என்றே பெயர். சில இடங்களிலே ஆரம்ப ஏற்பாடுகள் பிரமாதமாக இருக்கும். கிரியை என்று வரும் போது ரொம்ப குறை வைப்பார்கள்.

இரண்டு ஆட்டுக்கடாக்கள் சண்டையிடுவதைப் பார்க்கலாம்... கொம்பெல்லாம் பார்த்தால் வளைந்து, பயங்கரமாக இருக்கும்.

ஓர் ஆடு பத்தடி நகர்ந்து, பின்னால் போகும்... இன்னொரு ஆடு, தான் மேலும் பத்தடி நகர்ந்து இன்னும் பின்னாலே போகும்! அப்புறம் கிடுகிடுவென்று இரண்டும் ஓடி வரும். பார்த்துக் கொண்டிருப்பவர்கள் இது இரண்டும் கிழித்துக் கொண்டு சின்னாபின்னமாகி, நூறு சுக்கலாகப் போய்விடும் என்று நினைக்க, ஓடி வந்ததே, அந்த ஆடுகள் இலேசாகத் தொட்டுக் கொள்வதோடு சரி! பண்ணுகிற காரிய கலாபத்தைப் பார்த்தால், இரண்டு ஆட்டுக்கும் முடிவு வந்துவிட்டதோ என்று தோன்றும். ஆனால் இரண்டும் சும்மா நிற்கும்.

பஹ்வாரம்பகா - லகுக்ரியா என்றது இதைத்தான்!

ஆகாசத்தில் படபட — டமடமவென்று இடிக்கிறதே மேகம்.... அதனால் மழை வருமா..? வராது! ஆனால் அமர்க்களம் பார்த்தால் பயங்கரமாக, எட்டு சுழி மழை பெய்யும் போலிருக்கிறது. ஒரு சொட்டும் வராது!

சிரார்த்த காரியமானது இப்படி ஆகிவிடக் கூடாது.

சிரார்த்தத்தன்று — பிராமணாய பிராமணார்த்தம் — பிராமணர்களை வரிக்க வேண்டும். அவர்களை நம் கிருஹத்துக்கு வரவேண்டும் என்று அழைக்கிறபோதே, மந்திரத்தைச் சொல்லித்தான் அழைக்க வேண்டும். இப்போதெல்லாம் வழக்கம் மாறிவிட்டது. இப்படி அழைக்கிறதற்கான மந்திரத்தைச் சொல்லி நாம் அழைப்பதில்லை. சிரார்த்த தினத்தன்றே எல்லா மந்திரமும் சொல்லப்படுகிறது. அதற்கேற்ற வசதி, வாய்ப்பு நமக்கு இல்லை... இருந்த காலத்தில், நாலு நாட்கள் முன்னதாகவே அழைப்பார்கள். வருகிறவர்களும் நான்கு நாள் முன்னதாகவே வருவார்கள். வந்து சிரார்த்தத்தை நடத்திக் கொடுத்துவிட்டு, அப்புறம் நான்கு நாட்கள் இருந்துவிட்டுப் போவார்கள்! அந்த மாதிரி பிறருக்காக வந்து தங்களை வருத்திக் கொள்வார்கள்.

தன் பித்ருதேவதைகளுக்காக ஒருவர் சிரமப்படுகிறார்.... இன்னொருத்தர் ஏன் சிரமப்பட வேண்டும்? அவரும் சிரமப்பட்டு, பட்டினியிருந்து... 'ராத்திரி சாப்பிட்டால் தேவலை போலிருக்கே....' என்ற எண்ணம்கூடத் தோன்ற விடாமல் விரதம் இருக்கிறார். அந்த அளவுக்குப் பித்ரு காரியம் சிரத்தையாகச் செய்ய வேண்டும். நடத்திக் கொடுங்கள் என்று இவர் பிரார்த்திக்கிற அழகே அழகு! ஒருத்தருக்காக தன் சுகத்தை விட்டுக் கொடுத்து, வருத்திக் கொண்டு இவர் வந்து நடத்திக் கொடுக்கிறாரே, அது இன்னொரு அழகு. அதுதான் அன்னியோன்ய ஸத்பாவம் — அவ்வளவு பரஸ்பர அந்நியோன்ய ஸத்பாவம் சிரார்த்தத்திலே தெரிகிறது.

(வளரும்)

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை P.R. ஜுவல்லரி

# P.R. JEWELLERY

**GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES**
**Old No. 102, New No. 138, USMAN ROAD,**
**T. NAGAR, CHENNAI - 600 017.**
**PH: 24344442, 24327764 TUESDAY HOLIDAY**
**(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)**

**PROPRIETOR : P. RAVINDHIRAN**

எங்கு ஜோதிடம் பார்த்தாலும் **P.R.** ஜுவல்லரிக்கு வந்து ரூ.400/-க்கு ராசிக்கல் வாங்கி பயன் பெறுங்கள். கல் ஒரிஜினல் என முழு உத்திரவாதம் தருகிறோம்.

| ராசி | ராசிக்கல் | வெள்ளி மோதிரம் விலை | |
|---|---|---|---|
| மேஷம், விருச்சிகம் | பவழம் - | 2 CARAT | 400/- |
| ரிஷபம், துலாம் | வைரம் - | 5 CENT | 2250/- |
| மிதுனம், கன்னி | மரகத பச்சை - | 20 CENT | 400/- |
| கடகம் | முத்து - | 2 CARAT | 400/- |
| சிம்மம் | மாணிக்கம் - | 20 CENT | 400/- |
| தனுசு, மீனம் | புஷ்பராகம் - | 1 CARAT | 400/- |
| | கனகபுஷ்பராகம் - | ½ CARAT | 1000/- |
| மகரம், கும்பம் | நீலம் - | 20 CENT | 400/- |



எங்களிடம் நியூமராலஜிபடியும் கல் மோதிரங்கள் கிடைக்கும்.

**TOPAZ, MOONSTONE, AMETHYST, TARQUISE, TIGER EYE, BLOOD STONE, OPAL, AQUAMARINE.**

மதர் மோதிரம், மதர் டாலர் தங்கத்திலும், வெள்ளியிலும் ரெடியாக கிடைக்கும்.

தங்கத்தில் ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 1800/- முதல் 5000/-ம் வரை உடனே கிடைக்கும்.

அனைவரும் அணியக்கூடியது கார்னெட் வெள்ளி மோதிரம் விலை ரூ. 400/- இதை அணிவதால் படிப்பு, ஞாபக சக்தி, வேலை வாய்ப்பு, வியாபாரம், செல்வ வளம் பெருகும்.

தபால் மூலம் மோதிரம் 1க்கு ரூ 450/-


M.O. (or) D.D. அனுப்பவும்.

தபால் எழுதினால் முழு விவர பாம்லட் இலவசமாக அனுப்புகிறோம்.

மேஷ ராசி, விருச்சிக ராசி - பவழம் * ரிஷப ராசி, துலாம் ராசி - வைரம் * மிதுன ராசி, கன்னி ராசி - மரகத பச்சை

கடகராசி - முத்து * சிம்மராசி - மாணிக்கம் * தனுசு ராசி, மீனராசி - புஷ்பராகம் * மகரராசி, கும்பராசி - நீலம் *

குறிப்பு : தினசரி காலை ராஜ் டீவியில் 6.55 மணிக்கு சிறப்புப் பேட்டியை பார்க்கவும்



# புதிய சடலங்கள்

சப்தங்களைத் தவிர
வேறென்ன மிச்சம் இங்கே
காற்றில் கசியும் ரத்தம்
அழத் தெரியாத மக்கள்

சன்னல்களில்
ஏனித்தனை இறுக்கம்?
குடல் வாலில் படியும்
சிமெண்ட் துகள்கள்

பேசுகிறாய்;
பேச வேண்டும் என்பதால் அல்ல
பேசித் தீர வேண்டும்
என்கிற மூச்சிரைப்பில், வெறியில்

எல்லாத் திசைகளிலும்
சிமெண்ட் தொழிற்சாலைக்கு
முன்பு நிற்கும்
குரோட்டன்ஸ்கள்

அம்மன் கோயிலைச் சுற்றி
பாயசத்திற்கலையும் பேய்கள்
கொடை முடிந்தால்
ஓயுமா?

திருவாசகம் படி
ஆண்டாளுக்கு ஒத்தாசையாய் இரு

நவநீத கிருஷ்ணனைக்
கூப்பிட்டுக் கச்சேரி போடு
மார்க்ஸியம் பேசு
மார்க்ஸை எதிர்
கடவுள் உண்டென்றும்
மல்லுக்கு வா
இல்லையென்றும் அடி.
திருவிழாக் கூட்டத்தில்
கலந்து போ
காணாமல் போ!

பக்தி செய்
விசுவாசமே ஜெயம்
ஆண்டாளுக்கு ஜெயம்
காந்தி, லெனின்
கருணாநிதி, ஜெயலலிதா
பாரதி, சுந்தர ராமசாமி,
வைரமுத்து, மேத்தா
எல்லோரில் எவருக்கேனும்
கொஞ்ச நாள்
பக்திக் கோஷம் போட்டுவிட்டு
செத்துப் போ
சர்வம் சிவம்.

**லக்ஷ்மி மணிவண்ணன்**

ஓவியம் : பி.ஆர்.ராஜன்

**த**மிழ்ப்பெயர் : கணையம்.

ஆங்கிலப் பெயர் : பேன்கிரியாஸ்

எடை : 85 முதல் - 100 கிராம் வரை

இருப்பிடம் : இரைப்பைக்கு நேர்க்கீழாக, சிறு குடல் மேல் அமர்ந்து மண்ணீரல் மேல் காலை நீட்டிக் கொண்டு... வயிற்றின் இடப் புறம்.

டைப் : நாளமுள்ள சுரப்பிகளும் நாள மில்லாச் சுரப்பிகளும் கலந்த கறுகறுப்புக் கலவைச் சுரப்பி.

முக்கிய வேலை: ஜீரண மண்டலத்தின் நம்பர் ஒன் சப்ளையர். செரிமானத்துக்குத் தேவையான குளுகான் போன்ற முக் கியமான ஹார்மோன்களையும், நொதிப் பொருள் எனப் படும் சில சிறப்புச் செல்வங் களையும் கொடுக்கிறது.

தோற்றம்: சிறு சிறு வட்ட இதழ்களுடன் தேனடையைப் போன்றது.

**க**ணையத்தைப் பொருத்தவரை, மகோ தரம், புரை ஓட்டை, கணைய சுரப்பிப் புற்று, நாளமுள்ள சுரப்பிகளில் ஏற்படும். கட்டிகள் என பூச்சாண்டி காட்டும். வியாதிகள் நிறை யவே உள்ளன என்றாலும் அதில், திடீர்க் கணைய அழற்சி (Acute Pancreatitis)தான் எக்ஸார்ஸிஸ்ட் டைப்! ஒத்தையிலே வந்தாலும் ஒட்டு மக்காவா போடுவாம்" என்று கிராமத் துலே ஏதாவது பாரதிராஜா டைப் பாட்டி தண்டட்டினை ஆட்டி ஆட்டிப் பேசுவதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள்! திடீர், தீவிர




கணைய அழற்சி ஏற்பட்டாலும் அப்படித் தான். தான் உண்டு, தன் வேலை உண்டு என்று சிங்கிள் பிரச்னையோடு மூட்டைக் கட்டிக் கொண்டு கிளம்பாமல், ஆறேழு உபரிக் கோளாறுகளையும் உண்டு செய்து, உடம்பையே கலவர பூமியாக்கி விடும்!

திடீர்க் கணைய அழற்சி என்பது கணையம் வீங்கிப் போவதைக் குறிக்கிறது. 'Serum enzyme'

# ஏந்துகிறேன் ஏன்...ஏன்?

டாக்டர் எஸ். அஷோக்

எனப்படும் நொதிப் பொருள், அளவுக்கு அதிகமாகச் சுரந்து, திடீர் வலியை ஏற்படுத்துவதால், கணையம் வீங்கிப் போகிறது. இந்த வீக்கமும் வலியும் அருகிலிருக்கும் உறுப்புகளையும் பாதித்து, செயல்திறனை மட்டுப்படுத்துகிறது.

திடீர்க் கணைய அழற்சிக்கு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். ஆனால் கணையம் ஸ்பான்ஸர் செய்த டாப்டென் கவுண்ட்டவுன் நிகழ்ச்சியில் முதலிரண்டு இடத்தைப் பிடிப்பது மதுப் பழக்கமும், பித்த நீர்ப் பாதையில் கற்கள் உருவாவதும்தான். விபத்து, அடி போன்றவற்றால் வயிற்றில் காயம் ஏற்பட்டாலும், திடீர்க் கணைய அழற்சி ஏற்படும். திடீர்க் கணைய அழற்சி இரண்டு வகைப்படும்.

1. கணையம் வீங்கிய நிலை (Interstitial).
2. இரத்தப் பெருக்கும் சேர்ந்த நிலை (Hemorrhagic)

இந்த இரண்டும் கண்டு கொள்ளப்படாத நிலையில் கடைசி நிமிஷத்தில் வந்து "ப்ளீஸ்... டாக்டர்... காப்பாத்துங்க" என்றால், மருத்துவர்கள் பாடு திண்டாட்டம்தான்!

கணையம் வீங்கி, வீக்காக இருக்கிறது. ஆனால் உறுப்பின் உள் அமைப்பில் மாற்றமில்லை. இரத்தக் கட்டு இல்லை. நொதிப்பொருள் சுரப்பு குறைவாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில், அனைத்து இயக்கங்களும், பழைய நிலைக்கு வர வாய்ப்புள்ளது.

ஆனால், இரத்தப் பெருக்கு ஏற்பட்டு, திசுக்கள் அழுகிப் போய், சுண்ணாம்புச் சுரப்பு ஏற்பட்டிருந்தால், அபாயச் சங்கு ஒலிக்க ஆரம்பித்துவிட்டது என்று அர்த்தம்.

திடீர்க் கணைய அழற்சி ஏற்படும்போது, கணைய நீர் உற்பத்தியாகி, வெளியேற முடியாத நிலை ஏற்பட்டால், என்ன செய்யும்? உள்ளேயே தங்கி, அரிப்பு வேலையை ஆரம்பித்துவிடும். இப்படிப்பட்ட ப்ரிமெச்சூர் ஆக்டிவேஷனால் தன் ஜீரண வேலையை, பாதித்துக் கொள்ள ஆரம்பிக்கிறது. கணையத்தைக் கணையமே அரித்துவிட, மரணம் மஃப்டியில் எதிரில் வந்து நிற்கும்! பத்து முதல் இருபத்தைந்து வருடம் வரை தொடர்ந்து போதையிலேயே மூழ்கிக் கிடக்கும், மொடாக் குடியர்களுக்கு, கணைய பாதிப்பு நிச்சயம் ஏற்படுகிறது. "ஒரு கிண்ணத்தை ஏந்துகிறேன்... ஏன்...ஏன்?" என்று யாராவது கேட்டால், கணையம் அழுகிச் சாகத்தான். மதுவிலிருக்கும் நச்சுப் பொருள், கணைய நீர்ச் சுரப்பை ஊக்குவிக்கிறது. கணைய நீர் அதிகமாகச் சுரக்கச் சுரக்க, புரதப் பொருளானது, பொடியாகச் சிதைய ஆரம்பிக்கிறது.

உடைந்த சிறு புரதத் துகள்கள், சிறு சிறு குழாய்களில் படிந்து அடைப்பை உண்டாக்கும். இந்நிலையில், மதுபானம் நேரடி நஞ்சாக மாறி, கணையத்தின் உயிர் அணுக்களைப் பாதிக்கிறது. இதனால் கணைய அழற்சி உண்டாகிறது.

ஹெப்படைட்டிஸ் பி வைரஸ் தொற்று, எயிட்ஸை உருவாக்கும் ஹெச்.ஐ.வி பாதிப்பு, சால்மோனெல்லா, கேம்பிலோபேக்டர் (Salmonella, Campylobacter) புருசெல்லா (Brucella) போன்ற பாக்டீரியாக்களின் தாக்குதல், இருந்தாலும் திடீர்க் கணைய அழற்சி ஏற்படும்.

"டாக்டர்... திடீர்க் கணைய அழற்சி பிரச்னையில் எங்க பங்கும் அதிகம்தானே? எங்களை இருட்டடிப்புச் செய்வது நியாயமா?" என்று யாரோ குக்குரல் எழுப்புவது உங்களுக்கும் கேட்குதா? ஒட்டுண்ணிகள்தாம் அந்த கோரஸ் பாடுகின்றன! ஒட்டுண்ணிகளுக்கு எந்த உதவியும் carrier உடன் தேவையில்லை. நேரடியாகவே களத்தில் குதித்து கணையத்தைத் தாக்கக் கூடியவை. குறிப்பாக, அஸ்காரிஸ் லும்ப்ரி காய்ட்ஸ் (Ascaris Lumbricoides) எனப்படும் நாக்குப் பூச்சி தாக்கினால், கணையம் புண்ணாகிவிடும். இப் புழு, பித்தநீர்க் குழாய், கணையம், கல்லீரல் முதலிய முக்கிய உறுப்புகளில் புகுந்து மஞ்சள் காமாலை நோயை உண்டாக்கும்.

சுகாதாரமான வழிமுறைகளைப் புரிந்துகொண்டு, கடைப்பிடித்தால்தான் ஒட்டுண்ணிகள் தொற்றாமல் ஆரோக்கியம் காக்கலாம்.

அடுத்த வாரம்? வெயிட் பண்ணுங்க...

**வணக்கத்துக்குரிய வயிறே... 10**

# எல்லாம் பொய்கள்

நீலா வந்தபொழுது, நான் ப்ளஸ் ஒன் மாணவர்களுக்குப் பாடம் நடத்திக் கொண்டிருந்தேன். கடைசி பெஞ்ச் கனேசன்தான், "சார்... நீலா டீச்சர்" என்றான்.

வேகமாகத் திரும்பிப் பார்த்தேன். நீலாதான் வரும்பொழுது மழையையும் அழைத்துக் கொண்டு வந்திருந்தாள். தூறிக் கொண்டிருந்த வானம், இப்பொழுது வேகமாகப் பெய்ய ஆரம்பித்தது.

வகுப்பறை வாசலில் நின்றுகொண்டு, "தொந்தரவுக்கு மன்னிக்கணும்" என்றாள் நீலா.

நீலா இப்பொழுது வேறு பள்ளிக்கு மாற்றலாகிச் சென்று விட்டாலும், பழைய மரியாதையில் மாணவர்கள் எழுந்து, "குட் ஆஃப்டர்நூன் டீச்சர்..." என்றனர். "உட்காருங்க... உட்காருங்க" என்று மாணவர்களிடம் கூறிவிட்டு, என்னை நோக்கி, "ஒரு நிமிஷம்..." என்று அழைத்தாள் நீலா.

நான், "இப்ப வந்திடுறேன்" என்று மாணவர்களிடம் கூறிவிட்டு வெளியே வந்தேன்.

இருவரும் வராண்டா ஓரமாகச் சென்று நின்று கொண்டோம். ஆஸ்பெஸ்டாஸ் சீட்டிலிருந்து மழைநீர் வழிந்து கொண்டிருந்தது. இருவருக்கும் ஒன்றும் பேசத் தோன்றவில்லை.

சில வினாடிகள் கழித்து, "நல்லா இருக்கீங்களா பாலு?" என்று நீலாதான் முதலில் பேசினாள்.

"ம்... நல்லாருக்கேன்."

"எனக்கு மேரேஜ் ஃபிக்ஸ் ஆகியிருக்கு."

"தெரியும். சந்திரா டீச்சர் சொன்னாங்க."

"வர்ற ஞாயிற்றுக்கிழமை கல்யாணம். கண்டிப்பா வீட்லயும் அழைச்சுட்டு வரணும்" என்று பத்திரிகையை நீட்டினாள்.

வாங்கிப் பார்த்தேன். நீலாகுமாரி வெட்ஸ் ஜெயக்குமார் என்று இருந்தது.

"அவரும் பி.ஜி. டீச்சர்தான்" என்றாள் நீலா.

"ம்.." என்று மெலிதாகச் சிரித்தேன்.

"வீட்ல... வொய்ஃபெல்லாம் நல்லா இருக்காங்களா?"

"ம்... நல்லாருக்கா."

"பையன ஸ்கூல்ல சேர்த்தாச்சா?"

"அடுத்த வருஷம்தான் சேர்க்கணும்."

"உங்களுக்கு... கல்யாணமான புதுசுல கஷ்டமா இருந்துச்சா பாலு?" என்றாள் திடீரென்று. "ஆரம்பத்துல கொஞ்சம் கஷ்டமா இருந்துச்சு. உன்னை மாதிரியே தினத்தந்தில என் ராசிபலனை ஆர்வத்தோட படிச்சுக் காட்டுவா. உன்ன மாதிரியே கரப்பான் பூச்சிய பாத்தா, பாம்பைக் கண்ட மாதிரி பதறுவா. எல்லா பொண்ணுங்களும், ஒரே மாதிரிதானோன்னு சில சமயம் தோணும். அந்த ஆரம்ப கஷ்டம், கொஞ்ச நாள்ல பழகிடுச்சு."

"மண்ணு மாதிரி வாழணுமா பாலு? வெயிலடிக்கறப்ப காய்ஞ்சுகிட்டு, மழை பெய்றப்ப நனைஞ்சுகிட்டு... அப்படியே இருக்கும் பாருங்க. அது மாதிரி வாழப் பழகிக்கணும். ஒருத்தரைக் காதலிச்சுட்டு, இன்னொருத்தரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு.." என்ற நீலாவால் மேற்கொண்டு பேச முடியாமல் குரல் தழுதழுத்தது. கண்கள் கலங்கின.

"அப்படிச் சொல்ல முடியாது நீலா. பத்து வயசுல எனக்கு மோகன் கபே ரவா தோசைன்னா உசுரு... அப்புறம்... ப்ளஸ் ஒன் வந்தப்ப, சினிமான்னா பயங்கர வெறி. இப்ப எனக்கு ரவா தோசையும், சினிமாவும் ரொம்ப சாதாரணமான விஷயம். அதே மாதிரி இன்னும் ஒரு பத்து வருஷம் கழிச்சு, இந்தக் காதல் தோல்வியும், அதோட வேதனைகளும்கூட ரொம்ப சின்னதா போயிடலாம்."

"மே பீ..." என்று சில வினாடிகள் மௌனமாக இருந்த நீலா, "சரி பாலு... கட்டாயம் குடும்பத்தோட வரணும். மழை

விட்டுடுச்சு. நான் கிளம்புறேன்'' என்று கூறிவிட்டு, நீலா வராண்டாவிலிருந்து இறங்கிச் சென்றாள்.


இன்னும் சிறிது நேரம் மழை பெய்திருக்கலாம் என்று எனக்குத் தோன்றியது.

பள்ளியிலிருந்து மாணவர்களை அழைத்துக் கொண்டு, மூன்று நாள் கேரளா டூர் சென்றிருந்தோம். அதற்கு முன்பே நீலா எங்கள் பள்ளியில் பணியில் சேர்ந்த நாள் முதல், கிட்டத்தட்ட ஒரு வருட காலம் நானும், நீலாவும் நெருங்கிப் பழகி, நட்பைத் தாண்டி... ஒரு விளிம்பு நிலையிலிருந்தபொழுதுதான், அந்த டூர் சென்றோம்.

சாலக்குடி, அதிரம்பள்ளி அருவி. மேலேயிருந்து நீர் ஆவேசமான சப்தத்துடன் கீழிறங்கி கொண்டிருந்தது. கீழே ஓடும் நீரில், அங்கங்கு முட்டிக் கொண்டு பாசி படர்ந்த பாறைகள்.

சந்திரா டீச்சரும், பி.டி. மாஸ்டரும் நீரில் விளையாடிக் கொண்டிருந்த மாணவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

நானும், நீலாவும் பேசிக் கொண்டே நடந்து, கொஞ்ச



ஜி.ஆர்.சுரேந்தர்நாத்

தூரம் தள்ளி, யாருமில்லாத இடத்திற்கு வந்தோம். ஒரு சிறிய பாறையில், அருகருகே தோள்களுரச நெருக்கமாக அமர்ந்தோம்.

கீழே ஓடிய நீரை, கொஞ்சம் அள்ளி குடித்துவிட்டு, ''அருமையா இருக்கு. குடிச்சுப் பாருங்களேன்'' என்றாள் நீலா.

நான் நீரைப் பருகிவிட்டு, ''ஆமாம் நம்ப ஊர் காவிரித் தண்ணிய விட நல்ல ருசி'' என்றேன்.

அந்தத் தனிமையும், நெருக்கமும் காதலைச் சொல்லிவிட, அருமையான தருணமாக தெரிந்தது. எப்படி ஆரம்பிப்பது என்று தெரியவில்லை.

அருவி நீர், நீலாவின் கொலுசணிந்த பாதங்களைக் கழுவிக் கொண்டு ஓடியது.

---

''என்னது! உன் பையனுக்குப் பேரு செழியன், ராஜீவ், ஜெயந்தனா?''

''ஆமா, மூணு கட்சி மாறிட்டதால என்னோட குழந்தைக்கு மூணு தலைவரை விட்டு மூணு தடவை பேரு வைக்கும்படி ஆயிட்டுது...''

- பம்மல் நாகராஜன்



---

நீரில் பட்டு, நீலா அணிந்திருந்த மஞ்சள் புடைவை அவள் பாதத்திற்கு மேல் ஒட்டிக் கொண்டிருக்க... நீரினுள் அவள் கால் விரல்களின் மருதாணி சிவப்பு பளீரென்று தெரிய... தூரத்திலிருந்து இலேசாக அருவி விழும் சப்தம் கேட்க... அந்தச் சூழ்நிலையே மிகவும் ரம்மியமாக இருந்தது.

''ஏற்கெனவே ரெண்டு முறை இங்க வந்திருக்கேன். ஆனா இப்ப என்னவோ இந்த இடம் ரொம்ப அழகா தோணுது'' என்றேன் நான்.

''ஏன் அப்படித் தோணுது?'' என்றாள் நீலா.

''ஒருவேளை... பக்கத்துல... மனசுக்குப் பிடிச்சவங்க இருக்குறதால அப்படித் தோணுதோ?'' என்று நான் தயங்கித் தயங்கிக் கூறியவுடன் நீலாவின் முகம், வெட்கத்தில் சிவந்து போனது.

என்னைக் காதல் பொங்க பார்த்துக் கொண்டே ''நானும் ஏற்கெனவே ஒரு முறை வந்திருக்கேன். ஆனாலும் இப்பதான் இந்த இடம்... எனக்கும் ரொம்ப அழகா தோணுது'' என்று கூறிய நீலா கீழே குனிந்து, நீருக்குள் கைவிரல்களால் அலசினாள்.

நானும் நீரினுள் கையை விட்டு, நீலாவின் கைவிரல்களை இறுகப் பற்றிக் கொண்டேன்.

இப்படித் துவங்கிய எங்கள் காதல், நீலாவின் வீட்டிற்குத் தெரியும்வரை, சுகமாக வளர்ந்து கொண்டிருந்தது.

விஷயம் தெரிந்தவுடன், ஜாதி வித்தியாசத்தைக் காரணம் காட்டி, நீலாவின் அப்பா எங்கள் காதலைக் கடுமையாக எதிர்த்தார். நீலாவை இந்த மாவட்டத்திலேயே இருந்த வேறு ஊருக்கு ட்ரான்ஸ்ஃபர் வாங்க வைத்து, ஊரைக் காலி செய்தனர். நான் அங்கு சென்று நீலாவைச் சந்தித்தேன்.

''வேண்டாம் பாலு. இது சரிப்பட்டு வராது. என்னை மறந்துடுங்க'' என்றாள் நீலா கண்ணீருடன்.

''அது எப்படி மறக்க முடியும்? நீ என்னைக் காதலிச்சது உண்மையா? பொய்யா?''

''காதலிச்சேன். இப்பவும் காதலிக்கிறேன். ஆனா எங்க வீட்ட மீறி, உங்களைக் கல்யாணம் பண்ணிக்க முடியாது பாலு.''

''நம்ப போராடிப் பார்ப்போம். இல்லன்னா ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிப்போம்.''

''இல்ல... அது என்னால முடியாது பாலு... ப்ளீஸ்... என்ன மன்னிச்சுடுங்க'' என்று கதறியழுத நீலாவை வேதனை பொங்க சில வினாடிகள் பார்த்துவிட்டு, மௌனமாகத் திரும்பினேன்.

ஏற்கெனவே என் வீட்டில், என்னைக் கல்யாணத்திற்கு நெருக்கிக் கொண்டிருந்தார்கள். நீலாவின் மீதிருந்த கோபத்தில், வீட்டில் பார்த்த வித்யாவை, நான் திருமணம் செய்துகொள்ள சம்மதம் தெரிவித்தேன். திருமணமாகி, ஒரே மகளைப் பெற்று... வாழ்க்கை திசை மாறிப் போனது.

நீலாவிற்குச் செவ்வாய்த்தோஷம்... அது, இதுவென்று... தாமதமாகி, இப்பொழுது தான் திருமணம் நிச்சயமாகியிருக்கிறது.

பள்ளி மணியடிக்கும் சப்தம் கேட்டு, நிகழ்காலத்திற்கு வந்தேன்.

ஞாயிற்றுக்கிழமை. நான், என் மனைவி, பையன்... என்று மூவருமாக நீலாவின் திருமணத்திற்குச் சென்றோம்.

திருமண மண்டப வாசலிலேயே என்னைப் பார்த்துவிட்ட நீலாவின் அப்பா, பார்க்காதது போல் சட்டென்று நகர்ந்து உள்ளே சென்றார். நீலாவின் அண்ணனுக்குக் கொஞ்சம் நாகரிகம் தெரிந்திருந்தது. "வாங்க சார்..." என்று வரவேற்று, டிஃபன் சாப்பிட அழைத்துச் சென்றான்.

சாப்பிட்டுவிட்டு, மேலே திருமண அரங்கிற்குச் சென்றோம். மணமேடையில் நீலாவின் அம்மாவும், அக்காவும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர். மாப்பிள்ளையை உட்கார வைத்து ஏதோ சடங்குகள் செய்து கொண்டிருந்தனர்.

நாங்கள் நாற்காலிகளில் அமர்ந்தோம். சந்திரா டீச்சர் என்னைப் பார்த்துவிட்டு வந்து பேசினாள். என் காதில் கிசுகிசுப்பாக, "உங்க வொய்ஃபுக்கு, உங்க லவ் மேட்டர் தெரியுமா?" என்றாள்.

"தெரியாது... தெரியாது...!" என்றேன் வேகமாக.

சந்திரா டீச்சர் சென்றவுடன், "என்ன சொன்னாங்க ரகசியமா?" என்றாள் என் மனைவி. "ஸ்கூல் மேட்டர் ஒண்ணு" என்று கூறிவிட்டு மேடையைக் கவனித்தேன்.

நானும், நீலாவும் எங்கள் திருமணம் குறித்துப் பேசிக் கொண்டது ஞாபகத்திற்கு வந்தது.

மாப்பிள்ளை எழுந்து செல்ல, நீலா திருமண கூறைப்புடைவையுடன் வந்து, சபைக்கு வணக்கம் சொன்னாள்.

"யாருக்குப்பா கல்யாணம்?" என்றான் என் மூன்று வயது மகன் மழலைக் குரலில்.

"பெரிய மனுஷர் கேக்குறாருல்ல... சொல்லுங்க" என்றாள் என் மனைவி சிரிப்புடன்.

என் மடியில் உட்கார்ந்திருந்த மகனை இறுக்க அணைத்தபடி, "பொண்ணு... ஒரு காலத்துல அப்பாவோட வேலை செஞ்ச டீச்சர்" என்றேன்.

"டீச்சரா? அடிப்பாங்களாப்பா?"

"ம்... சில சமயம் அடிப்பாங்க" என்றேன் நீலா என்னைவிட்டு விலகிக் கொண்டதை நினைத்தபடி.

"வலிக்குமா?"

"ரொம்ப வலிக்கும்" என்றேன்.

சில நிமிடங்களில், என்னோடு வாழப் போகும் வாழ்க்கை குறித்து, ஆயிரமாயிரம் கனவுகள் கண்ட, நீலாவின் மாப்பிள்ளை தாலி கட்ட... மரணம் மட்டுமே எங்களைப் பிரிக்க முடியும் என்று நினைத்துக் கொண்டிருந்த நான், என் மனைவியுடன் சேர்ந்து அட்சதைத் தூவினேன்.

இருநூறு ரூபாய் மொய் எழுதிவிட்டு, உடனே கிளம்பினோம்.

மண்டபத்தை விட்டு வெளியே வந்த பொழுது,

'நீங்க இல்லன்னா எனக்குப் பைத்தியம் பிடிச்சிடும் பாலு". " நீ இல்லன்னா நான் செத்துடுவேன் நீலா" என்று ஒருநாள் நாங்கள் பேசிக் கொண்டது ஞாபகத்திற்கு வந்தது. நான் சாகவும் இல்லை. நீலாவுக்குப் பைத்தியம் பிடிக்கவும் இல்லை.

அருகில் வந்த என் மனைவி, "இந்த ஊர்ல எல்லாம் இருபது, அம்பதுதானே மொய் எழுதுவாங்க. நீங்க இருநூறு ரூபா மொய் எழுதியிருக்கீங்க?" என்றாள்.



"ரொம்ப விலையா இருக்கே! இந்த அலாரம் டைம் பீஸ்ல அப்படி என்ன விசேஷம்..?"

"அஞ்சு நிமிஷ இடைவெளி விட்டு ரெண்டு தடவை அலாரம் அடிக்கும்... அப்படியும் எழுந்திருக்காட்டி, 'எழுந்திருடா சோமாறி'ன்னு நாலு வீட்டுக்குக் கேட்கும்படி கத்தும்!


- எம்.ஆர். மூர்த்தி

மனத்தைத் தொடும் ஒரு ப்ளாஷ்பேக் காட்சியை வைத்துக் கொண்டு ஒரு படத்தை நிரப்பினால் எப்படியிருக்கும்? திவான் மாதிரி இருக்கும்!

தலைமுறைகளாகப் பெண் குழந்தை பிறக்காத ஒரு செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறக்கும் ஷர்மிலி, கல்யாண நிச்சயதார்த்தம் முடிந்தபிறகு தமது வீட்டுக் கார் டிரைவருடன் (காதல்?) சென்னைக்கு ஓடி வருகிறார். வந்த இடத்தில் ஷர்மிலியின் சித்தப்பாக்கள் கொன்று விடுவார்களோ என்று பயந்து, டிரைவர் எஸ்கேப் ஆக, ஷர்மிலியைக் காப்பாற்றும் பொறுப்பு பக்கத்து வீட்டிலிருக்கும் சரத்துக்கு வருகிறது. வருகிறதா? அவரை வீட்டில் கொண்டு போய் ஒப்படைக்க வருகிறார் சரத். வரும் வழியில் திருநெல்வேலியில் கார் டயர் பஞ்சராக அங்கே நடக்கும் களேபரத்தில் ப்ளாஷ்பேக்! இதற்கிடையில் கிரணுடன் காதல், வெளிநாட்டில் பாடல்!

துரைசிங்கம் கேரக்டரில் வரும் தாத்தா சரத்தின் மேனரிஸம், ஸ்டைல் நல்ல ரசனை! 'ஆண்டவனை இங்க வை: ஆணவத்தை அங்க வை' என்று பஞ்ச் டயலாக் பேசும் சரத்தின் கர்ஜனையும், பின்னணியில் 'சிங்கமடா' பாடலும் சீட் நுனிக்கு வர வைக்கிறது. ஆனால் இந்த டெம்போவை இத்தனைச் சண்டை காட்சிகள் வைத்து வீணடித்திருக்க வேண்டாம்.

ஊரிலுள்ள அத்தனை அரிவாள்களையும், மொத்தமாகப் படத்தில் காட்டிவிட வேண்டுமென்று இயக்குனர் சபதம் எடுத்திருந்தாரோ என்னவோ? அவ்வளவும் ரத்



# அலாவுதீன்



பெரிய படிகளில் ஏறி நின்று 'அப்பா...' என்று பிரபுதேவா கத்த, குப்பத்திலிருந்து நூறு அப்பாக்கள் திரண்டு வருவதும், அப்படியே 'அம்மா'... 'தம்பி' என்றழைக்க, 'ஆஹா அட்டகாசமான படம் போலிருக்கே' என்று நிமிர்ந்து உட்கார்ந்தால் பழைய சுக்குத் தண்ணியை மீண்டும் சுட வைத்துத் தந்த மாதிரி சொய்ங்...!

அலாவுதீனும், அற்புத விளக்கும் படம் பார்த்துவிட்டு வரும் வழியில் அனாதையாக கிடக்கிறது ஒரு குழந்தை (பிரபுதேவா). குப்பத்தைச் சேர்ந்த மக்கள் 'அலாவுதீன்' என்று பெயரிட்டு தங்கள் குழந்தையாக வளர்க்கிறார்கள். அந்த மக்களின் வாழ்வை உயர்த்த கொள்ளையடிக்கப் போகிறார் பிரபுதேவா! அதற்கு அரசியல்வாதி

# திவான்



தம்!

கொடூர வில்லனாக வரும் அந்த ஆந்திரக்காரர் உச்சஸ்தாயியில் கத்தி, நமது காது சவ்வைக் கிழிய வைக்கிறார். ஜெயிலுக்குள் துரைசிங்கத்தின் சமாதியைக் காட்டும் சீரியஸ் காட்சியில் சிரிப்புத்தான் வருகிறது. இப்படியெல்லாமா கதை...!

கிரண்... ஸாரி! சொல்வதற்கு ஒன்றுமில்லை.வடிவேலுவின் 'சிக்கன் 65' காமெடி சிரிப்பூ! படத்தில் நன்றாக உழைத்திருப்பது ஒளிப்பதிவாளரும், சண்டை இயக்குனர் கனல் கண்ணனும்!

சரத்துக்கு ஒரு 'பாட்சா'வை ட்ரை பண்ணியிருக்கிறார்கள். பாட்சா பலிக்கவில்லை!

—மொக்க ராசு

● ஆவரேஜ்

ரகுவரனின் (இவர் சி.எம்மா? அமைச்சரா? எம்.எல்.ஏவா?) வீட்டைக் குறி வைக்கிறார். உள்ளே போனால் ரகுவரன் ஒருவரைக் கொலை செய்ய, தமது கட்டை விரலும் துண்டாகிவிடுகிறது. பிரபுதேவா அதை 'லபக்'கிக் கொண்டு பணம் பண்ண நினைப்பது சூப்பர் ஐடியா! ஆனால் கொலையை ஆக்ஸிடண்டாக்கி கதையை முடித்த பின்பு கட்டை விரலுக்காக அவர் அல்லாடுவது என்ன லாஜிக்?

பிரபுதேவா ஒவ்வொரு முறையும் கொள்ளையடித்துவிட்டு மசூதி, சர்ச், கோயில் என்று மறையும்போது 'தமிழ்நாட்டுல மதமாற்றத் தடை சட்டம் இருக்கிறது அவனுக்குத் தெரியலை போலிருக்கு' என்ற நையாண்டியில் மணிவண்ணன் நச்!

மணிவண்ணனின் மகளாக வரும் ஆஷிமா நன்றாக ஆடுகிறார், பாடுகிறார், காதலிக்கிறார். (தமிழ்ப்படத்தில் நடிகைகளுக்கு வேறென்ன வேலை?)

டாலரை வைத்துக்கொண்டு இறுதியில் தமது மகனை அடையாளம் காணும் ரகுவரன் நெகிழ வைக்கிறார். நிறைய புது விஷயங்களைத் திணிக்க நினைத்திருக்கும் இயக்குனர், கறுப்பு வெள்ளைக் காலத்து டாலர் விஷயத்துக்குப் பதில் வேறு யோசித்திருக்கலாம்.

மணிசர்மாவின் இசையில் இரண்டு பாடல்கள் தாளம் போட வைக்கின்றன.

அற்புத விளக்கைத் தேய்தேயென்று தேய்த்திருக்கிறார்கள். பூதத்துக்குப் பதில் புகை மட்டுமே வந்திருக்கிறது!

# துளித் துளியாய்...!




* வனிதா மோகன்

பதினைந்து லட்சம் மக்கள் தொகை கொண்ட கோவையில், பெரும்பாலான வர்களுக்கு அது ஒரு சுவாரஸ்யமான படம்! ஆனால் கோவையை இரத்தமும் சதையுமாய் நேசித்து வந்த மண்ணின் மைந்தர்களுக்கு, மகிழ்ச்சிக்குப் பதிலாய் அதிர்ச்சியை உண்டு பண்ணிய படம். கோவை மாநகரத்தை ஒரு பறவைப் பார்வையாக இந்தியத் தொலை யுணர்வு செயற்கைகோள் எடுத்த படம் அது. மேற்குத் தொடர்ச்சி மலைகளும், தொழிலகக் கட்டடங் களுமாய்த் தெரிந்த மாநகரப் படத்தில், சின்னச் சின்ன கடல்கள் போலக் காட்சி தரும் எட்டு மெகா குளங்கள், இருபத்தெட்டு நடுத்தரக் குளங்கள் உட்பட எதையுமே காணவில்லை என்றால், பதறாமல் என்ன செய்வார்கள்? மாநகர எல்லைக் குள்ளேயே அமைந்திருந்த இந்தக் குளங்களைத் தேடிப் போன பலருக்கும் பேரதிர்ச்சி!

குளங்கள் அனைத்தும் அடர்ந்த காடுகளாய் அடையாளம் கொண்டிருந்தன. தண்ணீரைத் தேக்கி வைக்க வேண்டிய மடிகளில் வேலி காத்தான் முட்செடிகள், கருவேல முள் மரங்கள், காட்டாமணக்குச் செடிப் புதர்கள். அத் தனைக் குளங்களும் மண் மேடுகளாகப் போய்விட்டிருந்தன. பெரிய பரப்பளவில் மழைக் காலங் களில் வந்து சேரும் பெரு வெள்ளத்தைத் தேக்க முடி யாத துக்கத்தோடு, தூர்ந்து போய்க் கிடந்தன.

நொய்யல் நதியிலி ருந்து சித்திரச் சாவடி கால் வாய் வழியாகப் பிரிந்து ஓடி வரும் தண்ணீர், முதலில் கிருஷ்ணம்பதி குளத்தினை வந்தடையும். அங்கிருந்து சிறு கால்வாய் மூலமாக செல் வம்பதி குளத்துக்கும் முத்தண்ணன் குளத்துக்கும் (இரண்டும் அடுத்தடுத்து உள்ளன) வந்து சேரும். பின்னர் அங் கிருந்து செல்வ முத்தண்ணன் குளம், உக்கடம் பகுதியில் உள்ள பெரிய குளம், திருச்சி சாலையில் வாலாங் குளம், புகை வண்டிப் பாதைப் பிரிவில் சின்னக்குளம் வரை அடுத்தடுத்து நிரம்பும். குளங்கள் நிரம்பிய பின்னர் வானிலிருந்து பார்க்கையில், கோவை மாநகர் ஒரு 'ஜலதரங்க' மாலையாகக் காட்சி தரும். அது ஒரு காலம்.



* செப்பனிடப்படும் குளம்...

இத்தனைக் குளங்களுக்கும் புத்துயிரளிக்க பல கோடி ரூபாய் பணத்திற்கு எங்கே போவது? அங்கேதான் 'சிறுதுளி' பிறந்தது. டேர்ன் ஓவர் பார்த்து, நெட் பிராஃபிட் உயர்த்தி, கம்பெனி யின் பாலன்ஸ் ஷீட்டின் கிராஃப் கோடுகளைக் குப்புற விழாமல் பார்த்துக் கொண்டால் மட்



* செப்பனிடுவதற்கு முன் கிருஷ்ணம்பதி குளம்



• ரெடியாகும் கரை

டும் போதாது, என்பதை உணர்ந்த கோவைவாழ் தொழிலதிபர்கள் பலரும் இணைந்து 'சிறுதுளி'யைத் துவக்கினர்.

முதற் பணியாகக் கோவை மாநகர குளங்களைக் கவனத்தில் கொண்டது. நொய்யல் நதியிலிருந்து பிரியும் சித்திரச்சாவடி கால்வாய் சிதைந்து போயிருந்தது. கிருஷ்ணம்பதி குளம் வரை ஓடி வரும் அக் கால்வாயின் நீளம் பன்னிரெண்டு கி.மீ. முதலில் அதனைத் தூய்மைப் படுத்தி, தடங்கலின்றித் தண்ணீர் விரைந்து வருமாறு கால்வாயின் உட்பகுதி செப்பனிடப்பட்டது.

குளங்களைத் தூர்வாரும் பணிகளைத் தொடங்கியபோது, ஒருபுறம் ஒத்துழைப்பும் ஆதரவும் பெருகியதென்றால், மறுபுறம் "இதெல்லாம் நடக்கிற கதையா?" என்று நக்கலும் கிண்டலுமாய் வந்த இடையூறுகளும் ஏராளம்.

சிறு துளி அமைப்பானது 11.6.2003லிருந்து மூன்று மாதங்களுக்கு விரைந்து செயல்பட்டு, முதலில் மூன்று குளங்களைத் தூர்வாரி, ஆழப் படுத்தி, கரைகள் அமைத்து, சாதனை படைத்திருக்கிறது.

இந்தப் பணிகள் நிறைவடைந்ததும், சிறு துளியின் அடுத்த அதிரடி இலக்குகள் செல்வமுத்தண்ணன் குளம், பெரிய குளம், வாலாங் குளம், சின்னக் குளம் போன்றவை. குளங்கள் எல்லாவற்றையும் சீரமைக்க, சிறு துளி சுமார் மூன்று கோடி ரூபாய் வரை செலவழித்திருக்கிறது.

கோவைச் சிறப்பிதழ்

சிறுதுளியின் பின்னணியில் பல தொழிலதிபர்கள் கரங்களை இணைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றாலும், ஒரு வலுவான வளைக்கரத்தைப் பற்றித்தான் கோவையெங்கும் பேச்சு, அவர் வனிதா மோகன்!

பிரிமியர் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் அண்ட் கன்ட்ரோல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர். சிறுதுளி அமைப்பின் நிர்வாக அறங்காவலர். மேலும் பண்ணாரி அம்மன் சுகர்ஸின் எஸ்வி. பாலசுப்ரமணியம் தலைவராகவும், டிரஸ்டிகளாக டாக்டர் ஆர்.வி. ரமணி, ரவி சாம், என்.வி. நாகசுப்பிரமணியம், ஆரத்தி வரதராஜ், கனக்லால் அபாய்சந்த் ஆகியோரும் 'சிறுதுளி' அறக்கட்டளையில் பங்கேற்றுள்ளனர்.

"ஒரு சிறு துளி, பெரு வெள்ளமாய்ப் பெருக வேண்டும் என்கிற நோக்கில் துவங்கப்பட்டதே இந்த அமைப்பு. மாநகரின் நிலத்தடி நீர் வளத்தைப் பாதுகாப்பதுதான் எங்கள் கனவு. குளங்களின் கரையோரப் பகுதிகளில், அதிக அளவில் மரங்கள் நடும் திட்டமும் உள்ளது" என்கிறார் வனிதா மோகன்.

கட்டுரை, படங்கள்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

குழந்தைக்கு உடம்பு சரியில்லை என்றுதான் தாத்தா முதலில் நினைத்தார். பின்னே, ஒருநாள் தவறாமல் ஹோம் ஒர்க் என்கிற பெயரில் இம்போசிஷன் மாதிரி அல்லவா நூறு நூறு பக்கங்கள் எழுத வேண்டியிருக்கிறது? அதான் அலுப்பாகியிருப்பான் என்பது அவரது அனுமானம். வீட்டுக்கு வந்திருந்த சந்திரா டீச்சரிடம் கூட, இது குறித்த தமது விமர்சனங்களை எடுத்துச் சொல்லலாமா என்று யோசித்தார். குழந்தைகளின் அறிவு வளர்ச்சி என்பது எத்தனை பக்கங்கள் ஹோம் ஒர்க் செய்கிறார்கள் என்பதில் இல்லை. உலகெங்கும் கல்வித் திட்டங்களில் எத்தனையோ நவீனம் வந்துவிட்ட போதிலும், தெய்வத் தமிழ்நாட்டில்

# வல்லினம்



மட்டும் ஏன் இன்னும் பள்ளிப் பிள்ளைகளைப் பொதி சுமக்கும் கழுதைகளாகவே ஆசிரியர்கள் கருதும் வழக்கம் இருக்கிறது?

ஒருநாள் இரவு தொப்பையின் மேல் காலைப் போட்டுக் கொண்டு நிலா வெளிச்சத்தில் ஜக்கு, தன் பள்ளிக் கதையொன்றைத் தாத்தாவிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

அன்று அவன் வகுப்புக்கு அபூர்வமாகத் தலைமை ஆசிரியர் வந்திருந்தார். சந்திரா டீச்சர் அவரை வரவேற்று, தன் நாற்காலியில் உட்கார வைத்துவிட்டுத் தான் எழுந்து நின்று கொண்டார்.

ஜக்குவின் பள்ளிக்கூடத்துத் தலைமை ஆசிரியர், ஒரு தமிழ் ஆசிரியர், தப்பு, தப்பு. தமிழாசான். தமிழிலக்கணத்துக்கு ஸ்பெஷல் கிளாஸ் வைக்கிற அவருடன் பள்ளி மாணவர்கள் யாருக்குமே எப்போதும் நல்லுறவு இருந்ததில்லை.

தலைமை ஆசிரியர், தன் போதனைகளைத் தொடங்கினார். "மாணவர் சமுதாயம் இக் காலத்தில் தமிழ்ப் படிப்பதை ஒரு கீழான விஷயமாக எண்ணத் தொடங்கியிருக்கிறது. இதற்குப் பல பள்ளிகளும் ஒரு


காரணம். பெரும்பாலான பள்ளிக்கூடங்களில் தமிழ்ப்பாடங்களே இல்லை. இது நம் தாயைப் புறக்கணிப்பதற்கு ஒப்பாகும். என்னருமை மாணவச் செல்வங்களே, நீங்கள் தமிழ்ப்பாடங்களிலும் தீவிர ஆர்வமும் கவனமும் காட்ட வேண்டும்."

இவ்வாறு சொல்லிவிட்டு, பிரசித்தி பெற்ற 'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்கிற பாடலை வசன நடையில் உச்சரிக்கத் தொடங்கினார்.

தலைமை ஆசிரியர், பையன்களில் யார் யாருக்குத் தமிழில் ஆர்வம் அதிகமிருக்கிறது என்று சந்திரா டீச்சரிடம் கேட்டார். ஜக்கு உட்பட ஏழெட்டு பேரை டீச்சர் கையை உயர்த்தச் சொன்னதும், "அப்படியா? மெத்த மகிழ்ச்சி. மத்த மாணவர்களும் அதே ஆர்வத்தைத் தமிழ் மீது செலுத்தணும். தமிழ்ப் படிக்கறதைப் பெருமையா நினைக்கணும்" என்று சொன்னார்.

'அடக்கடவுளே, பாடம் படிப்பதில் பெருமை என்ன இருக்கிறது? அது கடமை அல்லவா' என்று ஜக்கு நினைத்தான். ஆனால் இன்னொரு ஆசிரியரான மாசிலாமணி வாத்தியார், ஆறாம் வகுப்பிலிருந்து வரலாறும் புவியியலும் போதிக்கிறவர். இந்தத் தமிழ்ப் பாடங்களும், வரலாறு புவியியலும், வாழ்க்கைக்கு உதவாது என்று சொல்லிவிட்டுத்தான் அக்பரின் அரசவைக்குள்ளேயே நுழைவார்.

தலைமை ஆசிரியர் ஓயாமல் தமிழ்ப் படிக்க வேண்டியதன் அவசியம் குறித்துச் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தவர், சற்று இடைவெளி விட்டு, "ஏதாவது சந்தேகம் இருந்தால் கேட்கலாம்" என்று அறிவித்து, வாயைத்



# 12

துடைத்துக் கொண்டார்.

ஜக்கு எழுந்து நின்று பக்கத்து கிளாஸில் மாசிலாமணி வாத்தியார் ஒவ்வொரு வகுப்பின் தொடக்கத்திலும் ஒலிபரப்புகிற அந்த விஷயத்தை எடுத்துக் கேட்டான். 'தமிழும் வரலாறும் புவியியலும் வாழ்க்கைக்கு உதவுமா?'

தலைமை ஆசிரியர் ஒருகணம் திடுக்கிட்டார். "உதவக்கூடியதுதான் பாடங்களாக இருக்கும்" என்று சொன்னார். மேலும் சில விஷயங்களும் சொன்னார்.

**பி**ற்பகல் மாசிலாமணி வாத்தியார் வகுப்புக்கு வந்தபோது நடந்த விஷயத்தை மாணவர்கள் சொன்னார்கள்.

அவர் சிரித்துவிட்டு "இன்னும் ஒரு வாரத்துக்கு இந்த ஸ்பெஷல் தமிழ் கிளாஸ் இருக்கும் பிள்ளைகளா! நிர்வாகத்துல நம்ம ஸ்கூலை மெட்ரிகுலேஷன் ஸ்கூலா மாத்த யோசிச்சிக்கிட்டிருக்காங்க. அப்படி மாத்தினா, உங்களுக்கு வேற ஹெட்மாஸ்டர் வந்துடுவார். நான் இருப்பேனாங்கறதும் சந்தேகம்" என்று சொன்னார்.

மெட்ரிகுலேஷன் பள்ளியின் பாடத்திட்டங்களால் மாணவர்களுக்கு என்னென்ன நன்மைகள் உண்டு என்றும் அவர் எடுத்துச் சொன்னார்.

யாருக்குமே அவர் சொன்னது புரியவில்லை. மெட்ரிகுலேஷன் என்றால் பாடங்கள் மாறுமா? வேறு புத்தகங்கள் வாங்க வேண்டுமா? இன்னும் கஷ்டமாக இருக்குமா?

**ஜ**க்கு, தாத்தாவிடம் கேட்டான்.

"இப்போ தினசரி அரைக்கிலோ புஸ்தகம் எடுத்துக்கிட்டுப் போறே இல்லே, பள்ளிக்கூடத்துக்கு? மெட்ரிகுலேஷன் ஆயிட்டா, ஒண்ணரைக் கிலோ எடுத்துக்கிட்டுப் போகணும். அதான் வித்தியாசம்" என்றார் தாத்தா.

"மெட்ரிகுலேஷன் ஆயிட்டா தமிழ்ப் பாடம் இருக்காதா தாத்தா?"

"இருக்கும். ஆனா ஆப்ஷனல். உனக்குத் தமிழ் வேணும்னா தமிழ். ஹிந்தி வேணும்னா ஹிந்தி. ரெண்டு சாய்ஸ் இருக்கும்."

"அட! நான் ரெண்டும் எடுத்துப்பேன்" என்றான் ஜக்கு.


"எங்கண்ணு" என்று அவன் கன்னத்தை வழித்து திருஷ்டி கழித்தார் அவர். அந்தத் தனியார் பள்ளி அடுத்த வருடமே மெட்ரிகுலேஷன் பாடத் திட்டங்களுக்கு மாறிவிட, கூடுதலான பாடங்கள், செலவு இரண்டையுமே சமாளிக்க வேண்டியதானது.

பாடத்திட்ட மாறுதல்களினால் ஒட்டு மொத்தப் பள்ளிக்கூடமே கொஞ்சம் தடுமாறிக் கொண்டிருந்தபோதும், ஜக்கு தன் பிரத்யேக முயற்சியாலும் கவனத்தாலும் சிரமமேதுமின்றிப் படிப்பைக் கையாண்டதை அவர் கூர்ந்து கவனித்தார். 'டியூஷன் வேண்டுமா' என்று குமார் கேட்டபோது 'வேண்டாம்' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டு, சக மாணவர்களை வீட்டுக்கு அழைத்து வந்து தனக்குப் புரிந்ததைச் சொல்லிக் கொடுக்கிற மேதமை அவனுக்கு இருப்பதை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

**அ**ந்த ஜக்குவா வகுப்பில் விட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்? ஆர்வமின்றி எதையோ சிந்தித்துக் கொண்டிருக்கிறான்? பிரமை கொண்டவன் போல் செயலற்றிருக்கிறான்? என்னவென்று கேட்பது? எப்படி இந்தப் பிரச்னையைத் தீர்ப்பது?

தாத்தாவுக்குக் கவலையாக இருந்தது. அவனைக் கூப்பிட்டுத் தன் பக்கத்தில் உட்கார வைத்துத் தலையை வருடினார். சில வினாடிகள் பொறுமையாக இருந்த ஜக்கு, அவர் ஆரம்பிப்பதற்கு முன்னமே முந்திக் கொண்டு, "எனக்கு ஒண்ணும் இல்லே

## மீண்டும் ஆனந்த்(தம்)!



கடந்த இரண்டு ஆண்டுகளாக கல்யாண மண்டபமாக செயல்பட்டு வந்த சென்னை ஆனந்த் தியேட்டர் மறுபடி தியேட்டராகியிருக்கிறது. ஆனந்த் திரையரங்கை உருவாக்கிய ஜி. உமாபதியின் மகன் யு. கருணாகரனைச் சந்தித்தபோது அவர் பல சுவையான விஷயங்களைப் பகிர்ந்து கொண்டார்.

"அப்பா, ஆனந்த் தியேட்டர் கட்ட அமெரிக்காவின் பிரபல எம்.ஜி.எம். நிறுவனம் நிதி உதவி செய்ததால், அவர்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, அவர்கள் தயாரித்த படங்களைத் தொடர்ந்து திரையிட்டோம். அந்தக் காலத்தில் ஒரு வருடத்தில் வாரம் ஒன்று என்று 52 எம்.ஜி.எம் படங்களைத்' திரையிட்டது


பெரிய சாதனை.

காமராஜர், அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர், சிவாஜி என்று பலரும் இங்கே குடும்பத்துடன் வந்து படம் பார்த்திருக்கிறார்கள். சொல்லப் போனால், தியேட்டருக்கு அடிக்கல் நாட்டியதும், திறந்து வைத்ததும் காமராஜ்தான்.

"டீவி சானல்களின் பெருக்கத்தால், சினிமா பார்க்க வரும் ரசிகர்கள் குறையத் தொடங்கியதும், தியேட்டரை நிர்வகிப்பதே சிரமமாகிவிட்டது. மாசம் கரண்ட் பில் ஒன்றரை லட்சம் ரூபாய் வரும். தவிர மற்ற பராமரிப்புச் செலவுகள், ஊழியர் சம்பளம், தியேட்டர் நடத்துவது லாபகரமானதாக இல்லாமல் போகவே, தியேட்டரைக் கல்யாண மண்டபமாக்கிவிட்டோம்.

"சமீபத்தில் அமெரிக்கா போயிருந்தபோது, அங்குள்ள தியேட்டர் வளாகங்களில் சினிமா தவிர மக்களுக்குச் சுவாரசியமான பல விஷயங்களும் இருப்பதைப் பார்த்தேன். நாமும் அதுபோல முயற்சி செய்தால் என்ன என்ற எண்ணம் வந்தது. அந்த முயற்சியில் கல்யாண மண்டபத்தை மறுபடி தியேட்டர் ஆக்கிவிட முடிவு செய்தோம்!"

- மௌலி




தாத்தா. டீச்சர்தான் என்னமோ கம்ப்ளைண்ட் பண்ணியிருக்காங்க" என்று சொன்னான்.

"டீச்சர் கெடக்கா ஜக்கு. நீ குட்பாய். அது எனக்குத் தெரியும். ஆனா சொல்லு, உடம்புக்கு என்னமாச்சும் பண்ணுதா? கிளாஸ்லே தலை வலிக்கறதா? சில சமயம் அப்படிக்கூட ஆகும். அடிக்கடி தலைவலி வரும். கண் டெஸ்ட் பண்ணி கண்ணாடி போட்டா சரியாயிடும்..."

இந்தத் தாத்தாவால் எப்படி இத்தனை எளிமையாக மட்டுமே யோசிக்க முடிகிறது? அவனுக்கு ஆச்சர்யமாக இருந்தது.

"ஐயே, அதெல்லாம் இல்லை தாத்தா. நான் சரியாத்தான் இருக்கேன்" என்றான் ஜக்கு.

"அது எனக்குத் தெரியறது. உங்க டீச்சருக்குத் தெரியலையே? பாரு, எங்கியோ போயிட்டிருந்தவ, வீடு தேடி வந்து சொல்லிட்டுப் போறா என்னமோ."

"குழந்தைகிட்ட என்ன வேண்டாத பேச்சு? பேப்பர் படிச்சு முடிஞ்சாச்சுன்னா எழுந்து குளிக்கப் போறது?" என்று உள்ளிருந்து குரல் வந்தது. பாட்டிதான். சமையலறையில் அவளது கைப்பக்குவத்தில் சேமியாப் பாயசம் மணக்க மணக்கத் தயாராகிக் கொண்டிருந்தது.

வெட்டிங் டே, புதிய புடைவையிலும் சேமியா பாயசத்திலும், ஒரு மணி நேர அலுவலக பர்மிஷனிலும், வருடம் தவறாமல் கொண்டாடப்படுகிற ஒரு சிறு பண்டிகை. நேரமிருந்தால் அம்மாவும் அப்பாவும் மாலையில் வரசித்தி விநாயகர் கோயிலுக்குப் போய்விட்டுப் பாதித் தேங்காய் மூடியுடன் திரும்பி வருவார்கள்.

வெட்டிங்டே என்பது சந்தோஷம். அப்பாவுக்கு மட்டுமில்லை. ஒட்டுமொத்த வீட்டுக்கே ஒரு காட்பரிஸ் அளவு சந்தோஷம்தான் என்றாலும், அதுவும் அவசியம். அந்த ஒரு தினத்தின் சந்தோஷம் வாரமெல்லாம் வீட்டில் பொலிந்து துலங்குவதை ஜக்கு கவனித்திருக்கிறான். அநாவசியமாக அந்த டைரி குறித்து இன்று பேசி எதற்கு அதைக் கெடுக்க வேண்டும்?

வேண்டாம் என்று குரங்கு எச்சரித்தது சரிதான் என்று அவனுக்குத் தோன்றியது. எத்தனைப் புத்திசாலிக் குரங்கு? தினசரி தயிர் சாதமும் குழம்பு சாதமும் வேளை தவறாமல் சாப்பிடும் இந்த வெங்கடாஜலபதி, ஒரு நாளாவது இப்படி புத்திசாலித்தனத்துடன் நடந்து கொண்டிருக்கிறதா என்று அவன் எண்ணினான். இன்றைக்கு குரங்குக்குத் தயிர்சாதம் போட வேண்டும் என்று எண்ணியபடி அவன் எழுந்தபோது, வெங்கடாஜலபதி 'வ்வ்வூவூவூஉவ்...' என்று எச்சரித்தது.

"ஆமா, இவருக்குத்தான் பெரிசா தெரிஞ்சுடுத்து- அது கெட்ட குரங்குன்னு... பொறாமை. மூடு வாயை, உம் பேச்சு இன்னைக்கு நான் கா" என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டு, குரங்கைத் தேடித் தோட்டத்துக்குள் போனான் ஜக்கு.

(தொடரும்)

# சப்பைத் தண்ணீர்?!



★ காலிக் குடத்துடன் காத்திருக்கும் கோவைப் பெண்கள்

★ மேயர் மலரவன்

கிராமங்களில், இது நல்ல தண்ணீர்க் கிணறு, இது உப்புத் தண்ணீர்க் கிணறு என்பார்கள். அதுபோல, கோவை மாநகர வீதிகளில் இது நல்ல தண்ணீர்க் குழாய், இது சப்பைத் தண்ணீர்க் குழாய் என்று பிரித்துக் கூறுகிறார்கள். இங்கு இரண்டு வகையான பைப் லைன்கள் இருப்பது மெகா ஆச்சரியம். ஒன்று நல்ல தண்ணீர் சுமந்து வரும் மாநகராட்சிக் குடிநீர்க் குழாய். மற்றொன்று மாநகரவாசிகள் குளிக்க, துணி துவைக்க என, புற உபயோகங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் போர்வெல் தண்ணீர். இதனை இங்கு ''சப்பைத் தண்ணீர்'' என்கின்றனர்.

இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வரைக்கும், மாநகராட்சிக் குழாய்களில் தினசரி குடிநீர் பெற்று வந்தவர்களுக்கு, தற்போது நான்கு நாட்களுக்கு ஒரு முறை மட்டுமே குடி தண்ணீர் கிடைத்து வருகிறது.

குடிநீர்ப் பஞ்சமே கண்டிராத கோவை மாநகர தாய்க்குலங்களை, பிளாஸ்டிக் குடங்களைச் சுமந்து ஊர் வலம் வர வைத்து விட்டது சமீபத்திய தண் ணீர்த் தட்டுப்பாடு. இது பற்றி என்ன சொல்கிறார் கோவை மேயர்?

''முன்பெல்லாம் குடிநீருக்குச் சிறுவாணியை மட்டுமே நம்பியிருந்தோம். இப்போது அத்திக்கடவுத் தண்ணீரும் ஆபத்துக்குக் கை கொடுத்து உதவுகிறது. இன்றைய குடிநீர்ப் பற்றாக்குறைக்கு, கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பருவ மழை முற்றிலும் தவறிப் போனதும் ஒரு முக்கியக் காரணம். சிறுவாணி, அத்திக்கடவு அணைகளிலிருந்து இன்டர்லிங்க் தண்ணீர் சப்ளை மூலமாக, கூடுதலாகப் பகிர்வு செய்து குடிநீர்த் தட்டுப்பாட்டினைத் தவிர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். மேலும் மாநகராட்சிக்கென நூற்றிப்பத்து கோடி ரூபாய்த் திட்டத்தில், தனியாக அத்திக்கடவிலிருந்து குடிநீர் கொண்டு வருவதற்கான செயல்திட்டம் ஒன்று, அரசின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இவை முழு வடிவம் பெற்று விட்டால் போதும். இப்பொழுது மட்டும் என்றில்லை, எதிர்வரும் இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் கோவை மாநகர மக்களின் குடிநீர்த் தேவைக்கு, பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பே வராது'' என அடித்துக் கூறுகிறார் கோவை மாநகரின் அ.தி.மு.க. மேயர் த.மலரவன்.

இருள்நீக்கியான்

குகனை வணங்குவோம்! கோடி சுகம் பெறுவோம்!!

செந்தமிழ் முருகன் கோயில் கொண்டுள்ள

# திருச்செந்தூரில் கந்த சஷ்டி பெருவிழாவில்

## முருகனடியார்களுக்கு, சஷ்டிக்கு மறுநாள் (31.10. 2003) அன்னதானம் செய்து செழிப்புடன் வாழ வாருங்கள் !

**பேரன்புடையீர் ! வணக்கம். அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.**

வேண்டுவோர்க்கு வேண்டியபடி அருளும் முருகப்பெருமான் அமர்ந்து ஆட்சி செய்யும் ஆறுபடை வீடுகளில் **இரண்டாவது படை வீடு** திருச்செந்தூராகும். சூரனை வதம் செய்த முருகன் சிவனை வழிபட்ட கடற்கரை ஸ்தலமான திருச்செந்தூரில் **கந்த சஷ்டி பெருவிழா** 25.10.2003. முதல் 30. 10. 2003. வரை சிறப்பாக நடைபெற உள்ளது. பேரின்பத்தை அள்ளித்தரும் **கந்த சஷ்டி திருநாள்** விரதங்களிலே உயர்வானதாக கருதப்படுகிறது. மரமாக மறைந்திருந்த சூரபத்மனை இரண்டாகப் பிளந்து ஒரு பகுதி சேவலாகவும், மறு பகுதி மயிலாகவும் ஆட்கொண்டு முறையே கொடியாகவும் , வாகனமாகவும் ஏற்றுக்கொண்ட பேரருள் நாள் **கந்த சஷ்டி திருநாள்** ஆகும்.

துஷ்ட சக்திகளை அளிக்கக்கூடிய நன்னாள் **கந்தசஷ்டி திருநாள்**. சஷ்டி என்றாலே பேரின்பம். துலாம் மாதமான ஐப்பசி மாத அமாவாசை திதியை அடுத்து வரும் பிரதமை திதியில் தொடங்கி ஆறு நாட்கள் உண்ணாவிரதமிருந்து சஷ்டி திதியில் கடல் நீரில் சட்கோணம் வரைந்து முருகப்பெருமானின் மூலமந்திரத்தை ஜபித்து திருமுருகனின் திருக்கல்யாணத் திருக்காட்சியைக் கண்டு விரதம் நிறைவடைந்ததும், மறுநாள் 31.10.2003 **ஏழாம் திருநாளன்று "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்"** என்ற தனி அமைப்பின் மூலம் திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்அருகில், சன்னதித் தெருவில் அமைந்துள்ள **ஸ்ரீ பாலாஜி திருமண மண்டபத்தில்** அன்னதானம் நடைபெற உள்ளது.

கடலலை தாலாட்டும் **திருச்செந்தூரில்** கந்த சஷ்டி விழாவின் போது சஷ்டி விரதமிருந்து எண்ணிய நலன் பெற்று புண்ணிய பலம் பெறும் முருகனடியார்களுக்கு அன்னதானம் செய்து அனைத்து வெற்றியும், வளமும் கிடைத்து கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக இருக்கும் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமியின் திருவருள் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டி அன்போடு அழைக்கிறோம். இந்த அன்னதானத் திருப்பணியில் முருகபக்தர்கள் பங்கேற்று தங்களால் இயன்ற நன்கொடை அனுப்பி உதவுமாறு வேண்டுகிறோம்.

**தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.**

- **ரூ.500- அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஆறு மாதத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.**
- **ரூ.1000- அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஒரு வருடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.**
- **ரூ.5000- அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஆறு வருடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.**

ரூ. 500, ரூ. 1000, ரூ. 5000 அனுப்பும் முருகபக்தர்களுக்கு திருச்செந்தூரில் பூஜிக்கப்பட்ட அருள்மிகு சுப்பிரமணிய சுவாமியின் வெள்ளி டாலரும், பிரசாதமும், வண்ணபடமும், சிறிய அளவில் கந்தர் சஷ்டி கவசம் புத்தகமும் அனுப்பிவைக்கப்படும்.

ரூ.5000 - அனுப்பும் அன்பர்களுக்கு, ஒவ்வொரு வருடமும் **திருச்செந்தூரில் கந்த சஷ்டி பெருவிழாவில் ஏழாம் திருநாளன்று அன்னதானம்** செய்து ஆறு வருடங்கள் **ஆன்மீகம் மாத இதழ்** தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் புனிதம் பெற வேண்டும் என்ற இறை சிந்தனையோடு ரூ. 5000 செலுத்துபவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள **அருணகிரிநாதர்** அருளிச் செய்த **"திருப்புகழ்"** நூலை அனுப்பி வைக்கிறோம். அன்னதானத்திற்கு நன்கொடையை அனுப்புவோர் தங்களுடைய வேண்டுதலையும், பிரார்த்தனையையும் தெரிவித்தால் அதற்கேற்ப நாங்கள் **திருச்செந்தூரில் அன்னதானம்** செய்கிறோம்.

எல்லோரும் எல்லாவளமும் பெறவேண்டும் என்ற இறை சிந்தனையோடு ஆறு ஆண்டுகளுக்கு மேலாக **காசி** , **இராமேஸ்வரம்**, **திரு அண்ணாமலை** ஆகிய புண்ணிய ஸ்தலங்களில் **அமாவாசை, பௌர்ணமி** நாட்களில் மாதா மாதம் நடைபெறும் அன்னதான திருப்பணிகளைத் தொடர்ந்து திருச்செந்தூரிலும் கந்த சஷ்டி பெருவிழாவின் போது அன்னதானத்திருப்பணி நடைபெறவிருக்கிறது.

இந்த அன்னதானத்திருப்பணி (திருக்கோயிலுக்கு உட்பட்டது அல்ல) ஆன்மீகம் இதழ் வாசகர்களுக்காகவும், அன்னதான சேவையில் கைங்கர்யத் தொண்டு புரிந்து வரும் அனைத்து அன்பர்களுக்காகவுமே நடத்தப்படுகிறது.

அன்னதான சேவையில் ஈடுபட விரும்பும் முருகபக்தர்கள் தங்கள் நன்கொடையை Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai - 4 என்ற பெயரில் Cheque / D. D/ M. O. மூலம் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி திருச்செந்தூர் ஸ்ரீ சுப்ரமணிய சுவாமியின் பேரருளைப் பெற அன்புடன் வேண்டுகிறோம்.



**நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு.**


Cheque / D. D/ M. O. அனுப்ப வேண்டிய முகவரி


## ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்

**SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd.)**

**68, Nadu Street,(Opp. Sri Kapaleeswarar Temple) Mylapore, Chennai - 600 004.**


**TEL : 2495 9302, Fax : 2461 6466. E-mail:siva siva @ vsnl.net**

ஸ்ரீ சுப்பிரமணியர் ஷட அக்ஷர சக்கரம்

கந்த சஷ்டியின் போது விரதமிருக்கும் அடியார்களுக்கு அமுதளித்து எல்லாவிதமான நலன்களும் அடைவோமாக


# நடக்கும் என்பார்; நடக்கும்!




**மேஷம்:** குருபலம் நிறைந்து இருப்பதால், குடும்ப சம்பந்தமான விஷயங்கள் தடையின்றி நடக்கும். உதார ணமாக சிக்கலின்றி கௌரவ ரேஷன் கார்டு கிடைத்து விடும். கலைத்துறையைச் சேர்ந்தவர்கள், முன்னணிக்கு உயர்வார்கள். அதிலும், பெண்களுக்கு, புகழ், பெயர், பாராட்டு கூடும். வெளி நாட்டு வர்த்தகம் அதிக லாபம் தரும். உங்கள் ராசிநாதன் செவ்வாய், 11ல் லாபஸ்தானத்தில் பலமாக உலவுவதால், தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும்.




**ரிஷபம்:** தமிழ்நாட்டுக் கோயில் யானைகளுக்கு அடித்த திடீர் யோகம் போல, ரிஷப ராசிக்காரர்களுக்கும் எதிர்பாராத அதிர்ஷ்டக் காற்று வீசும். ஒரு முக்கியமான விஷயம். இரண்டில் சனி சஞ்சாரம் என்பதால் பேச்சில் கடுமை இருக்கக் கூடாது. எல்லோருடனும் கிருஷ்ணா ஸ்வீட்ஸ் கோதுமை அல்வா மாதிரி நெய் வழுக்க இனிமையாகப் பேசுவது நல்லது. தொழில் நிமித்தமாக ஏதேனும் புது சரக்கு வாங்க நினைத்தால், அவசியம் ஈடுபடுங்கள். ஜெயம் உண்டாகும்.



**மிதுனம்:** தங்கத்தின் விலை கிடு கிடு விலையேற்றம்தான். அதனால் என்ன? மிதுன ராசிக்காரர்களின் கிரக சஞ்சாரப்படி, பொன், பொருள், ஆபரணச் சேர்க்கை உண்டாகும் என்ற நல்லதொரு பலன் தெரிகிறதே. உங்கள் ராசிநாதன் புதன் வக்கிரகதியாக சிம்மத்தில் 3ல் மறைந்து, குருபகவான், சூரியனுடன் சஞ்சாரம் என்பதால் அனுகூலமான சூழ்நிலை அமையும். தெளிவான மனநிலை இருக்கும். சட்டம், காவல், இராணுவம் துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றம் காண்பார்கள்.



**கடகம்:** புரட்டிப் போட்டு விடும் என்று எதிர்பார்த்த கூல்டிரிங்க்ஸ் விவகாரம் ரொம்பக் கூலாக அமுங்கிப் போன மாதிரி, உங்கள் உத்தியோகத்திலும் நடக்கவிருக்கிறது. 'செமத்தியான சிக்கலில் கொண்டு போய் விட்டுவிடுமோ?' என்று நீங்கள் பயந்த அலுவலக விவகாரங்கள், சுமுகமாக அடங்கிவிடும். இருந்தாலும் ஒரு எச்சரிக்கை. இதுவரை 11ல் இருந்து வந்த ராகு, 10ம் இடமும், கேது 4ம் இடமும் மாறுவதால், சக ஊழியர்களிடமும், உயர் அதிகாரிகளிடமும் இன்சொல் பேசி, உண்மையாக நடப்பது நல்லது.




**சிம்மம்:** சின்னதாய் 'ஹச்சு' போட்ட ஜலதோஷம்கூட எக்ஸ்-ரே, ஸ்கேன் என்று சகட்டு மேனிக்கு இழுத்து விடக் கூடிய சாத்தியக்கூறுகள் அமைந்திருப்பதால், ஆரோக்கிய விஷயத்தில் நீங்கள் அசால்டாக இருக்கவே கூடாது. வியாபார நிமித்தம் நீங்கள் போடும் சிறு திட்டங்களும் மெரீனா கடற்கரை போல திடீர் முக்கியத்துவம் பெறும். கடன் உதவி கிடைக்கும். தொழில் வளர்ச்சிக்கான உபகரணங்கள் தடங்கலின்றி வந்து சேரும்.




**கன்னி:** 3ல் இடம் பெற்றிருந்த கேதுவும், 9ல் உலவி வந்த ராகுவும் இடம் மாறுகிறார்கள் என்பது கொஞ்சம் கலக்கமான விஷயம்தான். ஆனால் கவலைப் படேல்! குரு பார்வை ராகுவுக்கு மிக அருமையாக இருப்பதால், நல்லதே நடக்கும். நண்பர்கள், உறவினர்கள் வலிய வந்து உதவுவார்கள். சுப காரிய முயற்சிகள் சுலபமாக நடந்தேறும். சொத்து விவகாரம் சுலபமாகப் பைசல் ஆகும். பெண்களுக்கு அதிர்ஷ்டமான வாரம்.


**அக்னிசர்மா பக்கம்**




**துலாம்:** 'சோ' என்று பொழிந்து ஆறு, குளங்களை நிரப்ப வேண்டிய பருவமழை, சும்மா அதிகாலையில் வாசல் நனைத்துவிட்டுப் போவது போல, உங்கள் பண வரவும் இருக்கும். குறிப்பாக சுய தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த அளவு லாபம் கிடைக்காது. ஆனால் கையிருப்பு குறையாமல் இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு என்ன? உற்சாகமான வாரம்தான்! சிலருக்கு வெளிநாட்டுக்குப் பயணம் போகும் வாய்ப்பும் அமையக் கூடும். மாணவர்களுக்கு, கடுமையான போட்டி நிலவும், சமாளிங்க!




நடிகர் விஜயகாந்துக்கு (துலாம்) லாபகரமான வாரமாக இல்லையாமே.



**விருச்சிகம்:** குடும்ப ஸ்தானத்தை, குரு பகவான் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறார். அதனால் சுப மங்கள காரியங்கள் கெட்டி மேளம் கொட்டும். குறிப்பாக கணவன் - மனைவி இடையே நிலவி வந்த விரோத மனப்பான்மை விலகி சுமுகமான உறவு ஏற்படும். தெய்வீகப் பிரார்த்தனை, குல தெய்வ வழிபாடு போன்றவை நிறைவேறி, மன அமைதி அளிக்கும். கூட்டுத் தொழிலில் சுமாரான வருவாய் இருக்கும். பிரபு தனவான்களின் ஆதரவு கிடைத்து, மேலும் உயர சான்ஸ் அடிக்கும்!




**தனுசு:** சிங்கிள் டீ கிடைக்குமா என்று தவித்துக் கொண்டிருப்பவனுக்கு, ஐந்து நட்சத்திர ஹோட்டல் அறுசுவை விருந்து கிடைத்தால், எப்படியோ அப்படி, பொருளாதார நிலையில் படு ஸ்பீடான உயர்வு ஏற்படும். குறிப்பாகப் பெண்களுக்கு மிக அதிர்ஷ்டமான வாரம். 'நினைச்சது நினைச்சபடி, மாப்பிள்ளை அமைஞ்சதடி' என்று கன்னிப் பெண்கள் சந்தோஷமாகப் பாடலாம். மாணவர்கள் எண்ணம் நிறைவேறும். அரசு; அரசியல் சம்பந்தப்பட்ட விஷயங்களில் புதிய திருப்பம் உண்டாகும்.



**மகரம்:** வேலையோ, சொந்தத் தொழிலோ ஒரு சென்டிமீட்டர் ஏறினால், ஒரு மீட்டர் சறுக்குது என்ற நிலையிலிருந்து இனி விடுதலை கிடைத்து விடும். சனி பகவான் 5ம் இடத்தில் பலம் பெற்று சஞ்சாரம் என்பதால் மறைமுக, நேர்முக எதிரிகள் மறைவார்கள். உத்தியோக விஷயத்திலும் உற்சாகமான சூழ்நிலையே உண்டாகும். உயரதிகாரிகளின் ஆதரவும் பாராட்டும் அமோகமாகக் கிடைக்கும். தொழிலைப் பொறுத்தவரை, ஆரோக்கியமான சூழ்நிலையே காணப்படுகிறது. தெய்வீக வழிபாடுகள் நன்மை தரும்.



**கும்பம்:** புதியவர்கள் அறிமுகமாவார்கள்; அதோடு, திட்டமிட்டபடி காரியங்கள் முடிக்க, விசுவாசமாய் உதவுவார்கள். ராசியில் செவ்வாய் அமர்ந்து குரு பார்வை ஏற்பட்டுள்ளதால், தெய்வ பலம் அதிகரிக்கும். இதனால் காரிய சித்தி ஏற்படும். செலவு ஒரு பக்கம் பெருகினாலும், பண வரவு அதற்கேற்ப உண்டாகி, வளம் கொழிக்கும். தோல், எண்ணெய், இயந்திரம் சம்பந்தமான தொழில் உபகரணங்கள் லாபம் தரும்.



**மீனம்:** சின்ன காரியம்தான் என்றாலும் 'சிக்' என்று நறுவிசாக முடித்து, மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். அந்த அளவுக்கு, உற்சாகமான மன நிலையும், திட்டமிட்டு காரியங்களை முடிக்கக்கூடிய திறனும் பெறுவீர்கள். எனவே உத்தியோகத்தில் சகல வகையிலும் முன்னேற்றம் உண்டாகும். சினிமா, எழுத்து, இசை போன்ற கலைத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு சுபிட்சமான காலம். வாகனம், போக்குவரத்து சாதனம் அதிக லாபம் தரும்.

**செப்டெம்பர் 10 முதல் 16 வரை**

# நரேன் பேட்டி - சென்ற வாரத் தொடர்ச்சி...

**F-1 உலக சாம்பியன்ஷிப் போட்டியில் எப்போது பங்கேற்கப் போகிறீர்கள்?**

அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளுக்குள் நுழைந்து விட வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறேன். கொஞ்சம் பொறுத்திருந்து பாருங்கள்!

**F-1 வெற்றிக்குப் பிறகு நரேனின் திட்டமென்ன? கோவையில் ஒரு ஆட்டோமொபைல் தொழிற்சாலை தொடங்குவதா?**

இல்லை. ஃபார்முலா கார் பந்தயங்களுக்கு இந்தியக் குழந்தைகளை சிறு வயது முதலே தயார் படுத்தப் போகிறேன். இதற்காக ஒரு சிறப்புப் பள்ளி தொடங்கும் எண்ணம் இருக்கிறது. கார்ப் பந்தயம் கரியராக இருந்தால் நிறையப் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. திறமையின் அடிப்படையில் கோடிக்கணக்கான ரூபாய்களை வருமானமாக ஈட்டுவதோடு, இந்தியாவுக்கும், தனக்கும் உலக அரங்கில் புகழையும் பெருமையையும் தேடிக் கொள்ள முடியும்!

**இந்த தூரத்தை அடைவதற்கு நீங்கள் ஏதேனும் தியாகம் செய்திருக்கிறீர்களா?**

ஆரம்பக் கட்ட தியாகங்கள் நிறைய. பதினான்கு வயதில் திடீரென்று ரேசிங் ஸ்கூலுக்குப் படிக்கப் போய் விட்டேன். புதிய நாடு, புதிய சூழல்! அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகளைப் பிரிந்து, ஒரு புதிய வாழ்க்கை. ஓராண்டுக் காலம் வரை நரகம் போல் தான் இருந்தது. ஆனால் மெல்ல மெல்ல என்னை மாற்றிக் கொண்டேன். தொடக்க காலத்தில் நான் செய்த சின்னச் சின்ன தியாகங்கள்தான் என்னை இத்தனை வேகமான உலகிற்கு கூட்டிக் கொண்டு வந்திருக்கின்றன.

**நரேன் பார்வையில் தோல்விகள்?**

தோல்விகள் என்னைப் பொறுத்தவரை உண்மையான தோழர்கள். நமது தவறுகளை இனம் காட்டும் கண்ணாடிகள். வெற்றியை நோக்கி நம்மை முடுக்கிவிடும் சிறந்த பயிற்சியாளர்! கடந்த 2001-ல் பங்கேற்ற ஃபார்முலா சீசனில் துக்ககரமான அனுபவங்களையும் அடிகளையும் சந்தித்தேன். ஆனால் ஒரு துளி கண்ணீர்கூட என் இமைகளுக்கு அடியில் எட்டிப் பார்த்ததில்லை.

**நரேன் பார்வையில் அஜீத்தின் ஃபார்முலா முயற்சி எப்படி?**

அஜீத் எனக்கு நெருங்கிய நண்பர். அவர் என்னிடம் சர்க்யூட் பற்றி அடிக்கடி கேட்டுத் தெரிந்து கொள்வார். சின்ன வயதில் ரேசிங் மீது அவருக்கு விருப்பம்



# "இந்தியாவில் கார் ஓட்ட மாட்டேன்!"

கோவைச் சிறப்பிதழ்

இருந்தும் வர முடியவில்லை. அதனால்தான் இப்போது வந்திருக்கிறார். F-3 தான் அவருடைய திட்டம், இலக்கு எல்லாம். இப்போதைக்கு அவருக்கு இது பொழுதுபோக்கு மட்டும்தான். ஏசியன் ரேசில் நன்றாக ஓட்டியிருக்கிறார். அவரது ஒரே பிரச்னை வயது. ஆனால் இவரைப் போன்ற சினிமாப் பிரபலங்கள் ஓட்ட வருவதன் மூலம் மோட்டார் ஸ்போர்ட்டுக்கு நல்ல விளம்பரம் கிடைக்கிறது. இதனால் இந்தத் துறையில் யாரெல்லாம் இருக்கிறார் என்று ரசிகர்கள் தேடுவதில், எங்களைப் போன்றவர்களுக்கு அறிமுகம் கிடைக்கிறது. நிஜ வாழ்க்கையிலும் அஜீத் ஹீரோவாக தன்னை நிரூபிக்க முயல்வதை கண்ணை மூடிக் கொண்டு அனைவருமே வரவேற்கலாம். ரேஸிங் என்றால் உயிருக்கே உத்தரவாதம் கிடையாதே!

**கோவையில் இருக்கும்போது காரை நீங்களே ஓட்டிச் செல்வதுண்டா?**

இந்தியாவில் நான் கடைசியாக 1998ல் ஓட்டினேன். கோவைதான் என்றில்லை. இந்தியாவில் எந்த மூலைக்குப் போனாலும் யாரிடமும் ரோடு சென்ஸே இல்லை. இந்தியச் சாலைகளில் ஓட்டுவதைவிட, ரேஸ் பண்ணுவதே பாதுகாப்பு.

**நரேனுக்கு வீடியோ கேம்ஸ் பொழுதுபோக்கு இல்லையா?**

ஆமாம்! ஆனால் அங்கேயும் F-1 ரேஸ் விளையாடத்தான் பிடிக்கும்! மைண்ட் கேம்ஸும் விளையாடுவேன். ஹாலிவுட் ஆக்ஷன் படங்கள் பார்க்கப் பிடிக்கும். சமீபத்தில் 'மேட்ரிக்ஸ் பார்ட் - 3' பார்த்தேன். சென்னையிலிருந்து நண்பர்கள் போன் செய்து சொல்லும் தமிழ்ப் படங்களைப் பார்ப்பதுண்டு. கடைசியாக 'காக்க காக்க' படத்தைப் பார்த்தேன். தமிழ் சினிமா புரொஃபொஷனலாகி விட்டது என்றே தோன்றுகிறது. அஜித், பிரசாந்த் படங்களைப் பார்ப்பதுண்டு. பிரசாந்த் எனக்கு நண்பரும்கூட. அடிக்கடி டெலிபோனில் பேசிக் கொள்வோம். எனக்கு விவேக்கின் காமெடி ரொம்பப் பிடிக்கும்.

**ஊர் ஊராகச் சுற்றுகிறீர்கள். உங்களது பெண் தோழிகள் பற்றிச் சொல்லுங்களேன்?**

இருந்தால்தானே சொல்வதற்கு? நான் படித்தது வெளிநாடு என்றாலும் என்னை தென்னிந்திய வளர்ப்பு முறையில்தான் உருவாக்கியிருக்கிறார்கள். அதற்காக எனது பெற்றோருக்கு நன்றி சொல்ல வேண்டும். ஒருபோதும் பெண்களிடம் எல்லையைத் தாண்ட விரும்பியதில்லை.

**காதலியிடமும் நரேன் ரொம்ப நல்லப் பையன்தானா?**

இல்லாத காதலியைப் பற்றி எனக்கு ஏன் கற்பனையை வளர்த்து விடுகிறீர்கள்... *(வெட்கமாய்ச் சிரித்துக் கொண்டே)*

**சரி போகட்டும்! நீங்கள் காதல் கல்யாணம் செய்து கொள்ள விரும்பினால், உங்களது பெற்றோரின் மனநிலை என்னவாக இருக்கும்?**


நிச்சயம் ஏற்றுக் கொள்வார்கள்! அவர்கள் காதலுக்கு எதிரியல்ல!

**இன்றைய இளைஞர்களுக்கு நீங்கள் தரும் சக்ஸஸ் ஃபார்முலா?**

புதுமையைத் தேடுதல். அர்ப்பணிப்பு! உழைப்பு! வெற்றியின் மீது தளராத நம்பிக்கை! நான்கும் மிக முக்கியம். அப்பாவின் தொழில் இருக்கிறதே, எதற்கு ரிஸ்க் என்று நானும் போயிருக்கலாம். ஆனால் ரேசிங் எனக்குப் புதுமையாகவும், சவாலாகவும் தோன்றியது, F-1 வெற்றி பெற்ற பிறகும். அதுதான் எனக்கு எல்லாமும்!

நேர்காணல் : **ஆர்.சி. ஜெயந்தன்**

படங்கள் : **டிஜிட்டல் சண்முகம்**




முன்னொரு காலத்தில், (சத்தியமாய் நான் பிறப்பதற்கு முன்புதான்) வானொலி என்றொரு பத்திரிகை வெளி வந்தது. அதிலே வானொலி நிகழ்ச்சிகளின் அட்டவணை தவிர, கலைஞர்கள், நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள், இயக்குநர்களின் படங்களும் வெளியாகும். இன்று அந்த இதழ் வருவதில்லை. அன்றாடம் செய்தித்தாளில் வானொலி நிகழ்ச்சிநிரல் வந்து விடுகிறது. கிட்டத்தட்ட 'வானொலி'யை நினைவுபடுத்தும் ஓர் இதழை இன்று பாரதி புத்தகாலயம் வெளியிடுகிறது. 'புதிய புத்தகம் பேசுது' என்பது பத்திரிகையின் பெயர். வடிவமைப்பில் புதுமெருகு என்பது மருந்துக்கும் இல்லை... ஆனால் சமீபத்திய புதிய நூல்களை விமர்சித்து எழுத்தாளர்கள் எழுதிய கட்டுரைகள் இடம் பெறுகின்றன.

அனைத்துப் பதிப்பகங்களும் வினியோகிக்கும் நூல்களின் பட்டியலும் உண்டு... இருநூற்றைம்பது ரூபாய் செலுத்தி இந்த 'ஆலயத்தில்' உறுப்பினரானால், கல்கி நாவல்கள் முதல் கல்யாண்ஜி கவிதைகள் வரையிலான பலவித புத்தகங்களைச் சலுகை விலையில் பெறலாம். 'புத்தகம் பேசுது' இதழையும் இலவசமாகப் பெறலாம்.

'புத்தகம் பேசுது' உள்ளடக்கத்தை இன்னும் சுவைபட அமைக்கவும் வடிவமைக்கவும் சாத்தியக் கூறுகள் உண்டு. அங்கங்கே நடக்கும் வெளியீட்டு விழாக்கள், புத்தகக் கண்காட்சிகள் பற்றிய செய்தித் தொகுப்பு, படங்கள், இலக்கிய உலகில் இருக்கவே இருக்கின்ற/இல்லாத வீண் சண்டைகள் வம்பு, வழக்குகள், எல்லாம் சேர்த்தால் 'புத்தகம் பேசுது' புதிய அடைமொழிக்குத் தகுதியுறும்.

# அழகான கனவும் அவசரச் சட்டமும்!



• கே.எஸ். நாகராஜன்

இந்த வாரம் இரண்டு நாகராஜன்கள் பற்றிய செய்தி:

கே.எஸ். நாகராஜன். ஆறு வயதில் நாடக மேடை ஏறியவர். இன்று எண்பத்தாறு ஆன பிறகும் சளைக்காமல் நடிக்கிறார். தொலைக்காட்சி யுகத்திலும் விடாக்கண்டராக நாடகத்தைப் பற்றும் இவர் சாவி, மெரீனா, சுஜாதா போன்றோரின் நாடகங்களை மேடையேற்றியிருக்கிறார். கல்கி, தேவன், சாண்டில்யன் கதைகளை நாடகமாக்கியும் தந்ததுண்டு. 'வாஷிங்டனில் திருமணம்' நாடகத்தில் ஐம்பத்தைந்து பேரையும், குறிஞ்சி மலரில்



• கௌரவிக்கப்படுகிறார் எஸ். எஸ். நாகராஜன்

நூற்றிப்பதிமூன்று பேரையும் மேடையேற்றி மேய்த்துக் கட்டிய சாதனையாளர். நாற்பதுகளில், தலைமைச் செயலகத்தில் அமெச்சூர் நாடகக் குழு நடத்தி வந்தாராம்.

சமீபத்தில், பார்த்தசாரதி சுவாமி சபா இவருக்கு 'நாடகக் கலா சாரதி!' என்ற விருதைத் தந்திருக்கிறது.

பெருமை பெற்ற இன்னொரு நாகராஜன் வேளாண்மைப் பொருளாதார நிபுணர் - எஸ்.எஸ். நாகராஜன் (யெஸ், யெஸ், அவர் தான் எஸ்.எஸ். நாகராஜன் என்று சிலேடை பண்ணத் துடிக்கிறேன். 'ஆங்கிலமா, கையை ஒடிக்கிறேன்..' என்று பொங்கியெழும் வீரத் தமிழர்களுக்கு அஞ்சி அவ்வாறு எழுதாமல் விடுக்கிறேன்.)

நாகராஜன் தினமணியில் வேளாண் கட்டுரைகள் எழுதியவர், வானொலி - தொலைக்காட்சி இரண்டிலும் விவசாயிகளுடன் தோழமையோடு பேசி பயிர் வளர்த்தவர். சிம்சன் குழுமத்து ஜே பண்ணையின் துணைத் தலைவர். காய்க்கிற காலத்தில் அப்பண்ணையின் (கேளம்பாக்கத்தில் உள்ளது) மாந்தோப்புகளுக்குப் போனால், மரங்கள் எல்லாம் மணப்பெண்கள் போல் மாங்கனிகள் பூண்டு நிற்பதைக் காணலாம்.

தமது எழுபத்திரண்டாவது வயதில், இந்த இரண்டாம் நாகராஜன் கௌரவிக்கப் பட்டிருக்கிறார். இருபத்தெட்டு ஆண்டுகளாக தூர்தர்ஷனில் - வயலும் வாழ்வும் நிகழ்ச்சிகளைச் சிறப்பாக வழங்கியதற்காக.

கலாம் சொன்ன பேச்சை சமர்த்தாகக் கேட்டு இளமையில் கனவு கண்டால் முதுமையில் சாவகாசமாக விருது பெறலாம் போலும்!

**க**லாமுக்குத் தலை வணங்கி கனவு காண முயன்ற ஒரு மாணவனின் அனுபவத்தை இதோ கவிதையாக்கியிருக்கிறேன்:

பகல் கனவு காணப் பொழுதில்லை
பல் தேய்க்கும் முன்னரே பரபரப்பு
பேருந்தைத் தவறவிட்டால் பெரிய பிரச்னை
பிட்ஸாவுக்குச் சேர்த்து வைத்த பணத்தை
பகிர்வு ஆட்டோவுக்கு அழ வேண்டும்
கிடக்கட்டும் கனவுகள்
பிற்பகலில் பார்க்கலாம்...
பேராசிரியர் பிமராவ்
பொருளாதார சூத்திரங்கள் போதிக்க,
சுகமான அரைத்தூக்கம் தழுவும்...
அப்போது,
சுருட்டி சக்கத்தில் செருகலாம் உலகை
அப்பா, அம்மா, அத்தை, பாட்டி...
இன்னும் அடக்குமுறை அடாவடி
அம்மான்மார்
அனைவர்க்கும் அல்வா கொடுத்து
அழகான பெண்ணுடன் சந்திரப் பயணம்
வாஜ்பாயே சொல்லி விட்டார் -
இரண்டாயிரத்தெட்டை இன்றே இழுத்து
வந்து—
"இன்னுமா பல் தேய்க்கறே...?




போதும் பகல் கனவு... பிழைக்கிற
வழியைப் பார்..."
- அப்பாவின் அதட்டல்

"ஒரு குடம் தண்ணியாவது பிடிச்சுக் கொடு
உன் பங்கு வரைக்கும்..."
- அம்மாவின் கெஞ்சல்
- கனவுகளுக்குத் தடை விதிக்கும்
அவசரச் சட்டங்கள்
ஆளுனர், ஜனாதிபதியின் அங்கீகாரம்
அவசியமில்லை அவற்றுக்கு.

- சுமி

# காதல் கோட்டை பாணியில் ஓர் இசை கலாட்டா!

**யா**ழ்தேவி! பெயரிலேயே இசைக்கு இடம் தந்திருக்கும் இவளை, இலங்கை மக்களுக்கு நிரம்பப் பிடிக்கும். காரணம், தமிழர், சிங்களர் என்று பகுத்துப் பார்க்கத் தெரியாத பிரஜைன் நிறப் பேரழகி! ஒரு தாய் போல தன் மக்களை மடியில் சுமந்து சென்றவள். இப்போதா முற்றிலுமாக மூச்சை நிறுத்திக் கொண்டு விட்டாள். ஆமாம்! பதினைந்து ஆண்டுகளுக்கு முன்புவரை, கொழும்புவிற்கும், யாழ்ப்பாணத்திற்குமிடையே உற்சாகமாய் ஓடிக் கொண்டிருந்த ரயில் வண்டிதான் இந்த யாழ்தேவி. இந்த ரயில் வந்துபோன இருப்புப்பாதை, 'செல்' விழுந்து சிதைந்து கிடக்கிறது. அதன் இனிய கூவலை, ஜோடிப்பேடுகளின் காதல் அழைப்பென்றுக் கருதி வந்த, வவுனியா வனத்தின் குயில்களும்கூட, ஏதோ புரிந்துவிட்டது போல் புலம் பெயர்ந்து போய்விட்டன.

கொழும்பு - யாழ் தேசிய நெடுஞ்சாலை இறந்துவிடப்பட்டு, அமைதி பூப்பூக்கும் இந்தத் தருணத்தில் அதைப் போலவே யாழ் தேவியையும் தாழ் திறந்துவிட மாட்டார்களா என்று தமிழ் மக்கள் கனத்த மனத்தோடு ஏங்கிக் கொண்டிருக்க, அந்தச் சோகத்தை தற்காலிகமாய் உடைத்து நொறுக்கியிருக்கிறது ஓர் இசைத் தொகுப்பு!

பத்து தமிழ்ப் பாடல்கள் அடங்கிய 'காதல் கடிதம்' என்ற அந்த இசைத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் ஒரு பாடல் 'யாழ் தேவியில் காதல் செய்தால்!'

இப்போது இலங்கை முழுவதும் இந்தப் பாடல்தான்.



* உதயா

ஈழத் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து கிடக்கும் எல்லா நாடுகளிலும் இந்தப் பாடலின் புகழ் பரவிவிட்டதோடு, ஆடியோ சந்தை அடியோடு வீழ்ந்துவிட்ட இந்த நாளில், வெளியிட்ட ஒரே மாதத்தில் உலகெங்கும் ஒரு லட்சம் சி.டி பிரதிகள் விற்றுத் தீர்ந்திருக்கின்றன.

அதிகாலை ஐந்து நாற்பத்தைந்து மணிக்கு கொழும்புவிலிருந்து புறப்படும் அந்த ரயில், பிற்பகல் இரண்டு முப்பது மணிக்கு யாழ்நகரை எட்டும். இதற்கிடையில் எந்தெந்த நிலையங்களில் நிற்கும்! யாரெல்லாம் பயணிக்கிறார்கள். உள்ளே என்னென்ன நடக்கும் என்று சின்னச் சின்ன காட்சிகளாய், பாடல் வரிகள் விரிய, இசையோ நம் கையைப் பிடித்து யாழ்தேவியில் பயணித்து விட்டு வந்த உணர்வையே தந்து விடுகிறது. இந்த இசைத் வண்ணம் யாருடையது? அதுவும் ஒரு சுவாரஸ்யமான உண்மைக் கதை.



* வசீகரன்

**உ**தயா! பட்டுக் கோட்டையைச் சேர்ந்த சென்னைவாழ் தமிழ் இளைஞர். தனக்கான கிரீடம் தமிழ் சினிமாவில் காத்திருக்கிறது என்ற தளராத தன்னம்பிக்கையோடு பதினைந்து ஆண்டுகளாகப் போராடுகிறவர். இப்போது 'பீஷ்மர்' படத்திற்கு இசை அமைத்துக் கொண்டிருக்கிறார். ஆரம்பம் தொட்டு தமிழ் பாப் இசை

ஆல்பங்களில் அறியப்படுகிறவர். "பாப் இசை என்றால் அதிரடி இரைச்சலும், வார்த்தைகளை விழுங்கும் வாத்திய ஆதிக்கமும் என்றாகி விட்டது. எனது ஆர்மோனியம் உயிர்ப்பிக்கும் பாப் இசைப் பாடல்கள் அந்த ரகமல்ல. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 'என் இனிய காதலர்களே' என்ற எனது இசைத் தொகுப்பை ரெமி ரெக்கார்ட்ஸ் நிறுவனம் உலகெங்கும் வெளியிட்டது. வெளியீடு முடிந்து இரண்டு மாத காலம் கழித்து, நார்வே நாட்டிலிருந்து எனக்கொரு தொலைபேசி. இளமை தெரிக்கும் தமிழ்க் குரல்! "எனது பெயர் வசீகரன்! நானொரு இலங்கைத் தமிழன்! படித்துக் கொண்டே, பகுதி நேரம் பணி புரிகிறேன். உறவுகளைப் பிரிந்து, இங்கே இயந்திர கதியில் ஓடிக் கொண்டிருக்கிற எனக்கு, இசையும் கவிதையும்தான் உறவு. ஒரு மாதத்திற்கும் மேலாக உங்கள் இசைத் தொகுப்பைத் திரும்பத் திரும்பக் கேட்கிறேன். அதைப் புறக் கணிக்க முடிய வில்லை" என்றார். அந்த ரசிகனின் பாராட்டை இரண்டு நிமிடம் காது கொடுத்துக் கேட்டேன். இப்படித்தான் வசீகரன் எனக்கு அறிமுகமானார். அந்த இசைத் தொகுப்பிலும் எனது புகைப்படம் அச்சிடப்படாத நிலையில், இருவரும் பார்த்துக் கொள்ளாமலேயே நிபந்தனையற்ற நட்பை பரிமாறிக் கொண்டோம்.



"எங்கள் பேச்சில் இசையும், வசீகரன் பேச்சில் கவிதையும் கலந்திருந்ததில், நட்பின் வேர்கள் வளர ஆரம்பித்தன. ஒரு கட்டத்தில் - "நான் உங்கள் இசையில் ஒரு பாட்டெழுத ஆசைப்படுகிறேன்" என்றார். 'அதற்கான அவசியம் என்ன வந்தது?' என்றேன். "நானொரு பெண்ணை விரும்புகிறேன். அவளுக்குப் பரிசளிக்க வேண்டும்" என்றார். அது எனக்குப் பிடித்திருந்தது" என்கிறார் உதயா. இனி வசீகரன் பேசட்டும்.

"நான் ஐம்பது பாடல்களை அனுப்பி வைத்தேன். அதில் திருத்தம் தேவைப் படாத பாடல் ஒன்றைத் தேர்வு செய்து கொண்டு, எஞ்சிய அனைத்தையும் எனக்கே அனுப்பி வைத்தார். அடுத்த சில நாட்களில் ஒரு குறுவட்டு எனக்கு வந்து சேர்ந்தது. அதைக் கேட்டேன். "எழுது எழுது என் அன்பே! ஒரு கடிதம் எழுது என் அன்பே!" என்ற எனது வார்த்தைகள் மெட்டாகி, வாத்தியங்களின் வருடலோடு, ஒரு பாடலாய்க் கேட்டபோது புதிதாய்ப் பிறந்தது போல் மகிழ்ந்தேன். மணிக்கணக்கில் மறுபடி மறுபடி கேட்டுக் கொண்டிருந்தேன். என் காதல் நர்மதையோடு (இவரது காதலியின் பெயர் நர்மதா!) புலம் பெயர்ந்த வலிகளை மறந்து கை கோத்துத் திரிந்தேன். எனது காதலியைப் போலவே, கவிதையையும் நேசித்த எனக்கு, என் தமிழுக்குக் கிடைத்த அங்கீகாரமாக இந்த இசைப்பதிவு தோன்றியது. இந்த ஒரு பாடலை மட்டும் தனித்து விட்டுவிட மனமில்லாமல் இதனோடு ஏன் மேலும் ஐந்து பாடல்களைச் சேர்த்து, இசைத் தொகுப்பாய் வெளியிடக் கூடாது என்று உதயா அண்ணனிடம் கேட்டேன். கொஞ்சம் யோசித்தவர், என்னிடம் இசை இருக்கிறது! உன்னிடம் கவிதை இருக்கிறது. இருவருக்கும் பாலமாய் இணையம் இருக்கிறது. சரி என்று ஒப்புக்கொண்டார். இணையம் மூலமே பாடலையும், மெட்டுகளையும் பரிமாறிக் கொண்டோம். 'காதல் கடிதம் பிறந்தது!' என்கிறார் வசீகரன்.

இருவரும் எப்போது சந்தித்துக் கொண்டார்கள்? கடந்த ஜூலை முப்பதாம் தேதி நார்வே தலைநகர் ஆஸ்லோ நகரில். அன்று விமான நிலையத்தில் வந்திறங்கிய உதயாவை "எத்தனை நேரம் காத்திருக்கிறது?!" என்று நீண்ட நாள் பழகிய கடிந்து கொள்ளலோடு கட்டித் தழுவினார் வசீகரன். நார்வே தேசத்து திரைப்பட உலகின் ஜாம்பவான்கள் சூழ்ந்திருக்க, அன்றைய தினமே ஆஸ்லோ நகரின் பிரபல திரையரங்கான சொரியோ, மொரியோவில் கவிஞரும், இசைஞரும் கண் கலங்க, இசைத் தொகுப்பு வெளியிடப்பட்டது.

"அன்று ஒரு ரசிகராக, வசீகரன் தொலைபேசியில் என்னைத் தொடர்பு கொண்டபோது, அவரது அழைப்பை நான் மதித்து இரண்டு நிமிடங்கள் பேசியதன் வெளிப்பாடுதான் இந்த இசைத்தொகுப்பு" என்று சொல்லும் உதயா இன்னொரு ஏ.ஆர். ரஹ்மானாக வரக்கூடும்! யார் கண்டது?

- ஜெயந்த்

# பொள்ளாச்சி சந்தையிலே..!



• தியாகராஜன்

ஒருமுறை உள்ளே சென்று திரும்பினால் 'புள்ளைத்தாய்ச்சி' தவிர எல்லாவற்றையும் வாங்கி வந்து விடலாம் என்று வேடிக்கையாகக் குறிப்பிடுவார்கள்! அட ஆமாங்க. பொள்ளாச்சி சந்தைக்குத்தான் இந்தப் பெருமை!

ஆனால் இன்று?...


சாதாரண கிராமத்தின் சந்தடியற்ற வீதி வழியே நடந்து செல்லும் உணர்வு. வடிவ மற்றுச் சிதைந்து போய் மெலிந்து கிடக்கிறது சந்தை. வியாபாரத்துக்கு வழியின்றி பெரும்பாலான கடைகள் மூடு விழா கண்டுவிட்டன. திறந்திருக்கும் சில கடைகளின் வியாபாரிகள், 'இன்று என்ன படியோ அது கிடைக்கட்டும்' என்கிற ரீதியாக விலா எலும்பு தெரிய உடம்பில் சட்டையில்லாமல் அமர்ந்திருக்கின்றனர்.

பொள்ளாச்சி நகராட்சியின் பராமரிப்பில் உள்ளது இச்சந்தை. இதன் வியாபார வீழ்ச்சியைப் போலவே, சுற்றுப்புற பராமரிப்பும் அதல பாதாளத்திற்குப் போய் பல வருடங்கள் ஆகிவிட்டன. கவனிப்பாரற்ற சவலைப் பிள்ளையாய் ஒரு முறையான பெயர்ப் பலகை கூட எங்குமில்லை.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பாக வியாபாரிகள் 'மூன்று நாள் திருவிழா' எனக் குறிப்பிடுவார்கள் இச்சந்தையை. வாரத்துக்கு மூன்று நாள். செவ்வாய் மதியம் வந்து மலை போலக் குவியும். புதன், வியாழன் என இரண்டு நாளும் வெளியூர் வணிகர்களால் சரக்குகள் கொள்முதல் செய்யப்படும். வியாழன் இரவு வரைக்குமாக திமுதிமுத்துப் போய் விடும் ஜனக் கூட்டம். சரக்குகள் காலியாகி, வியாபாரிகளின் பைகள் நிரம்பியிருக்கும்.

பொள்ளாச்சி சந்தையை விட்டு பொழுது சாயும் நேரத்தில், நூற்றுக் கணக்கான அந்த கூண்டு வண்டிகள் வரிசையாய்க் கிளம்பிச் செல்வதைப் பார்க்க அத்தனை பிரமிப்பாய் இருக்குமாம். அப்பொழுதெல்லாம் கேரளப் பகுதிகளுக்கு இங்கிருந்துதான் பெருமளவு காய்கறிகள் வண்டி வண்டியாய்க் கொண்டு செல்லப்பட்டதாம்.

விருது நகர், ஸ்ரீவில்லிபுத்தூர், பாலக்



• வெறிச்சோடிக்கிடக்கும் சந்தை!

காடு, கோழிக்கோடு, மலப்புரம், ஆல்வாய், மஞ்சேரி ஆகிய பகுதிகளுக்கு இங்கிருந்து தான் சந்தைப் பொருட்கள் கொள்முதல் செய்து அனுப்பப்பட்டுள்ளன. இப்போது பக்கத்து ஊர் வியாபாரிகள் கூட சந்தைப் பக்கம் எட்டிப் பார்ப்பதில்லை என்கிறார் கள். நவீன தொழில் நுட்பங்கள் சந்தை வணிகத்தை வீழ்ச்சியடைய வைத்துள்ள தாகக் குறிப்பிடுகின்றனர்.

புறநகர்ப் பகுதிகள் வளர்ச்சி பெற்று வியாபாரக் கடைகளும் பெருகி விட்டன. கிராமங்களில் கூட ஒவ்வொரு வீட்டு வாசலுக்கும் தள்ளு வண்டி வியாபாரிகள் வந்து நிற்கிறார்கள்.

இதனால் சந்தைக்கு வந்து கொள்முதல் செய்யும் வியாபாரிகளும், சாமான்கள் வாங்கும் சாதாரண மனிதர்களும் கூட பெருமளவில் குறைந்து போய் விட்டதாகக் கூறுகிறார்கள், சந்தையில் எஞ்சியிருக்கும் வியாபாரிகள்!

“என் அப்பா ஐம்பது ஆண்டுகளாக இங்கு பழ கமிஷன் மண்டி நடத்தி வந்துள் ளார். அவருக்குப் பின் நான் மண்டி நடத்தி வருகிறேன். என் அப்பா காலத்தில் இருந்த வியாபாரம் இப்போது இல்லை. இன்று ஒரு சிறு நகரமாக இருந்தாலும் அந்தந்தப் பகுதியிலேயே பழச் சாறு நிலையங்கள் வந்து விட்டன. பழ உற்பத்தியாளர்களும் ஆங்காங்கே பிரிந்து சென்று பழங்களை விற்று விடுகின்றனர். முன்பெல்லாம் பழங்கள் குவிந்திருக்கும். ஈக்கள் மொய்த் திருக்கும். இப்போது ஈயோட்டக் கூட வழியின்றி அமர்ந்துள்ளோம்!” என்கிறார் பழ கமிஷன் மண்டி உரிமையாளரான என். தியாகராஜன்.

எல்லாவற்றுக்கும் இங்கு மவுசு குறைந்து விட்டாலும், மாட்டுச் சந்தை மட்டும் சுமாரான சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதுவும் செவ்வாய்க் கிழமை நடக்கும் விறுவிறுப்பான வியா பாரம், வியாழக்கிழமை அன்று சோம்பல் முறித்துக் கிடக்குமாம். காரணம், செவ்வாய்க்கிழமை மாட்டுச் சந்தையில் விற்பனையாகும் மாடுகள், கேரளாவுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. இவை யாவும் அடிமாடுகள். அந்த ஒரு நாள் விற்பனை இப்போதும் படு ஜோராக நடந்து வருகிறதாம். ஆனால் பசு வதைத் தடுப்புச் சட்டம் அமுலுக்கு வந்து விட்டால், இந்த ஒரு நாள் விற்பனையும் ‘அவுட்’ ஆகி விடும் என்கின்றனர். வியாழக்கிழமை மாட்டுச் சந்தை வியாபாரம், விவசாயப் பயன்பாடு மற்றும் வீடுகளில் கால்நடை வளர்ப்போர் என ஆக்கபூர்வமான பணிகளுக்கு உரிய தாகும். இந்த வகையிலான இரண்டாம் நாள் மாட்டுச் சந்தை வியாபாரம், முதல் நாளைக் காட்டிலும் படு மந்தமாகவே இருக்கும் என்கின்றனர்.

முன்னொரு காலத்தில் இந்தச் சந்தை யில் பாம்புத் தோல் கூட விற்பனைக்குக் கிடைத்துள்ளது. பாம்புகளைப் பிடிக்கக் கூடாதென சட்டம் வந்த பின்னர், பாம்புத் தோல் சந்தைக்குள் படையெடுக்கவில்லை. குதிரைகள் விற்பனை ஆகியுள்ளன. அவ் வளவு ஏன், யானைகளை ஏற்றி வந்து வரிசையாய் நிற்க வைத்து விற்பனை செய் துள்ளனர் கேரள யானை வியாபாரிகள். ஆனால் இன்றைக்கு... சிற்றெறும்பு ஒன்று சந்தையின் உள்ளே நுழைந்தால் போதும். அதனையும் அடையாளம் கண்டு வர வேற்குமளவுக்கு ஆசுவாசமாய் அமர்ந் துள்ளனர் சந்தை வியாபாரிகள்! பொல்லாத நேரம் பொள்ளாச்சி சந்தைக்கு!

கட்டுரை, படங்கள்: **திருநாவு**

• மாட்டு வியாபாரம் மட்டும்...



# ''ஏன் தம்பி இந்த வேலை?''



* படம்: யோகா

**சா**ப்பாட்டுக்குக் கஷ்டப்படாத, சௌகரியமான மிடில் கிளாஸ் குடும்பத்தில் பிறந்த நான், ஏதோ ஒரு வேகத்தில் வீட்டை விட்டுக் கிளம்பி விட்டேன். அதன்பின் ரொம்பவே கஷ்டப்பட்டேன்.

போதாக்குறைக்கு, போலீஸ்காரர்களைக் கண்டால் எனக்குப் பயம். அந்தக் காலத்தில், போலீஸ்காரர் ஒருவர் வீட்டுக்கு விசாரணை செய்ய வந்துவிட்டால், ரொம்ப அகௌரவமான விஷயமாய்க் கருதப்பட்டது. போலீஸ்காரர் என்றாலே, திருடர்களைத் துரத்திப் பிடித்து, அடித்து, உதைப்பவர் என்று ஒரு எண்ணம் என் போன்ற மாணவர்களுக்கு உண்டு. நானும் அதற்கு விதிவிலக்கு இல்லையே!

அதுவும், வீட்டை விட்டு, வெளியில் வந்த பின், தெருவில் யாராவது ஒரு போலீஸ்காரரைப் பார்த்துவிட்டால், என் அப்பா, மகனைக் காணோம் என்று போலீசில் புகார் கொடுத்ததன் பேரில், என்னைத் தேடிக் கண்டுபிடிக்கத்தான் அந்த போலீஸ்காரர் வந்திருக்கிறாரோ என்ற சந்தேகம் வந்துவிடும். நாம் அவர் கண்ணில் பட்டுவிட்டால், திருடர்களைப் பிடிப்பதுபோல நம்மையும் பிடித்து, போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்று அடித்து விடுவாரோ என்ற பயத்தில் உடம்பு வியர்த்துவிடும். எங்காவது பக்கத்தில் ஒளிந்துகொண்டு போலீஸ்காரர் தலை மறைந்தவுடன் வெளியில் வருவேன்.

போலீஸ்காரர் விஷயத்தில் பயம் ஒரு பக்கம். தெரிந்தவர்கள் யார் கண்ணிலும் பட்டுவிடக் கூடாதே என்ற பயம் இன்னொரு பக்கம். தெரிந்தவர்கள் யாராவது பார்த்துவிட்டு, வீட்டில் போய்ச் சொல்லிவிட்டால், அவர்கள் வந்து என்னைத் தேடிக் கண்டுபிடித்து விடுவார்களோ என்றும் பயந்தேன்.

உள்ளூர்க்காரர்கள் பலருக்கும் என் அப்பாவையும், என்னையும் தெரியும். ஆதலால் யாரிடமும் போய் வேலை கேட்க முடியாத சூழ்நிலை. விஷயத்தைச் சொல்லி வேலை கேட்டால், எனக்கு வேலை தருகிறார்களோ இல்லையோ, என் அப்பாவுக்கு என்னைப் பற்றிய தகவலைக் கொடுத்து விடுவார்கள். விஷயத்தை மறைத்துவிட்டு வேலை கேட்டால், ''உனக்கு ஏன் தம்பி இந்த வேலை எல்லாம்! படிச்சவங்க வீட்டுப் பையன்! நீயும் படிச்சிட்டுப் பெரிய வேலைக்குப் போ!'' என்று நான் கேட்காமலேயே அட்வைஸ் கொடுப்பார்கள்.

இதற்கிடையில், 'நம் பெற்றோர்களிடம்

என்ன வீராப்பு வேண்டிக்கிடக்கு? பேசாமல் வீட்டுக்குப் போய் விடலாமா? என்ற எண்ணம் தலை தூக்கும். 'ஊகூம்... அவசரப்பட்டு, அந்த முடிவை எடுத்து விடாதே! ஏன் சலிப்பு அடைகிறாய்? சொந்தக் காலில் நிற்காமல், வீடு திரும்பாதே!'' என்று என் தன்மானம் தடை போடும்.

இது போன்ற தர்மசங்கடமான நிலைமையிலிருந்து மீள வேண்டுமானால், இந்த ஊரைவிட்டுப் போய்விடுவதுதான் வழி என்று பட்டது. எங்கே போவது? என்பது அடுத்த கேள்வி. யோசித்த போது தான், ஹைதராபாத் சென்று, உறவினர் ஒருவர் தயவில் வேலை தேட முடிவு செய்தேன்.



• படம் நன்றி: ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்

## சிரித்து வாழ வேண்டும் 7

ஹைதராபாத் சென்றபோது அங்கு எனக்கு ஏற்பட்ட அனுபவங்களை நான் ஏற்கெனவே உங்களுடன் பகிர்ந்து கொண்டேனல்லவா? அந்த அனுபவங்களின் க்ளைமாக்ஸ் என்று, நான் ஒரு மில்லில் தினக் கூலியாக வேலை பார்த்ததையும், அங்கே எனக்கு ஒரு விபத்து நடந்ததையும் சொல்லலாம்.

அந்த நாட்களில், ஹைதராபாத் நகரத்தின் உசைன் சாகர் ஏரியை ஒட்டி இன்று இருப்பதுபோல அகலமான பாலம், சாலை வசதி எல்லாம் கிடையாது. சாதாரண ரோடுதான் இருக்கும். சில பகுதிகள், ஈ, காக்காய்கூட இல்லாமல் ரொம்ப வெறிச்சோடிக் கிடக்கும். நான் அதுமாதிரி பகுதிகளில் போய் உட்கார்ந்துகொண்டு ஏரியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பேன்.

நான் அங்கே போகிறபோது அடிக்கடி ஒரு முதியவரைச் சந்தித்தேன். கிழிந்த உடை, ஷேவிங் என்கிற வார்த்தையைக் கூடக் கேள்விப்படாத முகம். கையில் ஒரு பை. அதற்குள் ஒரு சோற்றுச்சட்டி. அதில் பழுப்பு நிறத்தில் சோறு. அந்தச் சோற்றின் மேல் ஒரு முட்டை. அவர் நான் வழக்கமாக உட்காரும் கல் பெஞ்சுக்கு அருகில் தான் உட்கார்ந்திருப்பார்.

சில நாட்களுக்குப் பின், இரண்டு பேரும் ஒருவரைப் பார்த்து ஒருவர் புன்னகை செய்து கொள்ளுவோம்.

ஒரு நாள், தன் சாப்பாட்டுச் சட்டியிலிருந்து எடுத்துச் சாப்பிட ஆரம்பித்த சமயம் நான் போனேன். ''சாப்பிடுறியா?'' என்றார். "நான் சாப்பிட்டுட்டேன்" என்று பொய் சொன்னேன். அவர் தன் சட்டியிலிருந்த முட்டையை எடுத்துக்காட்டி, உருது கலந்த இந்தியில் "முட்டை சாப்பிடு! உடம்புக்கு ரொம்ப நல்லது" என்றார். நான் சிரித்தேன். ''எதற்குச் சிரிக்கிறாய்?'' என்று கேட்டார். நான் சொன்ன காரணம்: ''நான் சுத்த சைவம்; முட்டை எல்லாம் சாப்பிட மாட்டேன்.'' நான் சொல்லாமல் விட்ட காரணம்: 'இங்கே சோற்றுக்கே வழியைக் காணோம். முட்டை கேக்குதோ?'

அவரிடம் கேட்டேன். ''நீங்க எங்கேயாவது வேலை பார்க்கறீங்களா?''

''ஆமாம்! இங்க ஒரு மில் இருக்குதில்ல. அதுலதான்!''

"என்ன சம்பளம் கிடைக்கும்?"

"தினமும் ஒண்ணே கால் ரூவா!"

''என்னையும் வேலைக்கு எடுத்துக்குவாங்களா?''

''ம். கேட்டுப் பாரு... வேலை குடுப்பாங்க'' என்றார்.

இடம் விசாரித்துக் கொண்டு, மறுநாள்





## புதிய புதுவைச் செய்தி!

பாண்டிச்சேரியில் உடல் ஊனமுற்ற ஓவியர்களுக்கு என்றே தனியாக ஒரு ஸ்டுடியோவும், ஆர்ட் காலரியும் முதலமைச்சர் ரங்கசாமி திறந்து வைத்திருக்கிறார். இதுபோல, வேறெந்த மாநிலத்திலும் இருப்பதாகத் தெரியவில்லை.

காலை இழந்தவர்களுக்கும், போலியோவால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இந்தியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா உட்பட ஒரு லட்சம் பேருக்கு, இலவசமாகச் செயற்கைக் கால்கள் வழங்கிய 'முக்தி' அமைப்புதான் ஆர்ட் காலரியையும் திறக்க உதவியிருக்கிறது.

உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்புப் பயிற்சி அளித்து, வேலை வாய்ப்புகளையும் வழங்கியிருக்கிறது 'முக்தி'. காஷ்மீர் முதல் கன்யாகுமரி வரை முக்தி, பயிலரங்குகள் நடத்தியிருக்கிறதாம்.

ஐந்து மீட்டர் நீள கான்வாஸில், இந்தியாவின் புகழ் பெற்ற ஓவியக் கலைஞர்கள் தீட்டியிருக்கும் பிரம்மாண்ட ஓவியம், பாண்டிச்சேரி கிளை 'முக்தி' அமைப்புக்காக ஏலத்துக்கு விடப்பட்டிருக்கிறது.

- சித்தார்த்

அந்த மில்லுக்குப் போனேன்.

நுழைவாயிலிலேயே நின்று கொண்டிருந்தேன். சிறிது நேரத்தில் ஒரு பிரம்மாண்டமான கார் வந்தது. நான் கார் வந்ததை கவனிக்கவில்லை என்பதால், சட்டென்று என்னை உரசினாற்போல பிரேக் போட்டு காரை நிறுத்தினார் காரின் டிரைவர்.

உள்ளே உட்கார்ந்திருந்தவர், "ஏ...க்யா பாத் ஹை" என்று கேட்க, நான் ஆங்கிலத்தில் "ஸாரி சார்! சொந்த ஊர் மெட்ராஸ். வேலை தேடி ஹைதராபாத் வந்திருக்கிறேன். எனக்கு ஏதாவது வேலை கொடுங்கள்" என்றேன்.

அவர் என்னைப் பார்த்து ஏதோ சொல்லி விட்டு, தம் காரில் புறப்பட்டுப் போய் விட்டார். அவர் என்ன சொன்னார் என்று எனக்கு முழுமையாகப் புரியவில்லை. என்னை மில் வேலைக்கு அழைத்து வந்த கிழிந்த உடை கிழவரைக் கேட்டேன். 'அவர்தான் இந்தக் கம்பெனியின் எம்.டி. அவரது ரூமுக்கு வந்து அவரைப் பார்க்கச் சொல்கிறார்' என்றார்.

அவரது அறைக்குப் போனேன். ஹைதராபாதில் தொழில் நடத்தும் தமிழர் அவர் என்பதால், எனக்கு உதவி செய்ய விரும்பினார். "ஆபீசில் வேலை ஏதும் காலியில்லை. தொழிற்சாலையில் முன்னூறு தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். நீயும் விரும்பினால் அவர்களில் ஒருவராக வேலை பார்" என்றார்.

"சரி! அதையும் தான் பார்த்து விடுவோமே!" என்று சம்மதம் சொல்லிவிட்டு, அவரது அறையை விட்டு வெளியே வந்தேன். வேலை கிடைக்க உதவிய கிழவனார் நின்று கொண்டிருந்தார். அவரோடு சென்று சூப்பர்வைசர் ஒருவரைப் பார்த்தேன். அவரும் நம் ஊர்க்காரர் என்பதால், அவர் தயவில் தினக்கூலியாக அந்த ஃபாக்டரியில் அவதாரம் எடுத்தேன்.

அந்த ஃபாக்டரியில் விதம் விதமான பருமன்களில், பல நூறு மீட்டர் நீளத்துக்குக் கேபிள்கள் இருக்கும். ஃபாக்டரி வளாகத்துக்குள்ளேயே, ஓர் இடத்திலிருந்து கேபிள்களை இன்னொரு இடத்துக்கு இழுத்துச் செல்ல வேண்டும். கேபிள்களின் முனைகளைச் சீவி, அதன் மீது காய்ச்சிய ஈயத்தை ஊற்ற வேண்டும். சிறு பல்ப் போன்ற உருவில் அது இறுகிய பின், சிறு பெட்டியைப் பொருத்தி, அதற்குள் வேறு உலோகத்தைக் காய்ச்சி ஊற்றி... ரொம்பக் கஷ்டமான வேலைதான். வேலைக் களைப்பு தெரியாமல் இருக்க, தொழிலாளர்கள் சேர்ந்து கோரஸ் பாடியபடி வேலை செய்வோம். இப்போது கூட, 'லஷ்கர் லச்சி' ஜவானு புட்டே ஐசா மாரே லகாரே லச்சி.. என்பது போன்ற அந்த வரிகள் எனக்கு நினைவில் இருக்கின்றன.

அது மட்டுமா? அங்கே நடந்த விபத்தும்தான் மறக்க முடியாத ஒன்று.

(சிரிப்பு தொடரும்)

# அப்படியென்ன திடீர்க் காதல்!

✉ சினேகா இது போலச் சிரித்துக்கொண்டு டைரக்ஷன் தொழிலைச் செய்தால் யூனிட்டில் யாராவது ஒழுங்காக வேலை செய்வார்களா என்ன?
ஈரோடு - 1, ரேவதிப்ரியன்.

✉ அட்டையில் பத்திரிகையின் பெயரை பச்சை நிறத்தில் போட்டு இருக்கிறீர்கள். மற்றும் 18, 26, 27, 66, 67, 70, 71, 74, 75 மேலும் பல பக்கங்களில் பச்சைக் கலரின் டாமினேஷன். பச்சை மீது அப்படி என்ன திடீர்க் காதல்?
சென்னை - 5, கே. கணேசன்.




✉ மணக்குள விநாயகரின் புகைப்படம் அற்புதமாயிருந்தது. அட்டையில் அந்தப் படத்தைப் போட்டு விநாயகர் சதுர்த்தியைச் சிறப்பித்திருக்கலாமே?
சென்னை - 91, பால. சூர்யா.

✉ நிலவி வரும் ஆணாதிக்கத்தை 'குரலிலே தெரியும்' கவிதையில் உலவ விட்டிருந்தார் கவிஞர் கந்தர்வன். அற்புதமாய் இருந்தது கவிதை.
மதுரை, என். பாலகிருஷ்ணன்.

✉ சாருகேசியின் 'சென்னையில் லாலு' கற்பனை, வயிறு குலுங்கச் சிரிக்க வைத்தது.
பொள்ளாச்சி, பொ. பொன்ராஜ் குமார்.


✉ தலையங்கம் மிகச் சரி. எண்ணிக்கையைக் காட்டி வென்று விட்டாலும், எழுப்பப்பட்ட வினாக்களுக்குப் பிரதமர் உட்பட யாரும் விடை தராதது உறுத்தலே!
பொன்மலை, ஆர். பிரகாஷ்.

✉ 31.08.03 இதழில் நல்லகண்ணு வரைந்தது 'கதறல் கடிதம்...!' மக்களின் மனம் நொந்த 'மன்றாடல் கடிதம்' வோட்டு போட்டோரின் 'ஓலமிடும் கடிதம்'! எதிர்க்கட்சி சார்ந்தோரின் 'எரிமலைக் கடிதம்', பதறி பரிதவிப்போரது 'பரிதாபக் கடிதம்'! சேருமிடம் சேர்ந்து விட்டால் 'சேவைக் கடிதம்'!... இப்படி பல் முகம் கொண்ட பாராட்டப் பட வேண்டிய (பார்க்கப்பட வேண்டிய) 'பத்ம ஸ்ரீ கடிதம்? நன்றிகள் நல்லகண்ணு ஐயா!
நாகமலை, ப.கா. மணிமொழியன்.

✉ ஓவியப்பதிவாளர் ராஜசேகர் மாணவராக இருந்தபோது 'கேமரா' என்ற கையெழுத்துப் பத்திரிகையை நடத்தியதாகக் குறிப்பிட்டிருந்ததைப் படித்தபோது, பழைய நினைவுகளில் ஆழ்ந்து போனேன். அப்போது அந்தப் பத்திரிகைக்கு நான் தான் ஓவியர். இப்போதும் கூட என்னிடம் அந்த 'கேமரா' பத்திரிகைகள் பத்திரமாக இருக்கின்றன!
மயிலாடுதுறை, சின்னஞ்சிறு கோபு.

✉ நல்லகண்ணுவின் கடிதம் கண்டேன். எளிய நடையில் சொல் அலங்காரம் இன்றி, ஆனால் மிக எதார்த்தமான மக்கள் மொழியில் கடிதம். அதேபொழுது கோபமும், கொந்தளிப்பும் கடிதத்தில் காணப்படுகின்றன. கடிதத்தைக் கவனமாக படித்து ஆக்கபூர்வமான முறையில் முதலமைச்சர் செயல்பட்டால் நல்லதுதானே!
வேலூர், சுகன்யா.

✉ 'பொடா' என்னும் 'ஏ.கே.47' வலது கையை அலங்கரிக்க... 'டெஸ்மா' என்னும் வெடிகுண்டு' இடதுகையை அழுத்த... தமிழக அரசின் நிலையை மகாராணி விக்டோரியாவுடன் ஒப்பிட்ட கார்ட்டூன் சிந்திக்க வைத்தது!
போடிநாயக்கனூர், எஸ்.எம். பாலசுப்ரமணியன்.


ஜல்லு மல்லு
-கதிர்
தனியா இங்க என்னடா பண்ணிக்கிட்டுருக்க...?
ஸ்ஸ்... சப்தம் போடாத, மியூசிக் கம்போஸ் பண்ணிக் கிட்டிருக்கேன்.
கம்போஸ் பண்றியா...? கீபோர்ட், ஹார்மோனியம் எதையும் காணோம்.
மக்கள் புதுசா எதிர்பாக்கறாங்க. அதான் காக்கா குரல்ல இருந்து புது டியூன் பண்ணி 'ஆல்பம்' ரிலீஸ் பண்ணப் போறேன்.
அடப்பாவி... அப்புறம்?
ஆல்பத்தோட டைட்டில் 'காக்கா காக்கா'
அதென்ன இரண்டு காக்கா...? அந்த இன்னொரு காக்கா நீயா?
ரீசென்டா ஹிட்டான படம் 'காக்க காக்க'. அதனால செண்டிமென்டா 'காக்கா காக்கா'ன்னு வெச்சிருக்கேன்.
ம்... 'காக்கா காக்கா' இரண்டு லட்சம் சி.டி, அஞ்சு லட்சம் காஸெட் வித்து... எனக்கு தேசிய விருது, அப்புறம் கிராமி அவார்ட்...
உன் கனவுக்கு டெயில் பீஸ் எழுதிக்கோ: 'காக்கா காக்கா' சகிக்கவில்லையே 'கேட்க கேட்க'ன்னு விமர்சகர் விமலாதித்தன்.....



CHAIRS
Rs.1000/- onwards
COMPUTER TABLES
Rs.1000/- onwards
ALMIRAHS
Rs.3000/- onwards
FILING CABINETS
Rs.3000/- onwards
SOFA SETS
Rs.7,500/- onwards
One Stop Shop for all your Furniture Needs
Sathya
Furniture World
Since 1968
Specialists in Custom Made Furniture
Mylapore :
24982930 / 24982931
Padi ( Anna Nagar West ) :
26544929 / 26545029
Velachery :
22551129
Coimbatore :
2452929 / 2452930
One of India's Biggest Furniture Showroom
Mylapore : Sathya Corporation, Old #70, R H Road, Ch - 4.
Padi (Anna Nagar) : DABC Bldg., 6, MTH Rd, (Opp to TVS, Padi), Ch - 50
Velachery : Paramount Park, 358, Velachery - Tambaram Main Road, ( Next to Vijayanagar Bus Terminus ), Ch - 42.
Coimbatore : 266, Mettupalayam Road, (Near Sai Baba Temple Bus Stop) Cbe - 43
KITCHEN CABINETS
Rs.25,000/- onwards
BEDROOM FURNITURE
Rs.15,000/- onwards
DINING SETS
Rs.2,300/- onwards
WORKSTATIONS
Rs.20,000/- onwards
CUPBOARDS
Rs.3,000/- onwards
Also Available
Institutional Furniture
Slotted Angle Racks
Hospital Furniture
Entertainment Sets
Recliner Chairs
Study Desks
Wardrobes
Diwans
OFFICE TABLES
Rs.2,000/- onwards

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka